விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005


இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/- மட்டுமே

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 சித்திரை 30 சனிக்கிழமை (13.05.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 145

## நத்தைபோல் நகரும் நல்லாட்சி

# அரசியல் தீர்வுக்கு இந்தியா அழுத்தம்

## த.தே.கூட்டமைப்பிடம் இந்.பிரதமர் உறுதி




(கொழும்பு)

நாட்டின் தற்போதைய அரசாங்கம் மிக மெதுவாகவே நகர்கின்றது என்பதை நாங்களும் உணர்கின்றோம் என தெரிவித்த இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி, அரசாங்கம் அரசியல் தீர்வு விடயத்தில் தாமதித்துக் கொண்டிருந்தால் சர்வதேசத்துடன் இணைந்து நாமும் அழுத்தங்களை கொடுப்போம் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

23ஆம் பக்கம் பார்க்க...

## முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்

## யாழ்.செம்மணியில் நேற்று ஆரம்பம்



23ஆம் பக்கம் பார்க்க...

## வடக்கு முதல்வரை எனக்குத் தெரியும்

### மைத்திரிக்கு மோடி பதில்

(கொழும்பு)

சர்வதேச வெசாக் தினத்தை ஆரம்பித்து வைப்பதற்காக இலங்கைக்கு வருகை தந்த இந்திய பிரதமர் நரேந் திர மோடிக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதி மாளிகையில் நேற்றுமுன்தினமிரவு இராப்போசன விருந்தளித்தார்.

இதில் ஜனாதிபதியுடன், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, சபாநாயகர், அமைச்சர்கள்

23ஆம் பக்கம் பார்க்க...

## நேற்று மாலை நரேந்திர மோடி இந்தியா திரும்பல்

(கொழும்பு)

இலங்கைக்கான இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை முடித்துக் கொண்ட இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இந்தியா சென்றுள்ளார்.

நேற்று மாலை கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் இறுதியாக த.தே.கூட்டமைப்புடனான சந்திப்பை முடித்துக் கொண்டு மோடி இந்தியா புறப்பட்டுச் சென்றுள்ளார்.

ஐக்கிய நாடுகள் வெசாக் தின நிகழ்வில் கலந்துகொள்

24ஆம் பக்கம் பார்க்க...

## பிக்கப் விபத்து இளைஞன் பலி




23ஆம் பக்கம் பார்க்க...

### மே-18

## நினைவேந்தலை குழப்பும் டெங்கு!

(கொழும்பு)

தேசிய டெங்கு ஒழிப்பு நாளாக இம்மாதம் 18ஆம், 19ஆம் திகதியை அரசாங்கம் அறிவித்துள்ளது.

தேசிய டெங்கு ஒழிப்பு நாள் என்பது பொலிஸாரையும் உள்ளடக்கியதாக, சுகாதாரப் பகுதியினர் வீடு வீடாகச் சென்று டெங்கு கட்டுப்பாட்டை மேற்கொள்வதாகும்.

மே 18 முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நாளாக இருப்பதனால், நினைவேந்தலை, குழப்பும் பொருட்டு மே 18ஐ

23ஆம் பக்கம் பார்க்க...

## திருக்குறளை தமிழில் கூறி அசத்திய மோடி

(ஹட்டன்)

சர்வதேச வெசாக் தினத்தை முன்னிட்டு இலங்கைக்கு விஜயம் செய்துள்ள இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி மலையகத்தில் தமிழ் மக்கள் முன்னிலையில் தமிழில் உரையாற்றி அனைவருடைய கவனத்தையும் ஈர்த்துள்ளார்.

ஹட்டன்-டிக்கோயா, கிளங்கன் வைத்தியசாலையை திறந்து வைத்து, நோர்வூட் மைதானத்தில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தமிழிலும் உரையாற்றியுள்ளார்.

முதலில் உங்களிடம்பேசக்கிடைத்த வாய்ப்பினை பெரிய பாக்கியமாக நினை

24ஆம் பக்கம் பார்க்க...

### வித்தியா படுகொலை வழக்கு

## இரும்பு பெட்டகத்தில் ஆவணப் பாதுகாப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் புங்குடுதீவு பாடசாலை மாணவி வித்தியா படுகொலை வழக்கில் சட்டமா அதிபரால் முதல் ஒன்பது பேரையும் எதிரிகளாக தொடுக்கப்பட்டு தயாரிக்கப்பட்ட குற்றப்பகிர்வு பத்திரம் மற்றும் அதனுடான ஆவணங்களையும் இரும்பு பெட்டகத்தில வைத்து பாதுகாக்குமாறு யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் மேல் நீதிமன்ற பதிவாளருக்கு பணிப்புரை பிறப்பித்துள்ளார்.

24ஆம் பக்கம் பார்க்க...

### கர்ப்பிணி கொலை;

## கைதான இருவருக்கு மறியல் நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை கர்ப்பிணிப் பெண் படுகொலை தொடர்பில் இருவரிடம் பெற்றுக் கொள்ளப்பட்ட வாக்கு மூலங்கள் தொடர்பாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவ் விசாரணைகளின் அறிக்கைகள் அடுத்த

24ஆம் பக்கம் பார்க்க...

## ரணில் இன்று சீனா பயணம்

(கொழும்பு)

சீனாவில் இடம்பெறவுள்ள மாநாடொன்றில் கலந்து கொள்வதற்காக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் அவரது மனைவியான பேராசிரியர்

24ஆம் பக்கம் பார்க்க...

### காங்கேசன்துறை கடற்பரப்பில்

## ரூ.9 கோடி பெறுமதியான ஹெரோயின் நேற்று மீட்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் காங்கேசன்துறை கடற்பரப்பில் மிதந்து வந்த பையொன்றில் இருந்து சுமார் 9 கோடி ரூபாய் மதிப்புள்ள ஹெரோ

23ஆம் பக்கம் பார்க்க...

### மோடி-த.தே.கூ சந்திப்பு

## "நான் வேண்டாதவன் தானே என்னை கூப்பிடவில்லை"-சி.வி

(கொழும்பு)

இந்திய பிரதமர் நரேந்திர மோடியுடனான தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் சந்திப்பில் உங்களுக்கு அழைப்பில்லையா என வடக்கு மாகாண முதலமைச்சரிடம் யாழ்ப்பாண ஊடகவியலாளர்கள் கேட்ட கேள்விக்கு, நான் வேண்டாதவன் தானே என்னை கூப்பிடவில்லை என முதலமைச்சர் பதிலளித்துள்ளார். பிரதமர் நரேந்திர மோடி நேற்று முன்

24ஆம் பக்கம் பார்க்க...

## குடும்பஸ்தர் சடலமாக மீட்பு



23ஆம் பக்கம் பார்க்க...


## பொருத்து வீடுகள் அமைச்சரவை அனுமதி முதல்வர் எதிர்ப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபையின் கோரிக்கையை புறந்தள்ளி மத்திய அரசாங்கத்தினால் வடக்கில் 6 ஆயிரம் பொருத்து வீடுகள் கட்டப்படுவதற்கு வடக்கு மாகாண சபை எதிர்ப்பை வெளியிடவுள்ள

24ஆம் பக்கம் பார்க்க...

## டிக்கோயா மருத்துவமனை இந்திய பிரதமரால் திறப்பு



23ஆம் பக்கம் பார்க்க...

# கவனயீர்ப்பு போராட்டம்

மக்கள் குடியிருப்புகளுக்கு மத்தியில் மயானங்கள் வேண்டாம் என்ற நோக்கத்துடன் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று இன்று சனிக்கிழமை மு.ப 10 மணிக்கு யாழ்ப்பாணம் பிரதான பேருந்து நிலையத்துக்கு முன்பாக நடைபெறும்.

மக்கள் சார்பான பொது அமைப்புக்கள், அரசியல் கட்சிகள், சூழலியலாளர்கள், மனிதநேய சக்திகள், பொதுமக்கள் அனைவரையும் இப்போராட்டத்தில் கலந்து கொள்ளுமாறு மேற்படி கவனயீர்ப்பை ஒழுங்கு செய்துள்ள சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பு கேட்டுக் கொண்டுள்ளது. (செ)


நக்கா வீதி, நல்லூர் தெற்கு

**ஸ்ரீ பத்திநாச்சி அம்பாள் ஆலய**

**வருடாந்த மணவாளக்கோல சங்காபிஷேக விழாவும்**
**திருவூஞ்சல் பாமாலை வெளியீடும் - 2017**

**அம்பிகை அடியார்களே!**

நிகழும் ஏவிளம்பி வருஷம் உத்தராயணமும் சித்திரை மாதம் 31ஆம் நாள் (14.05.2017) ஞாயிற்றுக்கிழமை மூல நட்சத்திரமும் கூடிய சுபநன்னாளில் கும்பாபிஷேக தின மணவாளக் கோல சகஸ்ர (1008) சங்காபிஷேகம் நடைபெறத் திருவருள் பாலித்துள்ளது. காலை 7.00 மணிக்கு விநாயகர் வழிபாட்டுடன் சங்காபிஷேக் கிரியைகள் ஆரம்பமாகும்.

**சங்காபிஷேக சிறப்பு நிகழ்ச்சிகள்**

| | |
|---|---|
| வேதபாராயணமும் ஆசியுரையும் | : சிவஸ்ரீ தானு மகாதேவக் குருக்கள் (காயத்திரி பீடம் - இணுவில்) |
| இசை ஆராதனை | : திருமதி சுதன் ரம்யா அவர்கள் |
| தவில், நாதஸ்வர இசை | : தலைசிறந்த கலைஞர்களால் இடம்பெறும் |

**தொடர்ந்து விசேட பூஜையும் அன்னதான நிகழ்வும் இடம்பெறும்**

**மாலை உற்சவ நிகழ்வுகள்**

மாலை 5.00 மணிக்கு வசந்த மண்டப பூஜையும் திருவூஞ்சலும் நடைபெறும்.

| | |
|---|---|
| திருவூஞ்சல் பாடல் ஆக்கம் | : பிரம்மஸ்ரீ மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா மெல்பேன் - அவுஸ்திரேலியா |
| திருவூஞ்சல் பாடுபவர் | : கலாநிதி. N. சண்முகலிங்கன் (முன்னாள் துணைவேந்தர், முன்னாள் சமூகவியல் துறைத் தலைவர், சிரேஷ்ட பேராசிரியர் - யாழ்.பல்கலைக்கழகம்) |

**தொடர்ந்து அம்பாள் உள் வீதி, வெளி வீதி உலா வரும் காட்சி நடைபெறும்**

ஆலய ஸ்தானிக குரு
பிரம்மஸ்ரீ. சோமகேதீஸ்வர சர்மா

(8604)


அடை மழையிலும் குடையுடன்

# தலதா மாளிகைக்கு இந்.பிரதமர் விஜயம்



இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி கண்டி தலதா மாளிகைக்கு விஜயம் மேற்கொண்டுள்ளார்.

மலையகத்திற்கு நேற்று விஜயம் மேற்கொண்ட இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி மற்றும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆகியோர் அடைமழையிலும் குடையுடன் தலதா மாளிகைக்கு சென்றுள்ளனர்.

புத்தரின் புனித தந்ததாதுவை வணங்குவதற்காகவே அங்கு சென்றுள்ளனர். டிக்கோயா, கிளங்கன் வைத்தியசாலையை திறந்து வைத்து விட்டு நோர்வூட் மைதானத்தில் இடம்பெற்ற கூட்டத்தையும் முடித்துக்கொண்டே பிரதமர் தலதா மாளிகைக்கு சென்றுள்ளார். (செ-11)


# அடுத்தடுத்த ஆசனங்களில் சந்திரிகா, மகிந்த!

## வணக்கம் தெரிவித்தார் மோடி

ஐக்கிய நாடுகள் வெசாக் தின நிகழ்வில் நேற்று பிரதம விருந்தினராக பங்கேற்ற இந்தியப் பிர தமர் நரேந்திர மோடி முன்னாள் ஜனாதிபதிகளான மகிந்த ராஜபக்ஷ மற்றும் சந் திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க ஆகியோருக்கு தனது மரியாதையையும் வணக்கத்தையும் தெரிவித்துள்ளார்.

கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் வெசாக் தின நிகழ்வுகள் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் முன்னாள் ஜனாதிபதிகளான சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, மகிந்த ராஜபக்ஷ, முன்னாள் பிரதமர் டி.எம்.ஜயரத்ன, சபாநாயகர் கரு ஜயசூரிய, அமைச்சர்கள் மற்றும் 85 நாடுகளை சேர்ந்த பௌத்த பிக்குமார்கள் என பலர் கலந்து கொண்டிருந்தனர்.





இதன்போது முதல் வரிசையில் அருகருகில் அமர்ந்திருந்த முன்னாள் ஜனாதிபதிகளான சந்திரிகா பண்டாரநாயக்க மற்றும் மகிந்த ராஜபக்ஷ ஆகியோருக்கு இந்தியப் பிரதமர் மரியாதை செலுத்தியதை காணக்கூடியதாக இருந்தது.

இதன்போது பதிலுக்கு மகிந்தவும் இரு கரம் கூப்பி தனது மரியாதையை தெரிவித்துள்ளார்.

முன்னதாக இலங்கைக்கு விஜயம் செய்துள்ள இந்தியப் பிரதமரை, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்று முந்தினம் மாலை சந்தித்து கலந்துரையாடியிருந்தார்.

இந்த நிலையிலேயே நேற்று நடைபெற்ற வெசாக் நிகழ்வுகளில் இருவரும் தமது மரியாதையை வெளிப்படுத்தி உள்ளனர்.

மேலும், முன்னாள் ஜனாதிபதிகளான சந்திரிகா பண்டாரநாயக்கவுக்கும் மகிந்த ராஜபக்ஷவுக்கு இடையில் கடும் கருத்து முரண்பாடுகள் இருந்து வருகின்றன.

சந்திரிகா பல கூட்டங்களில் மகிந்த ராஜபக்ஷவை கடுமையாக விமர்சித்துள்ளார். அதே போல் மகிந்த ராஜபக்ஷவும் தனது ஆட்சிக் காலத்தில் சந்திரிகாவை அரசியல் ரீதியாக புழிவாங்கியதாகவும் அவரது பாதுகாப்பை குறைத்ததாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இந்த நிலையில் நேற்று இவ்விருவரும் முதல் வரிசையில் அடுத்தடுத்த ஆசனங்களில் அமர்ந்து வெசாக்தின நிகழவில் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-11)


**விற்பனைக்கு**

100 முட்டையிடும் கோழிகள், கோழி சொண்டு வெட்டும் மிசின், 1.5 KW ஜெனரேற்றர். (C-8551)

**0769176049, 0765456551**

**ஏல விற்பனை**

யா/சென்.ஜேம்ஸ் மகா வித்தியாலயத்தில் பாவித்த உடைந்த தளபாடங்கள் **2017.05.26** அன்று **11.00** மணிக்கு பாடசாலை வளாகத்தில் ஏலத்தில் விடப்படும்.

(8996) அதிபர்



**இந்தியப் பிரதமர்** அவர்களின்
இலங்கைக்கான விஜயத்தை
இலங்கை வாழ் **தமிழ் மக்கள்**

**வரவேற்கின்றோம்**

அவரது வழிகாட்டலில் எம் மக்களில் அக்கறையாய் இருக்கும் இந்திய உயர்ஸ்தானிகர், வட மாகாண துணைத் தூதுவர், கண்டி துணைத் தூதுவர் மற்றும் அம்பாந்தோட்டை துணைத் தூதுவர்களுக்கு எமது நன்றிகள்.

இவ் இந்தியப் பிரதமரின் இலங்கை விஜயமானது எமக்கான ஓர் உறவுப் பாலமாக அமைந்திட எமது வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பாராளுமன்ற உறுப்பினர்
அங்கஜன் இராமநாதன்

(C-8549)

யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர்
இணுவை மைந்தன், பேராசிரியர்
**இரத்தினம் விக்னேஸ்வரன்**
அவர்களுக்கான

**பாராட்டு விழா**



| | |
|---|---|
| இடம் | : இணுவில் கந்தசுவாமி கோயில் |
| காலம் | : 14.05.2017 ஞாயிற்றுக்கிழமை பி.ப 2.30 மணி |
| தலைமை | : பேராசிரியர் வ.மகேஸ்வரன் (தமிழ்த்துறைத் தலைவர், பேராதனை பல்கலைக்கழகம்) |

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்*

இணுவில் கந்தசுவாமி கோயில் தர்மகர்த்தா சபையும்
இணுவை மக்களும்

(8992)

# முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரம் செம்மணியில் ஆரம்பம்



தமிழினப்படுகொலை; முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரம் நேற்றையதினம் ஆரம்பிக்கப்பட்ட நிலையில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவின் ஆட்சிக் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட செம்மணிப் படுகொலை நினைவு நாள் நேற்று முற்பகல் 10 மணியளவில் அனுஷ்டிக்கப்பட்டது. (படங்கள் : உ.சாளின்)

# புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தால் இலங்கைக்கு சர்வதேச ரீதியில் அழுத்தம்

(கொழும்பு)

**அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்டுள்ள புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தில் மாற்றங்களை மேற்கொள்ளுமாறு சர்வதேச இராஜதந்திரிகள் ஊடாக இலங்கை அரசாங்கத்திற்கு கடும் அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டுள்ளன.**

புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் கடந்த மாதம் 25 ஆம் திகதி அமைச்சரவையால் அங்கீரிக்கப்பட்டிருந்தது. இந்தச் சட்டவரைபை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கடுமையாக எதிர்த்துள்ளது. நடைமுறையில் உள்ள பயங்கரவாதத் தடைச் சட்டத்தைவிட மிக மோசமான வரைபாக இது அமைந்துள்ளது எனவும் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு சுட்டிக்காட்டியிருந்தது.

மேலும், பயங்கரவாதச் சட்டவரைபு கடந்த வருடம் வெளியாகியபோது அதில் 4 திருத்தங்களைக் கூட்டமைப்பு முன்வைத்திருந்தது. அவற்றில் ஒரு திருத்தம் மாத்திரமே உள்வாங்கப்பட்டுள்ள நிலையில், எஞ்சிய திருத்தங்கள் புறந்தள்ளப்பட்டன.

இந்தநிலையில், புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் வெளிநாடுகளினால் அங்கீகரிக்கக் கூடிய வகையில் இல்லை. உலக நாடுகளில் உள்ள பயங்கரவாதம் தொடர்பான சட்டங்களை மீறிய வகையில், மக்கள் சுதந்திரத்தை ஒடுக்கும் வகையில் இலங்கை அரசு தயாரித்துள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தைக் கொழும்பில் உள்ள இராஜதந்திரிகள் கண்டித்துள்ளனர்.

புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்ளுமாறும், இராஜதந்திரிகள் அழுத்தங்களைக் கொடுத்துள்ளனர். (இ-7)

## கூரிய ஆயுதத்தால் குடும்பஸ்தா ஒருவர் குத்திப்படுகொலை

மாத்தறை - பாதேகம பகுதியில் நபரொருவர் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார். நேற்று முன்தினம் இரவு குறித்த பகுதியில் இடம்பெற்ற தான நிகழ்விற்கு உதவியாக இருந்த போதே இவர் கொலை செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபர் ஆயுதங்களுடன் வந்த குழுவினரால் தாக்கப்பட்டுள்ளதாக பொலிஸாரின் முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. உயிரிழந்தவர் 36 வயதான இரண்டு பிள்ளைகளின் தந்தை என்பதுடன், பாதேகம பகுதியைச் சேர்ந்தவரென தெரியவந்துள்ளது. சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

## சர்வதேச வெசாக் தின வைபவம் ஆரம்பம்





(கொழும்பு)

ஐக்கிய நாடுகளின் 14 ஆவது சர்வதேச வெசாக் தின வைபவம் கொழும்பு சர்வதேச பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் வெகுவிமரிசையாக நேற்று ஆரம்பமானது.

இந்த வெசாக் தின வைபவத்தில் இந்திய பிரதமர் நரேந்திர மோடி பிரதம விருந்தினராக கலந்து கொண்டார்.

இந்த நிகழ்வில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட அமைச்சர்கள் கலந்து கொண்டனர். (இ-7)

## கீதா விவகாரம்; தீர்ப்பு நிறுத்தம்



கீதா குமாரசிங்க, நாடாளுமன்ற உறுப்பினர் பதவியில் இருப்பதற்குத் தகுதியற்றவர் என்று, மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை, 15ஆம் திகதிவரை, உயர் நீதிமன்றம் நிறுத்தி வைத்துள்ளது. கீதா குமாரசிங்க, நாடாளுமன்ற உறுப்பினர் பதவியில் இருப்பதற்குத் தகுதியற்றவர் என்று, மேன் முறையீட்டு நீதிமன்றம், கடந்த 3ஆம் திகதி தீர்ப்பளித்தது. இதற்கு எதிராக, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் காலி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த கீதா குமாரசிங்கவால், உயர்நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யப்பட்டது. அந்த மனு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே, மேற்கண்ட உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (இ-7)

## வீடொன்றின் மீது மேற்கொள்ளப்பட்ட கைக்குண்டு தாக்குதலில் ஒருவர் பலி

(கொழும்பு)

மஹியங்கனை, தொடம்வத்த பகுதியில் வீடொன்றுக்கு மேற்கொள்ளப்பட்ட கைக்குண்டு தாக்குதலில் 64 வயது நபர் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் பெண் ஒருவர் காயமடைந்துள்ளார்.

நேற்று அதிகாலை 1.15 மணியளவில் இந்த கைக்குண்டு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தாக்குதலுக்குள்ளான நபர் மஹியங்கனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார். தாக்குதலை மேற்கொண்ட சந்தேகநபரை கைது செய்ய மஹியங்கனை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

## அரசாங்கத்தை விட்டு வெளியேற எவ்வித தேவையும் கிடையாது!

### அமைச்சர் ஜோன் தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கத்தை விட்டு வெளியேறுவதற்கு எவ்வித தேவையும் கிடையாது என அமைச்சர் ஜோன் செனவிரட்ன தெரிவித்துள்ளார்.


கொழும்பு ஊடகமொன்று எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

நான் அரசாங்கத்தை விட்டு வெளியேறுவதாகவும், வெளியேறினால் தனியாக வெளியேறுமாறு ஜனாதிபதி கூறியதாகவும் செய்யப்படும் பிரசாரங்களில் உண்மையில்லை என அவர் தெரிவித்தார்.

அரசாங்கத்தை விட்டு வெளியேற வேண்டுமென கட்சி தீர்மானித்தால் அந்த தீர்மானத்திற்கு அடி பணிந்து வெளியேறுவேன் எனவும், கட்சியின் தீர்மானமே எனது தீர்மானம் எனவும் அவர் தெரிவித்தார். (இ-7)

# நாங்களும் மனிதர்கள்தான் சகல போட்டியிலும் வெற்றி பெற முடியாது

## பொலார்ட் கருத்து



நாங்களும் மனிதர்கள் தான். ஒவ்வொரு போட்டியிலும் வெற்றி பெற முடியாது என பஞ்சாப் அணிக்கெதிரான தோல்வி குறித்து பொலார்ட் விளக்கம் அளித்துள்ளார்.

மும்பை வான்கடே மைதானத்தில் நேற்று நடைபெற்ற போட்டியில் மும்பை இந்தியன்ஸ் அணிக்கெதிராக முதலில் துடுப்பெடுத்தாடிய கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி 230 ஓட்டங்கள் குவித்தது. பின்னர் 231 ஓட்டங்கள் குவித்தால் வெற்றி என்ற இலக்குடன் மும்பை இந்தியன்ஸ் அணி களம் இறங்கியது.

ஒரு கட்டத்தில் மும்பை இந்தியன்ஸ் அணி 12.4 ஓவரில் 4 விக்கெட் இழப்பிற்கு 121 ஓட்டங்கள் எடுத்திருந்தது. அதன்பின் பொலார்ட் - ஹர்திக் பாண்டியா ஜோடி அதிரடியாக விளையாடியது. இதனால் மும்பை இந்தியன்ஸ் அணி வெற்றி பெறும் நிலைக்கு சென்றது.

மும்பை இந்தியன்ஸ் அணியின் வெற்றிக்கு கடைசி ஓவரில் 16 ஓட்டங்கள் தேவைப்பட்டது. முதல் பந்தில் பொலார்ட் இரண்டு ஓட்டங்களுக்கு ஓடினார். ஆனால் கிரீஸை துடுப்பால் தொடாததால் 1 ஓட்டம் மட்டுமே கிடைத்தது. 2-வது பந்தை சிக்ஸருக்கு தூக்கினார். இதனால் கடைசி 4 பந்தில் 9 ஓட்டங்கள் தேவைப்பட்டது. ஆனால் நான்கு பந்தில் 1 ஓட்டம் மட்டுமே எடுத்தார். இதனால் கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி 7 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இந்த வெற்றியின் மூலம் கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியின் பிளேஓஃப் சுற்றுக்கான வாய்ப்பை இன்னும் தக்கவைத்துள்ளது.

நான்கு பந்தில் 9 ஓட்டங்கள் எடுக்க முடியாததால் பொலார்ட் மீது விமர்சனம் எழுந்தது. ஆனால், நாங்களும் மனிதர்கள்தான், ஒவ்வொரு போட்டியிலும் வெற்றி பெற முடியாது என்று பொலார்ட் தெரிவித்துள்ளார்.

24 பந்தில் 1 பவுண்டரி, 5 சிக்ஸருடன் 50 ஓட்டங்கள் எடுத்து கடைசி வரை ஆட்டமிழக்காமல் இருந்த பொலார்ட் இதுகுறித்து கூறுகையில், "நாங்களும் மனிதர்கள் தான். ஒவ்வொரு போட்டியிலும் வெல்ல முடியாது என்பதையே இந்த போட்டி உணர்த்துகிறது. நாம் ஒவ்வொரு ஆட்டத்திலும் மேம்பட்டிருக்கிறோம். சன்ரைசர்ஸ் அணிக்கு எதிராக மோசமாக ஆடினோம். ஆனால் நேற்று முடிந்துபோன நிலையிலிருந்து போராடினோம். எதிரணியினரும் அவர்கள் அளவில் தொழில்ரீதியான கிரிக்கெட் வீரர்களே. ஆகவே எப்போதும் ஆட்டத்தை நம்பக்கம் திருப்பி வெற்றி பெற்றுக்கொண்டே இருக்க முடியாது.

நாம் பதற்றமடைய வேண்டிய தேவையே இல்லை. நாம் தலையை நிமிர்த்திக் கொள்ளலாம். முதலில் எந்த ஒரு தொடரிலும் அடுத்த சுற்றுக்கு தகுதி பெற வேண்டும். நாம் பிளேஓஃப் சுற்றுக்குத் தகுதி பெற்று விட்டோம்.

நாங்களும் தவறுகள் செய்யக்கூடியவர்களே என்பதைத்தான் பஞ்சாப் அணிக்கெதிரான தோல்வி காட்டுகிறது. உத்வேகம் அடைந்து அடுத்த மூன்று போட்டிகளிலும் வெற்றி பெற்றால், அப்புறம் சம்பியன்ஷிப்பை கைப்பற்றிய பீலிங் எப்படி இருக்கிறது என்று கேள்வி கேட்பீர்கள்" என்றார்.

# ஆப்கானிஸ்தானிற்கு பயிற்சியாளரா? முடியாது என மறுத்துள்ள யூனிஸ் கான்



ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் அணிக்கு பயிற்சியாளராக பதவி ஏற்க இருப்பதாக வந்துள்ள செய்தியை யூனிஸ் கான் திட்டவட்டமாக மறுத்துள்ளார்.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் மூத்த வீரர் யூனிஸ் கான். டொமினிகாவில் நடைபெற்று வரும் மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கெதிரான 3-வது டெஸ்ட் போட்டியுடன் சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுகிறார்.


39 வயதாகும் யூனிஸ் கான், மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கெதிரான 2-வது டெஸ்ட் உடன் 117 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 34 சதங்கள், 33 அரைச்சதங்களுடன் 10046 ஓட்டங்கள் குவித்துள்ளார். 265 ஒருநாள் போட்டிகளில் 7 சதங்கள், 48 அரைச்சதங்களுடன் 7249 ஓட்டங்கள் அடித்துள்ளார். 25 இருபது - 20 கிரிக்கெட்டில் இரண்டு அரைச்சதங்களுடன் 442 ஓட்டங்கள் சேர்த்துள்ளார்.

ஏற்கெனவே ஒருநாள் மற்றும் இருபது - 20 கிரிக்கெட் போட்டியில் இருந்து ஓய்வு பெற்றுள்ள யூனிஸ் கான், டெஸ்ட் போட்டியில் இருந்தும் ஓய்வு பெறுவதுடன் அவருடைய சர்வதேச கிரிக்கெட் வாழ்க்கை முடிவுக்கு வருகிறது.

மேற்கிந்தியத் தீவுகள் தொடர் முடிந்தவுடன் அவர் பாகிஸ்தானின் 19 வயதிற்குட்பட்டோருக்கான அணியின் ஆலோசகராக நியமிக்கப்படலாம் என்று கூறப்பட்டது. இதற்கிடையே ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் வாரியத் தலைவர், "யூனிஸ் கானை எங்கள் நாட்டின் பயிற்சியாளராக நியமிக்க இருக்கிறோம். இதுகுறித்த பேச்சுவார்த்தை இறுதிக்கட்டத்தை எட்டிவிட்டது" என்றார்.

இந்நிலையில் ஆப்கானிஸ்தான் அணிக்கு பயிற்சியாளராகும் செய்தியை யூனிஸ் கான் மறுத்துள்ளார். இதனால் ஓய்வு பெற்ற பின் சிறிது காலம் குடும்பத்துடன் ஓய்வு எடுத்தபின் அடுத்த கட்ட பணிகள் குறித்து யோசிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# உலகக்கோப்பை - 2019 உடன் ஓய்வு பெறவுள்ள டூ பிளசிஸ்



இங்கிலாந்தில் 2019 ஆம் ஆண்டில் நடைபெறும் 50 ஓவர் உலகக் கோப்பை கிரிக்கெட் தொடருடன் ஓய்வு பெறப்போவதாக டூ பிளசிஸ் சூசகமாக தகவல் தெரிவித்துள்ளார்.

தென்னாபிரிக்க டெஸ்ட் மற்றும் இருபது - 20 கிரிக்கெட் அணியின் தலைவராக இருப்பவர் டூ பிளசிஸ். முன்னணி துடுப்பாட்ட வீரரும் பணியுடன், களத்தடுப்பிலும் சிறந்து விளங்கக்கூடியவர். 32 வயதாகும் இவர் 2019ஆம் ஆண்டு இங்கிலாந்தில் நடைபெறும் 50 ஓவர் உலகக்கோப்பை தொடருடன் சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற இருப்பதாக சூசகமாக தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து டூ பிளசிஸ் கூறுகையில் "நான் உட்பட மூத்த வீரர்கள் 2019ஆம் ஆண்டு நடைபெறும் உலகக்கோப்பை தொடருடன் விடைபெற வாய்ப்புள்ளது. அதுவரை அனைத்து வகை கிரிக்கெட் தொடரிலும் நான் விளையாடுவேன். அதன்பின் எனது கிரிக்கெட் வாழ்க்கை குறித்து அறிவிப்பேன்" என்றார்.

தென்னாபிரிக்கா அணியின் முன்னணி துடுப்பாட்ட வீரரான ஏபி டி வில்லியர்ஸ் முதுகுவலி காரணமாக டெஸ்ட் போட்டியில் பங்கேற்காமல் இருக்கிறார். 2019 உலகக்கோப்பையை எப்படியாவது கைப்பற்றி விட வேண்டும் என்ற எண்ணத்தில் உள்ளார். உலகக்கோப்பை தொடருக்குப்பின் அவர் ஓய்வு பெறலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. இருந்தாலும் டூ பிளசிஸ் யாருடைய பெயரையும் வெளிப்படையாக தெரிவிக்கவில்லை.

# டிராவிட்டின் யுக்தி குறித்து கேள்வி எழுப்பிய ஆகாஷ் சோப்ராவை வசைபாடிய டுவிட்டர்வாசிகள்



டெல்லி அணியின் ஆலோசகரான டிராவிட் இளம் வீரர்களுக்கு வாய்ப்பு வழங்கியதற்கு ஆகாஷ் சோப்ரா கேள்வி எழுப்பினார். இதற்கு டுவிட்டரில் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

ஐ.பி.எல். தொடரில் டெல்லி டேர்டெவில்ஸ் அணியின் ஆலோசகராக பணியாற்றி வருபவர் ராகுல் டிராவிட். அவர் சஞ்சு சாம்சன், ஷ்ரேயாஸ் அய்யர், ரிஷப் பந்த் போன்றோருக்கு அதிக அளவில் வாய்ப்பு வழங்கினார். அவர்கள் சிறப்பாக விளையாடினாலும் அணியை பிளேஓஃப் சுற்றுக்கு கொண்டு செல்ல முடியவில்லை. இதற்கு மூத்த வீரர்களை களம் இறக்காததுதான் காரணம் என்று முன்னாள் கிரிக்கெட் வீரர் ஆகாஷ் சோப்ரா கூறியுள்ளார்.

இது குறித்து ஆகாஷ் சோப்ரா தனது டுவிட்டர் பக்கத்தில் "இளைஞர்களிடம் திறமைகள் உள்ளது. அதே வேளையில் அவர்களால் சீரான முறையில் திறமையை வெளிப்படுத்த முடியவில்லை.

டெல்லி டேர்டெவில்ஸ் திறமையான இளம் வீரர்களை நம்பி களமிறங்கியது. ஆனால் அவர்களின் சீரற்ற தன்மையை சரிசெய்து போட்டியை வெற்றி நோக்கி கொண்டு செல்ல அனுபவ வீரர்கள் இல்லை.

உங்கள் (டிராவிட்) சிந்தனை அபாரமானது. ஆனால் ஐ.பி.எல். என்பது வெற்றி தோல்விக்கான களம். இளைஞர்கள் வளர்வதற்கான களமாக ஐ.பி.எல். கிரிக்கெட்டைப் பயன்படுத்தலாம்.

ஆனால் இறுதியில் இது வெற்றி - தோல்விக்கான தொடர் என்பதாகவே பார்க்கப்பட வேண்டும்" என்று குறிப்பிட்டிருந்தார்.




இதற்கு ஆகாஷ் சோப்ராவை டுவிட்டர் வாசிகள் வசைபாடியுள்ளனர். நவீன் குமார் என்பவர் "டுமின், டி காக், சகீர் கான் போன்ற அனுபவ வீரர்கள் காயம் காரணமாக விளையாடவில்லை.

ஆகவே, இளம் வீரர்களை வைத்து எந்த அளவிற்கு மோத முடியுமோ, அந்த அளவிற்கு டிராவிட் மோதியுள்ளார்" என்று குறிப்பிட்டுள்ளார்.

பிரதீக் வசந்தா என்பவர் "ஆகாஷ் சோப்ரா, நீங்கள் அனுபவம் பற்றி பேசாதீர்கள். இந்தியாவிற்காக குறைவான போட்டியில் மட்டுமே விளையாடிய உங்களுக்கு டிராவிட் குறித்து பேச தகுதி இல்லை" என்று குறிப்பிட்டுள்ளார்.

# ஐ.பி.எல். கிரிக்கெட்டில் 100 பேரை ஆட்டமிழக்கச் செய்து தோனி சாதனை



டெல்லி அணிக்கெதிராக ஷ்ரேயாஸ் அய்யரை பிடியெடுத்து ஆட்டமிழக்கசெய்ததன் மூலம் ஐ.பி.எல். வரலாற்றில் 100 பேரை ஆட்டமிழக்கச் செய்து தோனி சாதனை படைத்துள்ளார்.


இந்திய கிரிக்கெட் வாரியத்தால் 2008ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது இந்தியன் பிரிமீயர் லீக் (ஐ.பி.எல்). ரசிகர்களின் அமோக ஆதரவை பெற்ற இந்த இருபது - 20 லீக் தொடர் தற்போது 10-வது ஆண்டை எட்டியுள்ளது.

10-வது சீசன் தொடரின் 52-வது போட்டி டெல்லியில் நேற்று நடைபெற்றது. புனே அணிக்கெதிராக டெல்லி முதலில் துடுப்பெடுத்தாடியது.

அந்த அணியின் 3-வது வீரராக களம் இறங்கிய ஷ்ரேயாஸ் அய்யர் 3 ஓட்டங்கள் எடுத்த நிலையில் உனத்கட் பந்தில் தோனியிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

தோனி இந்த பிடியை எடுத்ததன் மூலம் ஐ.பி.எல். கிரிக்கெட் வரலாற்றில் 100 பேரை பிடியெடுப்பு, ஸ்டம் பிங் மற்றும் ரன்அவுட் மூலம் ஆட்டமிழக்கச் செய்து சாதனை படைத்துள்ளார்.

# புரோ கபடியில் சென்னை அணியின் உரிமையாளரானார் டெண்டுல்கர்



புரோ கபடி லீக்கில் தற்போது நான்கு அணிகள் புதிதாக சேர்க்கப்பட்டுள்ளன. இதில் சென்னை அணியை சச்சின் டெண்டுல்கர் கார்ப்பரேட் நிறுவனத்துடன் இணைந்து வாங்கியுள்ளார்.

இந்திய கிரிக்கெட் வாரியத்தால் 2008ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது ஐ.பி.எல். (இந்தியன் பிரிமீயர் லீக்). இருபது - 20 கிரிக்கெட் தொடரான இதற்கு அமோக வரவேற்பு கிடைத்தது. இதனைத் தொடர்ந்து ஹொக்கி, மல்யுத்தம், பட்மிண்டன், கபடி, கால்பந்து டென்னிஸ் போட்டிகளிலும் லீக் தொடர் அறிமுகப்படுத்தப்பட்டது.


2014ஆம் ஆண்டு புரோ கபடி லீக் தொடர் ஆரம்பிக்கப்பட்டது, டெல்லி, மும்பை, பெங்களூர். கொல்கத்தா, ஹைதராபாத், பாட்னா, புனே மற்றும் ஜெய்ப்பூர் ஆகிய 8 நகரங்களை மையமாக கொண்டு 8 அணிகள் இதில் பங்கேற்றன. இந்த லீக் மிகப்பெரிய வரவேற்பை பெற்றது.

இதனால் அடுத்த தொடரில் கூடுதலாக தமிழ்நாடு, ஹரியானா, உத்தர பிரதேசம் மற்றும் குஜராத் ஆகிய மாநிலங்களை மையமாக கொண்டு நான்கு அணிகள் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் சென்னை அணியை ஜே.எஸ். டபிள்யூ. ஸ்போர்ட் பிரைவேட் லிமிடெட் வாங்கியுள்ளது. இதில் சச்சின் டெண்டுல்கர் துணை உரிமையாளராக உள்ளார்.


சச்சின் டெண்டுல்கர் ஏற்கெனவே கால்பந்து லீக்கில் கேரளா அணியின் உரிமையாளராக உள்ளார். தற்போது கபடி அணியின் உரிமையாளராகவும் மாறியுள்ளார்.


# வாரணாசி-கொழும்பு இடையிலான போக்குவரத்து ஓகஸ்டில் ஆரம்பம்

## பிரதமர் மோடி தெரிவிப்பு







இந்தியாவின் வாரணாசிக்கும் கொழும்பிற்கும் இடையிலான போக்குவரத்து எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் ஆரம்பிக்கப்படும் என இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று வெள்ளிக்கிழமை காலை ஐ.நாவின் 14 ஆவது சர்வதேச வெசாக் தின நிகழ்வை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் தமது உரையில்,

இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான உறவை வலுப்படுத்துவதாக பௌத்த மதம் அமைந்துள்ளது.

பௌத்த மதமானது வன்முறைகளையும் முரண்பாடுகளையும் தவிர்த்து, சமாதானத்தையும் அன்பையுமே போதிக்கின்றது.

அத்தோடு, சிறந்த கலாசாரத்தையும் மெய்யியலையும் போதிக்கின்றது. இவ்விடயத்தில் இரு நாடுகளும் நெருங்கியதொடர்பை கொண்டுள்ளன.

இதேவேளை, இந்தியாவும் இலங்கையும் சமாதானத்தையும் நல்லிணக்கத்தையும் கட்டியெழுப்புவதற்கும், கல்வி, பொருளாதாரம், விவசாயம், நீர், சுகாதாரம் என பல்வேறு துறைகளில் ஒத்துழைப்புகளையும் வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இச் சந்தர்ப்பத்தில் என்னை இந்நிகழ்விற்கு அழைத்து கௌரவித்த ஜனாதிபதிக்கும் நாட்டு மக்களுக்கும் நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)


# இதய அஞ்சலி

அமரர் திருமதி சிவசோதி இராஜலட்சுமி

[சிற்றம்பலம்]



எமது கல்லூரி நண்பன்

**திரு. சி.ஆனந்தராஜா (சுரேஸ்)**

அவர்களின் அன்புத்தாயார்

**திருமதி சிவசோதி இராஜலட்சுமி**

11.05.2017 வியாழக்கிழமையன்று பிரான்ஸ்சில் காலமானதை அறிந்து மிகுந்த வேதனை அடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருற்று இருக்கும் நண்பனுக்கும் அவர்தம் குடும்ப உறவுகளுக்கும் எமது இதய அஞ்சலிகளை செலுத்துகின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!**

**யாழ்.மத்திய கல்லூரி**
**83 ஆம் ஆண்டு O/L B வகுப்பு**
**நண்பர்கள்**

(8995)


# மலையக மக்களுக்கான அடையாளத்தை பெறுவோம்

## அமைச்சர் மனோ உறுதி



(கொழும்பு)

ஏனைய சமூக மக்களுக்கு இணையாக மலையக தமிழ் மக்களுக்குரிய அடையாளங்களையும் பெற்றே தீருவோம் என தேசிய சகவாழ்வு மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

டிக்கோயா கிளங்கன் வைத்தியசாலையை திறந்து வைப்பதற்காக, நேற்று வெள்ளிக்கிழமை அங்கு சென்ற பாரத பிரதமர் நரேந்திர மோடியை வரவேற்று உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அமைச்சர் மனோ தமது உரையில் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் புதியதோர் வரலாறு படைக்கப்பட்டுள்ளது. நாங்கள் அனைவரும் இந்திய வம்சாவளியினர். மகாவம்சமும் அதனையே சொல்கின்றது.

1800ஆம் ஆண்டுக்குப் பிறகு, சமீபத்திய இந்திய வம்சாவளி மக்களாக நாங்கள் இங்கு இருக்கின்றோம். அதனால்தான் பாரத பிரதமர் எங்களை வந்து சந்தித்துள்ளார்.

இன்று ஜனாதிபதி மைத்திரி மற்றும் பிரதமர் ரணில் தலைமையிலான நல்லாட்சியில், புதியதோர் அந்தஸ்தையும் அடையாளத்தையும் பெற்றுள்ளோம்.

தமிழ் முற்போக்கு கூட்டணி அதனை தக்கவைத்துக்கொள்ள பெரும் பாடுபடுகின்றது. தற்போது மாற்றமொன்று ஏற்பட்டுள்ளது. அந்த மாற்றத்திற்கு வலுச்சேர்க்கும் வகையில், பாரத அன்னையின் தவப் புதல்வர் நரேந்திர மோடி இங்கு வந்து எம்மை சந்தித்துள்ளார். அவரை நாம் அனைவரும் கைகோர்த்து வரவேற்க வேண்டும்.

இந்நாட்டில், சிங்கள மக்கள், முஸ்லிம் மக்கள் மற்றும் வடக்கு கிழக்கு மக்களுக்கு இணையாக சகல அந்தஸ்தும் பெற்று தலைநிமிர்ந்து, தன்மான தமிழர்களாக மலையக தமிழர்கள் வாழவேண்டும். ஏனைய சமூகங்களுக்கு இணையாக மலையக மக்களும் தமது அடையாளங்களை பெற்றே தீர வேண்டும். அந்த மாற்றத்தை பெற்றே தீருவோம்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# இராசி பலன்

13.05.2017

(சித்திரை 30, சனிக்கிழமை)

சூரிய உதயம் காலை 5.55 மணிக்கு

துதியை காலை 7.09 மணிவரை

கேட்டை முன்னிரவு 10.19 மணிவரை

சுபநேரம் 2.54 - 4.24 மணிவரை

இராகுகாலம் 8.54 - 10.24 மணிவரை

**வளவன்**

| | | | |
|---|---|---|---|
| சுக் | சூரி புத | செவ் | |
| கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் பரணி, கார்த்திகை இரவு 10.38 மணிக்கு தனு- சந் | | |
| | | | ராகு |
| | சனி சந் | | குரு |

**மீனம்:** திறமை மிக்கவர்களின் ஒத்துழைப்புக் கிடைக்கும், எதிர்கால நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், கடுமையான எதிர்ப்புக்கள் திடீரென சாதகமாகி விடும்.

**மேடம்:** சிந்தித்து செயற்பட வேண்டிய நாள், புதிய விடயங்களை தள்ளிப் போடுவது நல்லது. எடுத்த காரியங்களை முடிப்பதில் சில தாமதம் ஏற்படலாம்.

**இடபம்:** சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும் நாள், குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், போசனசுகமுண்டு.

**மிதுனம்:** வியாபார விருத்தியுண்டு சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம் பெறலாம், முயற்சிகள் கைகூடும், வருமானம் வரும் வழியைக் கண்டு கொள்வீர்கள்.

**கும்பம்:** பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் நடைபெறலாம், எடுத்த காரியத்தை முடிப்பதில் நண்பர்களின் ஒத்துழைப்புக் கிடைக்கும், சுப செய்திகள் வந்து சேரலாம்.

**கடகம்:** நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, பிரியமானசிலரின் சந்திப்பு இடம் பெறலாம், தாழ்ந்த சுபாவமுண்டு.

**மகரம்:** முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், பெரியவர்களின் ஆலோசனைகளை ஏற்று நடக்க முற்படுவீர்கள்.

**சிம்மம்:** இல்லம் தேடி இனிய செய்திகள் வந்து சேரலாம், தாய் வழி உறவினர்களால் நன்மையுண்டு, சுப காரியங்களில் கலந்து கொள்ள அழைப்புக்கள் வந்து சேரலாம்.

**தனுசு:** ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், உறவினர்களை அனுசரித்துச் செல்வது நல்லது, மனச்சஞ்சலங்கள் ஏற்பட்டு உற்சாகம் குறையும்.

**விருச்சிகம்:** மனதில் இனம் புரியாத கற்பனைகளை வளர்த்துக் கொள்வீர்கள், அரசியல்வாதிகளால் அனுகூலமுண்டு, சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் ஏற்படும்.

**துலாம்:** தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், புத்தி சாதுரியமான செயற்பாடுகளால் புகழ் கூடும் நாள், தேவைகள் பூர்த்தியாகும் நாள்.

**கன்னி:** தொழிலில் போட்டிகளை முறியடித்து வெற்றி காண்பீர்கள், கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம்.



இலங்கை வேந்தன் கலைக் கல்லூரி நடத்தும் இயல் இசை நாடக அரங்கின் இரண்டாம் நாள் நிகழ்வு நேற்று முன்தினம் இடம் பெற்ற போது...

# பாதுகாப்பான புகையிரதக் கடவைகோரி சாவகச்சேரியில் மக்கள் போராட்டம்



(யாழ்ப்பாணம்)

60 ஆண்டுகளுக்கு மேலாக புகையிரதக் கடவையாக இருந்த சாவகச்சேரி புளியடி புகையிரதக்கடவையை மீண்டும் பாதுகாப்பான புகையிரதக்கடவையாக்குமாறு கோரி மக்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். முன்பு டக்ளஸ் தேவானந்தா எம்.பியிடம் மகஜர் கையளிக்கப்பட்டு அதற்கான சந்திப்புக்களும் நடைபெற்று காவலாளி நியமிக்கப்பட்டிருந்ததாகவும் சில நாட்களில் அவர் நீக்கப்பட்ட தாகவும் பொது மக்கள் தெரிவித்தனர். பல கிராம மக்கள், மாணவர்கள் பயன்படுத்தும் இவ் வீதிக்கு பாதுகாப்புக் கடவை அமைத்து போக்குவரத்துக்கு வசதி செய்யப்பட வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

அங்கு வருகை தந்த வடமாகாண சபை உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம், அரசாங்க அதிபர், தென்மராட்சி பிரதேச செயலர், சாவகச்சேரி நகராட்சி மன்றத்தினர், புகையிரத திணைக்களத்தினர் பொதுமக்கள் பிரதிநிதிகள் பங்குபற்றும் கூட்டமொன்றைக்கூட்டி நல்ல தொரு முடிவை எடுக்கலாம் எனத் தெரிவித்தார். (இ-29)

# இயல் இசை நாடக அரங்கின் நான்காம் நாள் நிகழ்வு இன்று

இலங்கைவேந்தன் கலைக் கல்லூரி நடத்தும் இயல் இசை நாடக அரங்கின் நான்காம் நாள் நிகழ்வு இன்று சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு இலங்கை வேந்தன் கலைக் கல்லூரி கலையரங்கத்தில் யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட உதவிப்பதி வாளர் இ.சர்வேஸ் வராதலைமையில் இடம்பெறும்.

இந் நிகழ்வில் பிரதம விருந்திநராக கிழக்கு பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் த. ஜெயசிங்கம் கலந்து கொள் வார்.

வீணாகான குருபீட நிறுவனர் சிவ ஸ்ரீ சபா.வாசு தேவக் குருக்கள் ஆசியுரையினையும் காலைக்கதிர் நாளிதழ் ஆசிரியர் ந.வித் தியாதரன் வாழ்த்துரையினையும் வழங்குவர். சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கைகள் நிறுவனம் தயாரித்து வழங்கும் மல்லாரி, காளி கௌத்தும் லயநாத கதம்பம், கீர்த்தனை , குரலிசை , தில்லானா மற்றும் சவால் நாடகம் என்பன இடம்பெறவுள்ளன. (இ-3)

# அலங்கார உற்சவம்


புன்னாலைக்கட்டுவன் வடக்கு பூரண புஸ்கலை சமேத ஹரிஹரபுத்ர ஐய னார், தேவஸ்தான வருடாந்த அலங்கார உற்சவம் எதிர் வரும் 16 ஆம் திகதி ஆரம் பமாகி 11 தினங்கள் இடம் பெற வுள்ளன).

எதிர்வரும் 27 ஆம் திகதி சனிக்கிழமை கும்பாபிஷேக தினத்தில் சங்காபிஷேகம் நடைபெறவுள்ளது. (இ-3)

# பற்றிமா அன்னையின் காட்சிகளின் நூற்றாண்டு விழா கொண்டாட்டம்

(யாழ்ப்பாணம்)

போர்த்துக்கல் நாட்டு பற்றிமா அன்னையின் காட்சிகளின் நூற்றாண்டு விழா கொண்டாட்டம் யாழ். மறைமாவட்ட பண்டத்தரிப்பு பற்றிமா அன்னையின் யாத்திரைத்தலத்தில் இன்று.யாழ். ஆயர் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமையில் காலை 7 மணிக்கு நடைபெறும் என பண்டத்தரிப்பு பற்றிமா அன்னையின் யாத்திரைத்தல பரிபாலகர் மைக்கல் சவுந்தர நாயகம் அடிகளார் அறிவித்துள்ளார்.



திருப்பலியின் பின்னர் போர்த்துக்கல் நாட்டில் இருந்து கென்றி ஜெலான் அ.ம.தி. அடிகளாரால் கொண்டு வரப்பட்ட திருச் சொரூபம் சரித்திரத்தில் முதற்தடவையாக பவனியாக எடுத்து வரப்படவுள்ளது. (இ-3)




# விழிப்புணர்வு நடைபவனி

(கரணவாய்)

கரவெட்டி விக்னேஸ்வரக் கல்லூரியின் நூற்றாண்டு பூர்த்தி (1971-2017) ஞாபகார்த்தமாக கல்லூரி அயல் கிராமங்களின் ஊடாக கல்லூரி மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், நலன் விரும்பிகள் இணைந்து விழிப்புணர்வு நடைபவனி ஒன்றை இன்று சனிக்கிழமை காலை 7.30 மணியளவில் ஆரம்பிக்கவுள்ளனர். (இ-60)

# ஸ்ரீசுந்தர ஹனுமன் கண்ட மாதரசி

இணுவில் - மருதனார் மடம் ஸ்ரீ சுந்தர ஆஞ்ச நேயர் ஆலய சுந்தர கண்ட மங்கல யக்ஞ நிகழ்வில் இன்று சனிக்கிழமை காலை 8 மணி முதல் கிரி யைகள் ஆரம்பமாகி முற் பகல் 11.30 ம்ணி முதல் பிற்பகல் 12.30 மணி வரை ''ஸ்ரீசுந்தர ஹனுமன் கண்ட மாதரசி'' எனும் தலைப்பில் ஆன்மீக உரை இடம் பெற்று பிற்பகல் ஒரு மணிக்கு அன்னதானம் வழங்கப்படும். (இ-3)

# திருவள்ளுவர் விழா இன்று

யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம் நடத்தும் திருவள்ளுவர் விழா இன்று 13 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4 மணிக்கு நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபத்தில் இடம்பெறும். இந் நிகழ்வில் திருக்குறளை அடியொற்றிய சிறப்புரை, குறள் வழி நடனம்,நாடகம்உள்ளிட்ட கலை , நிகழ்வுகள் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-3)

# மஹாகும்பாபிஷேகம் நாளை

யாழ். திருநெல்வேலி கிழக்கு கேணியடி ஸ்ரீ ஞான வைரவர் ஆலய மஹாகும்பாபிஷேகம் நாளை 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் முற்பகல் 10.15 மணிவரை இடம் பெறும். இதேவேளை இன்று சனிக்கிழமை காலை 8 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை எண்ணெய்க்காப்பு சாத்துதல் இடம்பெறும். (இ-7-136)

# கௌரவிப்பும் ஊக்குவிப்பும்

(யாழ்ப்பாணம்)

கோவிலாக்கண்டி மேற்கு தச்சன்தோப்பு கந்தையா கனகம்மா நிதிய கௌரவிப்பும் ஊக்குவிப்பும் நாளை 14 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2 மணிக்கு கந்தையா கனகம்மா நினைவாலயத்தில் இடம்பெறும். திருமதி வசந்தாதேவி மேகலிங்கம் தலைமையில் இடம் பெறும்.

இந் நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக ஓய்வு நிலை அதிபர் வேலுப்பிள்ளை இராமர், ஓய்வுநிலை அரச அதிகாரி செல்வி நவமணி செல்லையா, கௌரவ விருந்தினர்களாக காந்தி சனசமூக நிலையத் தலைவர் ஆறுமுகம் பாலேந்திரன், செல்வா சனச மூக நிலையத் தலைவர் தம்பு தர்மகுலசிங்கம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3)



தென்மராட்சிக் கல்வி வலயம் நடத்தும் தென்னவன் வர்த்தகக் கண்காட்சி நேற்றுக் காலை வடமாகாண விவசாய கூட்டுறவு அமைச்சர் பொ.ஐங்கரநேசனால் நாடாவெட்டி ஆரம்பித்து வைக்கப்பட்டது. வலயக் கல்விப் பணிப்பாளர் கு.கிருஷ்ணகுமார் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் வட மாகாணசபை உறுப்பினர் கேசவன் சயந்தன் உட்பட பலர் கலந்து சிறப்பித்தனர். உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவிக்கும் முகமாக நடத்தப்பட்ட இக்கண்காட்சியில் 40 இற்கும் மேற்பட்ட நிறுவனங்கள் பங்குபற்றியிருந்தன. இன்று பொதுமக்கள் கண்காட்சியைப் பார்வையிடலாம். நேற்றையதினம் மாணவர்கள் அனுமதிக்கப்பட்டனர். (படங்கள்: விஜயவாசன்)

# மரதன் ஓடிய மாணவன் வைத்தியசாலையில்

காத்தான்குடி, மட்டக்களப்பு, மஞ்சந்தொடுவாய் தொழில்நுட்பக் கல்லூரியினால் நடத்தப்பட்ட மரதன் ஓட்டப் போட்டியில் கலந்துகொண்ட அக்கல்லூரி மாணவன் ஒருவன் மயங்கி விழுந்த நிலையில் காத்தான்குடி ஆதார வைத்தியசாலையில், அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் நேற்று வெள்ளிக்கிழமை காலை 7.30 மணியளவில், கல்லடி பிரதான வீதியில் இடம்பெற்றுள்ளது.

மட்டக்களப்பு, உன்னிச்சை கிராமத்தை சேர்ந்த எம்.வினோஜன் (வயது-20) என்ற மாணவனே, காயங்களுக்குள்ளான நிலையில் வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளான். (இ-7)

# நூல் வெளியீடு நாளை

(யாழ்ப்பாணம்)

நல்லை கண்ணதாஸ் எழுதிய முப்பத்தைந்து தாளங்களில் தனியாவர்த்தனம் நூல் வெளியீடு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு நல்லூர் சட்டநாதர் கோவில் வீதியிலுள்ள இளங்கலைஞர் மன்றக் கலா மண்டபத்தில் இடம்பெறும்.

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் பிரதி அதிபர் ச.லலீசன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக கலைப்பீட பீடாதிபதி கலாநிதி எஸ்.சுதாகர், சிறப்பு விருந்தினராக மட்டக்களப்பு விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகப் பணிப்பாளர் கலாநிதி சி.ஜெய சங்கர் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3)


இலங்கைவேந்தன் கலைக் கல்லூரி நடத்தும்

## இயல் இசை நாடக அரங்கு 2017



13.05.2017
நான்காம் நாள் சனிக்கிழமை

இடம் :- இலங்கைவேந்தன் கலைக் கல்லூரி கலையரங்கம்
நேரம் :- பிற்பகல் 4.30 மணி

**தலைவர்** திரு. இ.சர்வேஸ்வரா
(உதவி பதிவாளர், மருத்துவபீடம் யாழ். பல்கலைக்கழகம்)

பிரதம விருந்தினர்
பேராசிரியர் த.ஜெயசிங்கம்
(துணை வேந்தர் கிழக்கு பல்கலைக்கழகம்)

பி.எஸ் பிச்சையப்பா ரஜீந்திரன் குழுவினர் வழங்கும்

**மங்கல இசை**

நாதஸ்வரம்: P.S.சுரசாகித்தியன், M.சாரகேசவன்
தவில்: சூலூர் K.ராமகிருஷ்ணா, திருச்செங்கோடு S.அஜய்

மங்கல விளக்கேற்றல்
திருமுறை ஓதுதல் :- செல்வி கஸ்தூரி கணேஷமூர்த்தி (தற்காலிக விரிவுரையாளர் - கிழக்கு பல்கலைக்கழகம்)
ஆசியுரை :- சிவஸ்ரீ சபா.வாசுதேவ குருக்கள் (நிறுவுநர் வீணாகான குருபீடம்)
வாழ்த்துரை :- திரு.ந.வித்தியாதரன் (ஆசிரியர் - காலைக்கதிர் நாளிதழ்)
தலைமையுரை :- தலைவர்

சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கைகள் நிறுவனம் தயாரித்து வழங்கும்

நடனம் **மல்லாரி**
**காளி கௌத்துவம்**
நெறியாள்கை :- கலாநிதி ஷர்மிளா ரஞ்சித்குமார் (சிரேஷ்ட விரிவுரையாளர்)

இசை அரங்கம்
**லயநாத கதம்பம்**
வயலின் : திருமதி. பிரவீனா மாதவன் (விரிவுரையாளர்)
செல்வி. பிறிசில்லா ஜோர்ஜ் (விரிவுரையாளர்)
மிருதங்கம் : திரு. நாகரட்ணம் மாதவன் (விரிவுரையாளர்)
திரு. திருமலை ப.திவ்யரூபசர்மா (விரிவுரையாளர்)

நடனம் **கீர்த்தனை**
நெறியாள்கை : கலாநிதி உஷாந்தி நேசகாந்தன் (சிரேஷ்ட விரிவுரையாளர்)

இசைக்கச்சேரி **குரலிசை**
திரு.தெட்சணாமூர்த்தி பிரதீபன் (விரிவுரையாளர்)
திருமதி. நிர்மலேஸ்வரி பிரஷாந் (விரிவுரையாளர்)

நடனம் **தில்லானா**
நெறியாள்கை : திரு.கணேசராஜா துவாஸ்கர் (விரிவுரையாளர்)

- கலைஞர்கள் கௌரவிப்பு
- பிரதம விருந்தினர் உரை

நாடகம் **“சவால்”**
நெறியாள்கை : திரு.த.விவானந்தராஜா (விரிவுரையாளர்)
பாட்டு : திருமதி.பிரியதர்சினி ஜெகதீஸ்வரன் (விரிவுரையாளர்)
திரு.தெட்சணாமூர்த்தி பிரதீபன் (விரிவுரையாளர்)
வயலின் : திருமதி. பிரவீனா மாதவன் (விரிவுரையாளர்)
செல்வி.பிறிசில்லா ஜோர்ஜ் (விரிவுரையாளர்)
மிருதங்கம் : திரு. நாகரட்ணம் மாதவன் (விரிவுரையாளர்)
திரு. திருமலை ப.திவ்யரூபசர்மா (விரிவுரையாளர்)

நன்றியுரை

கலைஞர்கள், ரசிகர்கள், ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
63.கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம்.
இலங்கை வேந்தன் கலைக் கல்லூரியினர்.

அனுமதி இலவசம்

விளம்பர அனுசரணை :- சிற்றி ஹாட்வெயார்
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.



நல்லூர் ஸ்ரீதேவி வில்லிசை

கலைமாமணி

Dr.S.S.சர்மா குருஜீ

077 784 1558

(8168)



## கல்யாணமாலை

### சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்:பூசம்<br>உயரம்: 5’3"<br>தகைமை/தொழில்:BSc, MSc/தனியார் தொழில்<br>தொ.இ: B/7319 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்:திருவாதிரை<br>கி.பா: செவ் 4 இல்<br>உயரம்: 5’3"<br>தகைமை/தொழில்:BSc/கணக்காளர்<br>தொ.இ: G/7334 |
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா:செவ் 2 இல்<br>உயரம்: 5’4"<br>தகைமை/தொழில்:BSc/அரசதொழில்<br>தொ.இ: B/7321 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: சூரிசெவ் 10 இல்<br>தகைமை/தொழில்:A/L<br>எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்<br>தொ.இ: G/7336 |
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்:மகம்<br>கி.பா: செவ் 1 இல்<br>தகைமை/தொழில்:A/L/சொந்ததொழில்<br>தொ.இ: B/7323 | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா:செவ் 8 இல்<br>உயரம்: 160cm<br>தகைமை/தொழில்:A/L/அரசதொழில்<br>தொ.இ: G/7338 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்:பூசம்<br>கி.பா: 44செவ் 7 இல்<br>உயரம்: 5’6”தகைமை/தொழில்:MBBS/வைத்தியர்<br>தொ.இ: B/7325 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்:புனர்பூசம்<br>கி.பா: 56சூரிசெவ் 8 இல்<br>உயரம்: 5’<br>தகைமை/தொழில்:பட்டதாரி<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/7345 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.



## பாராட்டி வாழ்த்துகின்றோம்


செல்வி சர்விகா அண்ணாமலை (ஆங்கில மொழி மூலம்)


செல்வி ஆரபி ஜெயரூபன்


செல்வி விஜிந்தா தங்கவேலு


செல்வி ஆர்த்தி ஜெயரூபன்

2016 ஆம் ஆண்டு க.பொ.த.சா.தர பரீட்சையில் 9 A சித்திபெற்ற நாவற்குழி பிரதேசத்தைச் சேர்ந்த மாணவச் செல்வங்களை பாராட்டி வாழ்த்துகின்றோம் இவர்கள் கற்றுயர்ந்து மென் மேலும் பல சாதனைகளைப் படைக்க இறைவனை வேண்டுகின்றோம்.

இவர்களுக்கான விருதும் கௌரவமும் 14.05.2017 நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப 2 மணிக்கு கந்தையா கனகம்மா நினைவாலயத்தில் வழங்கப்படும்.

கந்தையா கனகம்மா நிதியம்.
தச்சன் தோப்பு,
கைதடி,

(8941)

## ஒரு கோடியே 82 இலட்சம் ரூபா நிதியில்

# மூன்று கமநல சேவை நிலையங்களின் வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படும்

### முல்லை.மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் தெரிவிப்பு

அரச சார்பற்ற வெளிநாட்டு அமைப்பான வேள்ட்விசன் அமைப்பின் ஒரு கோடியே 82 இலட்சத்து 72 ஆயிரம் ரூபா நிதியுதவியுடன் முல்லைத்தீவு மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களத்திற்குட்பட்ட மூன்று கமநல சேவை நிலையங்களுக்குட்பட்ட நீர்ப்பாசனக் குளங்களின் கீழான விவசாய வீதி புனரமைப்பு, விவசாயக் கிணறு அமைத்தல், நெல் உலரவிடும் தளம் அமைத்தல், நீர்ப்பாசனக் கால்வாய்கள் புனரமைப்பு உட்பட எட்டு வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் தெரிவித்துள்ளார்,

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில், யுத்த சூழ்நிலைகளால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தை வளப்படுத்தும் நோக்கில் வேள்ட்விசன் அமைப்பினால் நடப்பாண்டுக்குரிய நிதி ஒதுக்கீட்டின் மூலம் ஒரு கோடியே 82 இலட்சத்து 72 ஆயிரம் ரூபா செலவில் வேலைகள் நடைபெற்றவுள்ளன.

இதற்கமைய, துணுக்காய் கமநல சேவை நிலையத்தின் கீழுள்ள குஞ்சுக்குள நீர்ப்பாசனக் கால்வாய்கள் புனரமைப்பு செய்வதற்கு 19 இலட்சத்து 96 ஆயிரம் ரூபா செலவிலும் முள்ளியவளை கமநல சேவை நிலையத்தின் கீழுள்ள சின்னவெட்டுக்குளம் நீர்ப்பாசனக் கால்வாய் புனரமைப்பு செய்வதற்கு 23 இலட்சத்து 15 ஆயிரம் ரூபாவும் கீச்சுக் குளத்தின் கீழ் கல்வெட்டு அமைப்பதற்கு 3 இலட்சத்து 17 ஆயிரம் ரூபாவும் குஞ்சுக் குளத்தின் புனரமைப்பு வேலைகளுக்காக 27 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாவும் முள்ளியவளையில் நெல் உலரவிடும் தளம் அமைப்பதற்கு 9 இலட்சத்து 95 ஆயிரம் ரூபாவும் செலவிடப்படவுள்ளது.

குமுழமுனை கமநல சேவை நிலையத்தின் கீழுள்ள ஊமச்சியாகுளம் கொட்டுவெளி விவசாய வீதி புனரமைப்பு செய்வதற்கு 12 இலட்சத்து 9 ஆயிரம் ரூபாவும் குமுழமுனை கமநல சேவை நிலையத்தில் இயற்கை உரம் தயாரிப்பு நிலையம் அமைப்பதற்கு 16 இலட்சம் ரூபாவும் செலவிடப்படவுள்ளது. இதே வேளை, கரைதுறைப்பற்று பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட பகுதியில் 35 விவசாயக் கிணறுகள் அமைக்கப்படவுள்ளன.

இந்த வேலைத் திட்டங்களில் விவசாயக் கிணறுகள் அமைத்தல் தவிர்ந்த ஏனைய வேலைகளுக்கான பொருத்தமான ஒப்பந்தகாரர்கள் கேள்வி கோரல்கள் மூலமாக தெரிவு செய்யப்பட்டு வேலைகள் ஒப்படைக்கப்படவுள்ளன.

எனவே குள வேலைகள் நடைபெற்றவுள்ள பகுதி கமக்கார அமைப்புக்களுக்குட்பட்ட விவசாயிகள் குள புனரமைப்பு பணிகளை கண்காணிப்பு செய்வதுடன், வேலைகளில் ஏதும் குறைபாடுகள் காணப்படின் தங்கள் பகுதி கமநல சேவை நிலையத்தின் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் ஊடாக அறியத்தருமாறு அவர் கேட்டுள்ளார். (2-5-15)




## ஆலயத்திருவிழாவில் தாலிக்கொடி திருட்டு

(மல்லாவி)

மாங்குளம் பொலிஸ் நிலையப் பிரிவிலுள்ள வரலாற்றுச் சிறப்பு மிக்க மம்மில் பிள்ளையார் ஆலய திருவிழாவின் போது, குடும்பப் பெண்ணொருவரின் தாலிக் கொடி மிக சூட்சுமமான முறையில் திருடப்பட்டுள்ளதாக தாலிக் கொடியை பறிகொடுத்த குடும்பப் பெண்ணினால் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாங்குளம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளதாக மாங்குளம் பொலிஸ் நிலையத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

மாங்குளம் பொலிஸ் நிலையப் பிரிவில் உள்ள அம்பகாமம் கிராமத்தில் உள்ள மம்மில் பிள்ளையார் ஆலய வருடாந்த திருவிழா கடந்த 10ஆம் திகதி புதன்கிழமை இரவு நடைபெற்றுள்ளது.

இதன்போது, நாட்டின் பல பகுதிகளில் இருந்தும் பக்தர்கள் வருகை தந்த நிலையில் ஏ-9, வீதியிலுள்ள கிழவன் குளம் பகுதியில் உள்ள குடும்பப் பெண் ஒருவர் ஆலய வழிபாட்டில் ஈடுபட்டிருந்த வேளை இந்த திருட்டு நடந்துள்ளது.

இதன்போது, ஒரு இலட்சத்து 50ஆயிரம் ரூபாய் பெறுமதியான 3 1/2, பவுண் தாலிக் கொடி களவாடப்பட்டுள்ளதாக பொலிஸ் நிலையத்தில் பிரஸ்தாபப் பெண்ணால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இதனையடுத்து, பொலிஸார் புலன் விசாரணைகளில் ஈடுபட்டுள்ளதாக மாங்குளம் பொலிஸ் நிலையத் தகவலில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-5-15)

## முச்சக்கரவண்டி உரிமையாளராக இருந்தால் மட்டுமே சங்க நிர்வாகத்தில் இருக்கமுடியும்

### மன்னாரில் 15 ஆம் திகதி நிர்வாகத்தெரிவு



மன்னார் நகரசபைக் குட்பட்ட முச்சக்கர வண்டி உரிமையாளர்களில் ஒரு பகுதியினர், கடந்த 9ஆம் திகதி 10 மணியளவில் வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன், அப்போஸ்தலிக்க பரிபாலகர் கிங்சிலி சுவாம்பிள்ளை ஆண்டகை, மன்னார் மாவட்ட குருமுதல்வர் விக்டர் சோசை, மன்னார் மாவட்ட பிரஜைகள் குழுவின் செயலாளர் மற்றும் ஒரு சிலருக்கிடையில் விசேட கலந்துரையாடல் ஒன்றினை மேற்கொண்டிருந்தனர்.

இந்த சந்தர்ப்பத்தில் முச்சக்கரவண்டி உரிமையாளர்கள் மன்னார் நகர எல்லைக்குட்பட்ட பகுதிகளில் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் தொடர்பாகவும், நீண்டகாலமாக முச்சக்கரவண்டி உரிமையாளர் சங்கம் இல்லாமையினாலும் தாங்கள் பல அசௌகரியங்களையும் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுப்பதாகவும் இதற்கு ஒரு உரிய தீர்வைப்பெற்றுத் தருமாறு தமது கருத்துக்களை முன்வைத்திருந்தனர். இதன்போது உரையாற்றிய வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர், முச்சக்கரவண்டி உரிமையாளர்கள் தொடர்பாக ஐந்து மாவட்டங்களிலும் இருக்கின்ற பிரச்சினைகள் நீக்கப்பட்டு முச்சக்கரவண்டி உரிமையாளர் சங்கங்கள் உரியமுறையில் உருவாக்கப்பட்டு அவை போக்குவரத்து அதிகார சபையின் கீழ் பதிவு செய்யப்பட வேண்டும் என்ற சட்ட ஒழுங்கு விதிகள் உருவாக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

இச் சந்தர்ப்பத்தில் கிளிநொச்சி மாவட்டத்தில் ஆரம்பத்திலிருந்தே முச்சக்கர வண்டி உரிமையாளர்கள் தொடர்பாக பிரச்சினைகள் நிலவிவருவதை சுட்டிக் காட்டியதோடு, மன்னார், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் உடனடியாக முச்சக்கரவண்டி உரிமையாளர் சங்கங்கள் உரியமுறையில் சீர்செய்யப்படும் என்பதனையும் தெரிவித்தார்.

மன்னார் மாவட்டத்தில் நாளை மறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் மன்னார் நகரசபை மண்டபத்தில் முச்சக்கரவண்டி உரிமையாளர்கள் தொடர்பான புதிய நிர்வாகத்தெரிவு இடம்பெறவுள்ளது. இவை தொடர்பான பல கலந்துரையாடல்கள் மன்னார் நகரசபை எல்லைக்குட்பட்ட அனைத்து உரிமையாளர்களையும் அழைத்து சம்பந்தப்பட்ட விடயங்கள் தொடர்பாக அனைத்து ஆவணங்களும், தகவல்களும் அமைச்சர் அலுவலகத்தினால் கடந்த காலங்களில் சேகரிக்கப்பட்டதோடு ஒவ்வொரு தரிப்பிடத்திற்கும் தலா இரண்டு நபர்கள் அதாவது ஒரு தமிழர் மற்றும் ஒரு இஸ்லாமியர் என்ற வகையில் பொறுப்பாக நியமிக்கப்பட்டதாகவும் தெரிவித்தார்.

குறிப்பிடப்பட்ட தரிப்பிடங்களில் தற்போது சேவையில் ஈடுபடுகின்ற அனைத்து உரிமையாளர்களின் விபரங்களும் சேகரிக்கப்பட்டுள்ளன. பின்னர் உரிய கோவைகள் பரிசீலனை செய்யப்பட்டு முச்சக்கர வண்டி உரிமையாளராக இருந்தால் மட்டுமே எதிர் காலத்தில் சங்கத்தின் நிர்வாகத்தில் இருக்கமுடியும் என்றும் இது தொடர்பில் பரிசீலனை செய்யப்பட்டு அது தொடர்பான பெயர்ப்பட்டியல் கடந்த சில வாரங்களுக்கு முன்னர் சம்பந்தப்பட்ட தரிப்பிடங்களுக்கு வழங்கப்பட்டன. அதன் பின்னர் தற்போதுவரை ஒருசில முறைபாடுகள் கிடைக்கப்பெற்றன. அவற்றினையும் விசாரணைக்குட்படுத்தப்பட்டு இறுதியாக முச்சக்கரவண்டி தரிப்பிடங்களுக்கு பொறுப்பானவர்களாக தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களை வைத்து இறுதியாக தீர்மானிக்கப்பட்ட பெயர்ப்பட்டியல் தயார் செய்யப்பட்டுள்ளது.


அதன் அடிப்படையில் நாளை மறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு பெயர்ப்பட்டியலில் உள்வாங்கப்பட்டுள்ளவர்கள் மட்டுமே பின்வரும் ஆவணங்களோடு கூட்டத்துக்கு சமுகமளிக்க முடியும். குறிப்பாக முச்சக்கரவண்டி உரிமைப்பத்திரம், முச்சக்கரவண்டி பதிவுப்புத்தகம்,தேசிய அடையாள அட்டை அல்லது முச்சக்கரவண்டி உரிமையை உறுதிப்படுத்தக்கூடிய வேறு ஏதும் ஆவணங்கள் மற்றும் அவர்களின் சேவையை உறுதிப்படுத்தக்கூடிய ஆவணங்களோடு சமுகமளிக்க வேண்டும்.

ஆகவே 15 ஆம் திகதி அறிவுறுத்தல் வழங்கப்பட்ட உரிமையாளர்கள் அனைவரும் தவறாது சமுகம் தந்து ஒரு வினைத்திறன்மிக்க முச்சக்கரவண்டி உரிமையாளர் சங்கத்தை உருவாக்குமாறு அவர் கேட்டுள்ளார். (2-5)

## காணிகள் கிடைக்கப்பெறும் போது மக்களுக்கு வீடுகள் கட்டித்தரப்படும்

### அமைச்சர் றிசாத் தெரிவிப்பு

(பனிக்கன்குளம்)



முல்லைத்தீவு மாவட்டத்தில் முஸ்லிம் மக்கள் மீள்குடியேறுவதை எதிர்க்கும் அரசியல் வாதிகள் இருப்பார்களேயானால் அவர்கள் அதனை விடுத்து தமிழ், முஸ்லிம் மக்கள் ஒற்றுமையாக வாழ்வதற்கு வழிவிட வேண்டும் என வர்த்தக வாணிப அமைச்சர் றிசாத் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்திற்கு வீடுகள் இல்லாதவர்களுக்கு வீடுகளைக் கட்டிக் கொடுப்பதற்காக வருகை தந்த அராபிய தனவந்தர்களை நேற்று முன்தினம் முல்லைத்தீவுக்கு அழைந்து வந்தபோதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் தொடர்ந்து கூறுகையில், அடாத்தாக காணிகளை பிடித்து வீடுகள் கட்டுவதற்காக யாரும் வருவதில்லை. வீடுகள் இல்லாத தமிழ், முஸ்லிம், சிங்கள, கத்தோலிக்க மக்களுக்கும் வீடுகள் கட்டிக்கொடுப்பதற்கே சில வெளிநாட்டு நலன்விரும்பிகள் இன்றையதினம் (நேற்று முன்தினம) வருகை தந்துள்ளனர். அவர்கள் வரவை சிலர் பிழையாக அர்த்தப்படுத்தியுள்ளனர். முல்லைத்தீவு மாவட்டத்தில் முஸ்லிம் மக்கள் வாழ்வதை எந்த ஒரு தமிழ் மக்களும் எதிர்க்கவில்லை. அவர்கள் எல்லோரும் ஒற்றுமையாக வாழவே விரும்புகின்றார்கள். அதை சிலர் குறுகிய அரசியல் இலாபத்திற்காக மோதவிட்டு இலாபம் அடைய பார்க்கின்றார்கள். நாங்கள் அடிக்கல் நாட்டுவதற்காக வருகை தரவில்லை. மக்களின் நிலைமைகளை பார்வையிடுவதற்காகவே வந்துள்ளோம். காணிகள் கிடைக்கும் போது அனைத்து மக்களுக்கும் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும். அது வெறுமனே முஸ்லிம் மக்களுக்கு மட்டுமல்ல அனைத்து மக்களுக்கும் கட்டிக் கொடுக்கப்படும் என மேலும் தெரிவித்துள்ளார். (2-5-281)

# சிராட்டிகுளம் - நட்டாங்கண்டல் பிரதான வீதி புனரமைப்பு விரைவில்

## மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் இ.பிரதாபன் தெரிவிப்பு

(மல்லாவி)

மீள்குடியேற்ற அமைச்சின் 30 இலட்சம் ரூபா நிதியொதுக்கீட்டின் மூலம் மாந்தை கிழக்கு பிரதேச செயலகப் பிரிவில் உள்ள சிராட்டிகுளத்தில் இருந்து நட்டாங்கண்டல் செல்லும் பிரதான வீதிக்கு கிரவல் மண்ணிட்டு புனரமைப்பு பணிகள் நடைபெறவுள்ளதாக மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் இ.பிரதாபன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

சிராட்டிகுளம் கிராமத்தில் 65 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன.

இந்த மக்களின் பிரதான வீதியாகவுள்ள சிராட்டிகுளம் - நட்டாங்கண்டல் வீதியை ஆற்று மணலை ஏற்றிப் பயணிக்கும் டிப்பர் வாகனங்கள் சேதமாக்கி வருகின்றன. பலமுறை சிறு திருத்தங்கள் செய்யப்பட போதும், தொடர்ந்தும் வீதி சேதமடைந்து வரும் நிலை காணப்படுகின்றது.

இந் நிலையில், மீள்குடியேற்ற அமைச்சினால் நடப்பாண்டுக்குரிய 30 இலட்சம் ரூபா நிதியொதுக்கீட்டின் மூலம் சிராட்டிகுளம் கிராமத்தின் தொடக்கத்தில் இருந்து 2.5 கிலோ மீற்றர் தூரத்திற்கு கிரவல் மண் இட்டு புனரமைப்பு செய்யப் படவுள்ளது.

இந்த வேலைத்திட்டத்திற்கு பொருத்தமான ஒப்பந்தகாரர்கள் கேள்வி கோரல்கள் மூலமாக தெரிவு செய்யப்பட்டு வேலைகள் ஒப்படைக்கப்படவுள்ளன. வேலைகள் யாவும் ஆரம்பிக்கப்பட்டு 4 மாதங்களுக்குள் நிறைவு செய்யப்பட்டுள்ள தாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(2-5-15)




# முள்ளிவாய்க்காலில் புதையுண்ட நிலையில் அதிகளவில் வெடிக்காத துப்பாக்கி ரவைகள்





வன்னி இறுதிப் போரின் போது முள்ளிவாய்க்கால் பகுதியில் வெடிக்காத நிலையில் விடுதலைப் புலிகளின் துப்பாக்கி ரவைகள் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

யுத்தம் முடிவடைந்து 8 வருடங்கள் கடந்த நிலையிலும் தற்போதும் யுத்தத்தின் அடையாளங்களையும் வடுக்களையும் அப்பகுதியில் பரவலாக காணமுடிகின்றது.

இந்நிலையில் முள்ளிவாய்க்கால் கிழக்கு பகுதியில் மண்ணில் புதையுண்ட நிலையில் விடுதலைப் புலிகளினால் பயன்படுத்தப்பட்டதாக நம்பப்படும் துப்பாக்கி ரவைகள் ஏராளமாக காணப்படுகின்றன. இதில் பல வெடித்த நிலையிலும், இன்னும் பல வெடிக்காத நிலையிலும் காணப்படுகின்றன.

அப்பகுதியில் மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்டு குடியேறியுள்ள நிலையில் இத் துப்பாக்கி ரவைகள் அகற்றப்படாத நிலையில் இன்றும் காணப்படுகின்றன என தெரிவிக்கப்படுகின்றது. (2-5-250)

# நிரந்தர நியமனம் வழங்குமாறு கோரி 9 ஆவது நாளாகவும் போராட்டம்



(குருமன்காடு)

நிரந்தர நியமனம் வழங்குமாறு கோரி வவுனியா சுகாதார தொண்டர்கள் முன்னெடுத்துள்ள கவனயீர்ப்பு போராட்டம் 9 ஆவது நாளாக நேற்றும் தொடர்ந்தது.

வடக்கில் கடந்த 15 வருடங்களுக்கு மேலாக பணியாற்றிய சுகாதார தொண்டர்களே இக் கவனயீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு முன்பாக போராட்டத்தில் ஈடுபட்டுள்ள சுகாதார தொண்டர்கள், தமக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படும் வரை போராட்டத்தை கைவிடப் போவதில்லையென விடாப்பிடியுடன் காணப்படுகின்றனர்.

கஷ்டப் பிரதேசங்களிலும், இக்கட்டான சூழ்நிலைகளிலும் சேவையாற்றிய தமது நியமனம் குறித்து இதற்கு முன்னர் பல போராட்டங்களை முன்னெடுத்திருந்த போதும் வழங்கப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லையென தெரிவிக்கும் சுகாதார தொண்டர்கள், இம்முறை தமக்கு உறுதியான தீர்மானம் வழங்கப்படும் வரை போராட்டம் தொடருமென குறிப்பிட்டுள்ளனர். (2-5-250)

# எமக்கு சேவைக்காலத்தின் அடிப்படையில் நிரந்தர நியமனம் வழங்கப்பட வேண்டும்

## சுகாதாரத் தொண்டர்கள் ஆனந்தன் எம்.பியுடன் எடுத்துரைப்பு



(குருமன்காடு)

வவுனியாவில் நிரந்தர நியமனம் கோரி போராட்டத்தில் ஈடுபட்டுள்ள சுகாதார தொண்டர்களை வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் நேற்று சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

சுகாதாரத் தொண்டர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள இடமான சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு முன்பாகச் சந்தித்து கலந்துரையாடிய பாராளுமன்ற உறுப்பினர் அவர்களின் சேவைக்காலம் மற்றும் நியமனம் வழங்குவதில் சுகாதார அமைச்சு கொண்டுள்ள நிலைப்பாடுகள் தொடர்பிலும் கேட்டறிந்துகொண்டார்.

இதேவேளை குறித்த சுகாதாரத் தொண்டர்கள் நேற்று 9 ஆவது நாளாகவும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதுடன் தமக்கு சேவைக் காலத்தின் அடிப்படையில் நிரந்தர நியமனம் வழங்கப்படவேண்டும் என்ற கோரிக்கையையும் முன்வைத்துள்ளனர். (2-5)

# எங்களை எல்லோரும் கைவிட்டு விட்டனர்

## கிளிநொச்சியில் காணாமல் போனோரின் உறவுகள் ஆதங்கம்

எங்களை எல்லோரும் கைவிட்டுவிட்டனர் என கிளிநொச்சியில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் ஆதங்கம் தெரிவித்துள்ளனர்.



கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய முன்றலில் ஆரம்பிக்கப்பட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் போராட்டம் நேற்று 82 ஆவது நாளாகவும் தொடர்ந்தது.



கடந்த பெப்ரவரி மாதம் 20 ஆம் திகதி காலை கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய முன்றலில் ஆரம்பிக்கப்பட்ட தொடர் கவனயீர்ப்புப் போராட்டமே இரவு-பகலாக தொடர்கிறது.

எங்களை அனைவரும் கைவிட்டுள்ளதாகவும் 82 ஆவது நாளாக நாங்கள் பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில் காணாமல் ஆக்கப்பட்டோர் தங்களின் உறவுகளுக்காக அவர்கள் தொடர்பில் தீர்க்கமான முடிவை எதிர்பார்த்து கவனயீர்ப்பை ஆரம்பித்த போதும் இந்த போராட்டத்தை எவரும் கண்டு கொள்ளவில்லை என்றும் கவலை தெரிவித்துள்ளனர். உறவினர்கள் தமது கோரிக்கைகள் நிறைவேறும் வரை போராட்டத்தை கைவிடப் போவதில்லை என தெரிவிக்கின்றனர். (2-5-312)

# இத்தாவில் பகுதியில் அரச காணிகள் முறையற்ற விதத்தில் பகிர்ந்தளிப்பு

## நேரில் சென்று பார்வையிட்டார் சிறிதரன் எம்.பி.

(மல்லாவி )

பளை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட இத்தாவில் பகுதியில் முறையற்ற வகையில் அரச காணிகள் வழங்கப்பட்டு வருவதாக இத்தாவில் பகுதி கிராம மட்ட பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் கிராம மக்கள் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனிடம் செய்த முறைப்பாட்டை அடுத்து, அவர் நேரில் சென்று மக்களை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இச் சந்திப்பு நேற்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் இத்தாவில் பகுதியில் உள்ள ஆரம்ப சுகாதார வைத்திய நிலைய வளாகத்தில் நடைபெற்றுள்ளது.

இதன்போது, கிராம மக்களினால் பளைப் பிரதேச செயலக காணி அலுவலகத்தின் மூலம் இத்தாவில் பகுதியில் வேறு மாவட்டங்களைச் சேர்ந்த வசதி படைத்தவர்களுக்கு வசதியான பகுதியிலும், பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட குடும்பங்களுக்கு வசதிகள் இல்லாத இடத்திலும் காணிகள் முறைகேடாக வழங்கப்பட்டுள்ளது.



பிரதேசத்தில் பல குடும்பங்களுக்கு காணிகள் வழங்க வேண்டிய நிலையில், வெளி மாவட்டங்களைச் சேர்ந்த வசதி படைத்தவர்களுக்கு காணிகள் வழங்கப்பட்டுள்ளதாக குற்றம் சாட்டியுள்ளார்கள்.

இது தொடர்பில் சிறிதரன் எம்.பி. கருத்துத் தெரிவிக்கையில்,


முறையிட்டதற்கு அமைவாக ஆய்வு செய்து பளைப் பிரதேச செயலாளருடன் தொடர்பு கொண்டு தகவல்களைப் பெற்று பாதிக்கப்பட்ட உங்களுக்கு நல்லதோர் தீர்வைப் பெற்றுத் தருவேன் எனத் தெரிவித்துள்ளார்.

இச் சந்திப்பின் போது, தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் பளைப் பிரதேச அமைப்பாளர் மு.கஜனும் இணைந்திருந்தார். (2-5-15)

# கொழும்பில் இந்தியப் பிரதமர் மோடி








இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுள்ள இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, கங்காராமய விஹாரையில் வழிபாடுகளில் ஈடுபட்டதுடன் வெசாக் அலங்கார விளக்குகளையும் ஆரம்பித்து வைத்தார். நேற்று முன்தினம் மாலை கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்த இந்தியப் பிரதமரை பிரதமர் ரணில் மற்றும் அமைச்சர்கள் வரவேற்றனர். அங்கிருந்து வாகன அணியாக கங்காராமய விஹாரைக்கு சென்ற இந்திய, இலங்கை பிரதமர்கள் விஹாரையில் வழிபாடுகளை மேற்கொண்டனர். இதையடுத்து, கங்காராமய விஹாரையின் வெசாக் அலங்கார விளக்குகளின் ஆழியை இயக்கி இந்திய பிரதமர் ஆரம்பித்து வைத்தார்.







# இலங்கையின் அபிவிருத்தியில் பங்காளராக இந்தியா தயார்

## இந்து சமுத்திர வலய கூட்டுச் செயலர் தெரிவிப்பு

எதிர்காலத்தில் இலங்கையில் பலம்மிக்க பொருளாதாரத்தை உருவாக்கி கொடுப்பதற்கு மற்றும் இலங்கையின் அபிவிருத்தி நடவடிக்கையில் அபிவிருத்திப் பங்காளராவதற்கு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி செயற்பட்டுக் கொண்டிருப்பதாக இந்து சமுத்திர வலயத்தின் கூட்டுசெயலாளர் தெரிவித்தார். அதேவேளை இலங்கைக்கு இந்தியா தொடர்ந்தும் ஒத்துழைப்பு வழங்கிக் கொண்டிருக்கும் என்று உறுதியளிப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் சபையின் சர்வதேச வெசாக் தின நிகழ்வில் கலந்து கொள்வதற்காக இலங்கை வந்திருக்கும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் தலைமையில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைக் கூறினார். தொடர்ந்து உரையாற்றிய அவர்.

புரிந்துணர்வு உடன்படிக்கைகள் போன்றே ஒப்பந்தங்கள் என்று பல வகை இருக்கின்றன. எனினும் கையொப்பமிடுவதற்கான எவ்வித ஒப்பந்தங்களும் இன்று எம்மிடமில்லை. இன்று இலங்கையின் தலைமையுடன் இலங்கையின் நாளைய தினத்தை நோக்கி நாம் இருப்போம். இலங்கையின் நாளைய தினத்திற்காக நாம் உதவிகளை வழங்குவோம்.

எதிர்காலத்தில் தொடர்ச்சியான உதவிகளை இலங்கைக்கு வழங்குவதற்கு எதிர்பார்த்துள்ளோம். நாம் அடுத்துவரும் சில நாட்களுக்குள் இலங்கையில் பலம்மிக்க அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்காக பங்காளராகுவோம் என்பதை உறுதியளிக்கின்றோம்.

அத்துடன் இலங்கையில் முன்னேற்றமடைந்து கொண்டிருக்கும் செழிப்பு மற்றும் அபிவிருத்திக்கு பங்களிப்பு செய்வது போன்றே இரு நாடுகளுக்கும் இடையில் ஒத்துழைப்புடன் பணியாற்றுவதற்கு தயாராக இருப்பதாகவும் அவர் கூறினார்.



அதேவேளை அவர்களின் இந்த விஜயத்தின் போது நாட்டின் பல பிரதேசங்களுக்கு விஜயம் செய்ய எதிர்பார்த்துள்ளதாகவும் இந்த சந்தர்ப்பங்களில் இடம்பெறுகின்ற சந்திப்புக்களின் போது புத்த மதம், சுற்றுலா, பௌத்த கலாசார மற்றும் இரு நாடுகளுக்கும் இடையில் காணப்படுகின்ற உறவை மேலும் வலுப்படுத்துவது சம்பந்தமாக அவதானம் செலுத்த உள்ளதாக இந்து சமுத்திர வலயத்தின் கூட்டு செயலாளர் கூறியுள்ளார். (இ-7)

# சிலாபத்தில் மீட்கப்பட்ட போதைப் பொருளின் உரிமையாளர் டுபாயில்

(கொழும்பு)

சிலாபம் பிரதேசத்திலிருந்து மீட்கப்பட்ட போதைப் பொருட்களுக்கான உரிமையாளரும் அந்த வியாபாரத்தை நீண்ட காலமாக நடத்தி வருபவரும் டுபாயில் இருப்பதாக பொலிஸ் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

இந்த போதைப் பொருள் வியாபாரம் நீண்ட காலமாக கடல் மார்க்கமாக செய்யப்பட்டு வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளதாக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

புத்தளத்திலிருந்து கொழும்புக்கு போதைப் பொருளை எடுத்துச் செல்லும் போதே நேற்று முன்தினம் குறித்த சந்தேக நபர் சிலாபத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளதாகவும் குறித்த பொலிஸ் அதிகாரி தெரிவித்தார்.

தான் நான்கு பிள்ளைகளின் தகப்பன் எனவும் இந்த போதைப்பொருளை கொண்டு சென்று உரியவரிடம் ஒப்படைத்தால் தனக்கு 50 இலட்சம் ரூபா அவர்கள் தருவார்கள் எனவும் சந்தேக நபர் பொலிஸாரிடம் சாட்சியமளித்துள்ளார்.

சந்தேக நபரிடமிருந்து கைப்பற்றப்பட்ட கையடக்கத் தொலைபேசிக்கு குறித்த போதைப் பொருட்களின் உரிமையாளர் கைது செய்யப்படுவதற்கு 10 நிமிடங்களுக்கு முன்னர் தொடர்பு கொண்டிருப்பதாக பொலிஸ் அதிகாரி அறிவித்துள்ளார். (இ-7)

# சூழலுக்கியைவான பசுமைத் தொழில்நுட்பங்கள் – 117

# கணனி தொழில்நுட்பத்தொழிலிலிருந்து விவசாயச் செய்கை நோக்கி!



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

வாருங்கள் எம்மினிய உறவுகளே!

தற்சமயம் எங்கும் தொழில் தாருங்கள் என்னும் கோரிக்கைகளே பரவலாக முன்னெழுந்துள்ளதனை அவதானிக்கலாம். இதற்குப் பல காரணங்கள் தரப்பட்டாலும் அனைவருக்குமான தொழில் தருவதற்கான முன்னேற்பாடுகள் மூன்றாம் உலகநாட்டின் அரசகொள்கை வகுப்பாளர்களிடம் இல்லாதிருப்பதும் அனைவருக்கும் அரசதொழில் கொடுப்பதென்பதற்கான சாத்தியம் குறைவென்பதுமாகும். ஆனாலும் க.பொ.த. உயர்தரப்பரீட்சையில் சிறப்பாக பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்கள் பலத்த கனவுகளுடன் தம் குடும்பச் சுமைகளையும் சுமந்தபடி பல்கலைக்கழகத்திற்கு சென்று பட்டம் பெற்றபின் அடுத்தது என்ன எனத் தீர்மானிக்க முடியாதபடி ஆகிவிடுகின்றார்கள். வெளிநாடுகளில் தங்களது வேலையை பெறுவதற்கு பலருக்கு ஆர்வமிருந்தும் அவர்களிடம் போதியளவு நிதியின்மையும் இன்னல்களுக்குள்ளான குடும்ப நிலைமையும் இன்னும் அவர்களுக்கு சுயமான தொழில்செய்வதற்கான ஆளுமையின்மையும் காரணங்களாக குறிப்பிடப்படுகின்றன. ஆனால் ஒவ்வொரு பட்டப்படிப்பிற்கும் கற்றவர்களுக்கான தொழில் பெறுதலுக்கான வாய்ப்புக்கள் மற்றும் மேற்படிப்பிற்கான வசதிவாய்ப்புக்கள்என்பனவற்றினை ஆராய்ந்துதான் அந்தந்த கற்கை நெறியினை கற்பிக்கின்றார்கள். இதில் கற்கைக்கான திட்டமிடலில் மாணவர்களது அறிவு விருத்திக்கு அப்பால் ஆளுமையினையும் திறன்களின் விருத்தியும் முன்னிலைப்படுத்தப்படுகின்றது. கற்றபின் தமது திறன்விருத்திக்கேற்ப வேலையை பெற்றுக்கொள்வர் என்னும் எதிர்பார்ப்புடனும் அனுபவத்திற்கூடாக ஆளுமையினை வளர்த்துக் கொள்ளவும் அதற்காக தொழில்சார் பயிற்சிகள் கற்றல் காலங்களிலேயே வழங்கப்படுவதும் என இக்கற்கைநெறிகள் மீளவும் நெறிப்படுத்தப்பட்டு உலகவங்கி அனுசரணையுடனான திட்டங்களுக் கூடாக நடைபெறுகின்றன.

ஆனால் அனைவரும் எதிர்பார்த்தளவு அடைவு இத்திட்டங்களினால் கிடைக்கப்படவில்லை என்னும் குற்றச் சாட்டும் முன்வைக்கப்படுகின்றது.

அளவுக்கதிகமான மாணவர்கள் குறிப்பிட்ட பிரிவு அல்லது துறைசார்ந்த பட்டப்படிப்பிற்குள் உள்வாங்கப்படும் போது அவர் கள் கற்று வெளியேறும் காலத்தில் அங்கொரு தொழில்ரீதியான தேக்கநிலை வழமையாகக் காணப்படுகின்றது. இந்த தேக்கநிலை வருடாவருடம் பல்கலைக்கழகங்களுக்கு உட்செல்லும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரிக்க அதிகரிக்க இன்னும் அதிகரித்துக் கொண்டு செல்வதனையும் அவதானிக்கலாம்.

குறிப்பாக கலை மற்றும் விஞ்ஞான பட்டதாரி களின் வேலைவாய்ப்பென்பது விசேடமாக கருத்தில் கொள்ளப் பட வேண்டியதாகும். இவர்களின் வேலைவாய்ப்பென்பது அதிகமாக உள்வாங்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கைக் கேற்ப உருவாக்கப்படாது விட்டால் இவ்வாறான பிரச்சினைகளுக்கு வருடாவருடம்முகங்கொடுக்க வேண்டியிருக்கும். மாறாக இந்த எண்ணிக்கையைக் குறைப்பதற்காகவே தொழில்நுட்ப பட்டப்படிப்பு இலங்கையெங்கும் பல பல்கலைக் கழகங்களில் உருவாக்கப்பட்டு அதற்காக விசேடமாக க.பொ.த. உயர்தரத்திலிருந்து தொழில்நுட்ப பிரிவு மாணவர்களும் உள்வாங்கப்பட்டு தற்போது அவர்களது பட்டப்படிப்பு கற்கைநெறி தெரிவு செய்யப்பட்ட பல்கலைக்கழகங்களில் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது.

ஆனால் இவ்வாறாக உள்வாங்கப்படும் மாணவர்க்ள் பட்டதாரிகளாக வெளிவரும் போது அவர்களுக்கான வேலை வாய்ப்பு உருவாக்கம் பற்றிய செயற்பாடு அதிகமாக நடைபெறுவதாக அறியமுடியவில்லை. இது தனியார் தொழிற்றுறை விருத்தியை மையப் படுத்தியதாக இல்லாது விட்டால் இன்னும் பல பிரச்சினைகளை உருவாக்கவே செய்யும். -

கிட்டத்தட்ட வருடாவருடம் 2000 - 3000 வரையான"மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்குள் அதிகரித்த எண்ணிக்கையில் உள்வாங்கப்படுகின்றனர்.

இதற்காக புதிய கற்கை நெறிகளும் உருவாக்கப்பட்டுள்ளன. குறிப்பாக தொழில்நுட்ப பட்டப்படிப்பிற்குள் உள்வாங்கப்பட்ட மாணவர்களின் வேலை வாய்ப்பென்பது அரசதொழிலை மட்டும் நம்பியிருக்காது நாடெங்கும் தனியார் தொழிற்றுறைகளின் உருவாக்கத்திலும் தங்கியிருக்கின்றது.

அரச இயந்திரத்தினால் எத்தனை பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பினை ஒரேநேரத்தில் பெற்றுக் கொடுக்க முடியும்? மாறாக அவர்களை குறிப்பிட்ட காலத்திற்கு எதுவிதத்திலும் சம்பந்தமேயில்லாத பட்டதாரி தொழில் பயிற்றுநராக (Graduate Trainees) அமர்த்திவிட்டு பின்னர் அந்த தொழிலும் வழங்கப்படும் குறைந்த சம்பளமும் அவர்களுக்கு மனநிறைவையும் அவர்களது அன்றாடத் தேவையையும் பூர்த்தி செய்யாத போது தாமாகவே அதனை விட்டு வெளியேறி வேறு தொழில் தேடிச் செல்லும் நிலையையும் அவதானிக்க முடிகின்றது. பட்டத்தைப் பெற்றபின் எதுவித தொழில் வாய்ப்பும் இல்லாது வழிதெரியாது நிற்கும் பட்டதாரிகளுக்கு அதனை பெற்றுத் தருவது யார் என்னும் பலத்த கேள்வியும் முன்வைக்கப்படுகின்றது.

இவற்றுடன் வேலைவழங்கப்படும் போது எதிர்பார்த்தளவில் வேலை செய்யப்படுவதில்லை என்னும் முறைப்பாடுகளும் வேலை தருபவர்களாலும் முன்வைக்கப்படுகின்றது. குறிப்பிட்ட வேலையில் ஈடுபாடு காட்டாததும், தரப்பட்ட வேலையினை வினைத்திறனாக செய்ய எத்தனிக்காமையும் வெறுமனே வேலை என்பதனை தமக்கொரு அரணாக பயன்படுத்துவதும் பொதுவான குறைகளாக இருந்தாலும் வேலை தருபவர்களது எதிர்பார்ப்பை வளரும் சந்ததி பூர்த்தி செய்வதில் மந்தநிலையிருப்பதாகவே சுட்டிக் காட்டப்படுகின்றது. இந்த நிலை எதனால் ஏற்பட்டது என்பதற்கான காரணங்களும் இனங்காணப் படவேண்டும். வளர்ந்துவரும் விஞ்ஞான தொழில்நுட்பத்தின் அனுசரணை தொழில் கொள்வோரிடமும் தொழிலாளர்களிடமும் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தி வருகின்றது என்பது நிதர்சனமே. வாழ்க்கையை சுகமான வாழ்க்கையாக வேலைப்பளுவற்று பொழுது போக்குகளில் விருப்புக்கொள்ளும் போக்குக்குள் தற்போது இளைய சமுதாயம் மாறியிருப்பது கவலைக்குரியதாகின்றது. இது பல ஆண்டு காலமாக போர்ச்சூழலில் சிறைபட்டிருந்த சமூகத்தில் அனைத்தும் கிடைக்கக்கூடியதாக ஆகியிருக் கும் போது அதற்குள்ளான உள்ளீர்ப் பாக இருப்பது தவிர்க்கமுடியாததாயினும் அவர்கள் தம் நிலையை கருத்தில் கொண்டு தமக்கொரு வேலையை உருவாக்கிக்கொள்ளும் நிலைக்குள் வரவிரும்பாததும் இன்னொரு காரணமாக கருதப்படுகின்றது. மாறாக சுயமாக வேலையை செய்ய நினைக்கும் ஒருவருக்கான உதவிகளும் ஊக்குவிப்பும் இத் தேசத்தில் அரிதாகவே கிடைப்பதும் கிடைப்பதை பயன்படுத்துவதில் காட்டும் ஈடுபாடு புதுமைகளை உருவாக்குவதில் இல்லாதிருப்பதுவும் இவற்றுக்குக் காரணமாக கொள்ளமுடியும்.

மாறாக அரச தொழிலல்லாது தனியார் தொழிற்றுறையும் வட பகுதியைப் பொறுத்தவரை எதிர்பார்த்தளவில் இங்குள்ளவர்களுக்கு வேலைவாய்ப்பினை அள்ளித்தந்துவிடவில்லை என்னும் பொதுப்படையான உறுமல்களும் ஆங்காங்கே கேட்கவே செய்கின்றது. போர் நடைபெற்ற காலங்களில் தனியார் தொழில் என்பதற்கான வாய்ப்புக்கள் எதுவுமற்றதாக இருந் தது. அதன்பின்னர் மத்திய வங்கியின் அனுசரணையுடன் நடத்தப்பட்ட கலந்துரையாடல்களில் பலர் வெளிநாடுகளிலிருந்து முதலீடு செய்து தனியார் தொழிற்றுறையை விருத்தி செய்ய ஆர்வம் கொண்டி ருந்தாலும் நாட்டின் நிலைமை அவர்களுக்கு சாதகமாக தெரியவில்லை.

இந்த நிலையில் புலம் பெயர்ந்தவர்களின் முதலீடுகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதும் அவர்களின் தொழிற்றுறை விருத்திக்கு வழிசமைப்பதும் அவசியமாகின்றது. ஆனால் இந்த முதலீடுகள் இங்குள்ள மக்களின் வேலைப் பிரச்சினைக்கு வழிகோலுவதாக இருக்கவேண்டுமே தவிர பிற இடங்களிலிருந்து ம்க்களை வரவழைத்து வேலை கொடுப்பதாக இருக்கக்கூடாது. ஆனால் தென் பகுதியிலிருந்து தருவிக்கப்படும் வேலையாட்கள் சிறப்பாக இன்னும் எதிர்பார்க்கும் வேலைகளை கலை நுட்பத்துடன் வினைத்திறனாக செய்வதாக தொழிற்றுறையாளர்கள் தெரிவிப்பதனையும் கவனத்திற்கொள்ள வேண்டும்.

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 133




அது இவ்வாறிருக்க தமிழ்நாட்டில் ஒரு அதிசயம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. கணனி தொழிற்றுறையில் குறிப்பாக தகவல் தொழில்நுட்பத்தில் பணிபுரியும் பட்டதாரிகள் ஏறக்குறைய மாதமொன்றிற்கு ஒன்றிலிருந்து இரண்டு இலட்சங்கள் வரை பெறும்சம்பளத்துடனான வேலையை இராஜினாமா செய்து விட்டு தற்போது பண்ணையாளர்களாக மாறி விவசாய செய்கையில் ஈடுபட்டு வருவதனை அறிய முடிகின்றது. இதற்காக அவர்கள் தரும் விளக்கம் விசித்திரமானதாகவும் பலருடைய கேள்விகளுக்கும் பிரச்சினைகளுக்கும் விடை தருவதாகவும் அமைந்திருக்கின்றது. கணனி தொழில் நுட்பத்தில் பணிபுரியும் ஒருபட்டதாரி கிடைக்கும் அதிகூடிய சம்பளத்தில் தமது வாழ்க்கை தரத்தை இயன்றளவுக்கு உயர்த்திக்கொள்ளுவதும் அதற்காக புதிய வசதி வாய்ப்புக்களை தேடும் போது பலஆண்டுகளுக்கான கடன்களை பெறவேண்டியிருப்பதாகவும் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு பெறும் கடன்களை அடைப்பதற்காக தம்மை குறிப்பிட்ட கணனி நிறுவனத்துடன் வேறுவழியின்றி பிணைமுறியுடனான பந்தத்தில் இணைத்துக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாகின்றனர்.

(தொடர்ச்சி 18 ஆம் பக்கம்)

### வாக்குப்பதிவு இயந்திரத்தில் முறைகேடு

# தேர்தல் ஆணையம் முன் ஆம் ஆத்மி போராட்டம்




(டில்லி)

வாக்காளர் அறிந்துகொள்ளும் ஒப்புகைச் சீட்டுடன் கூடிய வாக்குப்பதிவு எந்திரங்களை பயன்படுத்தக்கோரி டில்லியில் உள்ள தேர்தல் ஆணையம்முன் நேற்று முன்தினம் ஆம் ஆத்மி கட்சியினர் போராட்ட த்தில் ஈடுபட்டனர்.

உத்தரப்பிரதேசம் உள்ளிட்ட 5 மாநில சட்ட சபைகளுக்கும், டில்லி மாநகராட்சிக்கும் சமீபத்தில் நடந்த தேர்தல்களின் போது மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்களில் மோசடி செய்யப்பட்டதாக ஆம் ஆத்மி கட்சி குற்றம் சாட்டியது.


எனினும் இந்த எந்திரங்களில் மோச டிக்கே வாய்ப்பு இல்லை என தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது. ஆனால் மின்னணு வாக்குப்பதிவு எந்திரத்தில் மோசடி செய்வது எப்படி? என்பதை டில்லி சட்ட சபை யில் ஆம் ஆத்மி எம்.எல்.ஏ. சவுரப் பரத்வாஜ் கடந்த 9 ஆம் திகதி செய்து காட்டினார். இதற்காக மாதிரி மின்னணு வாக்குப்பதிவு எந்திரத்தை பயன்படுத்திய அவர், உண்மையான எந்திரத்திலும் இதுபோன்று தில்லு முல்லு செய்ய முடியும் என அறிவித் தார்.

இந்த நிலையில் தேர்தலில் யாருக்கு வாக்களித்தோம்? என்பதை வாக்காளர் அறிந்து கொள்ளும் ஒப்புகைச் சீட்டுடன் கூடிய வாக்குப் பதிவு எந்திரங்களை பயன்படுத்தக்கோரி டில்லியில் உள்ள தேர்தல் ஆணையம் முன் நேற்று முன்தினம் ஆம் ஆத்மி கட்சியினர் போராட்டத்தில் ஈடுபட்டனர். (இ-3)

# அ.தி.மு.க. இரு அணிகளும் இணைய வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்தில்லை- தங்கமணி

(சென்னை)

அ.தி.மு.க. இரு அணிகளும் இணைய வேண்டும் என்பதில் மாற்றுக்கருத்து இல்லை என்றும், பேச்சுவார்த்தை நடக்கிறது என்றும் மின்துறை அமைச்சர் தங்கமணி தெரிவித்தார்.



அ.தி.மு.க. அம்மா அணி நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் சென்னை ராயப்பேட்டையில் உள்ள கட்சியின் தலைமை அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடந்தது. இந்தக் கூட்டத்தில் தலைமை நிலைய செயலாளரும், முதலமைச்சருமான எடப்பாடி பழனிச்சாமி, பொருளாளரும் அமைச்சருமான திண்டுக்கல் சீனிவாசன், அமைச்சர்கள் செல்லூர் ராஜ், தங்கமணி, வேலுமணி, காமராஜ், எம்.சி. சம்பத், சரோஜா, டில்லி சிறப்பு பிரதிநிதி தளவாய் சுந்தரம் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

மாலை 6 மணிக்கு தொடங்கிய கூட்டம் 7.30 மணியளவில் முடிந்தது. இந்தக் கூட்டத்தில் டில்லியில் தேர்தல் ஆணையம் கூட்டியுள்ள மின்னணு வாக்குப்பதிவு எந்திரம் தொடர்பான கூட்டத்தில் அ.தி.மு.க. அம்மா அணி சார்பில் என்னென்ன கருத்துக்களை முன் வைப்பது? என்பது குறித்து விவாதிக்கப்பட்டதாக கூறப்படுகிறது. அமைச்சர்கள் மீது எதிர்க்கட்சிகள் தொடுத்துள்ள ஊழல் புகார் குறித்தும் பேசப்பட்டதாக தெரிகிறது.

கூட்டம் முடிந்து வெளியே வந்த மின்துறை அமைச்சர் தங்கமணி நிருபர்களுக்கு பேட்டியளித்தார். அவர் கூறும் போது, அ.தி.மு.க. இரு அணிகளும் இணைய வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. இதுதொடர்பாக பேச்சுவார்த்தை நடந்து கொண்டிருக்கிறது' என்றார். அப்போது அவரிடம், அமைச்சர் சரோஜா மீது பெண் அதிகாரி சுமத்தியுள்ள ஊழல் குற்றச்சாட்டு குறித்து கூட்டத்தில் விவாதிக்கப்பட்டதா? என்று நிருபர்கள் கேள்வி எழுப்பினர். அதற்கு 'இது கட்சி சம்பந்தமான கூட்டம். எனவே கட்சி நடவடிக்கைகள் குறித்து மட்டுமே ஆலோசிக்கப்பட்டது. வேறு எதுவும் ஆலோசிக்கப்படவில்லை.' என்றார்.


ஊழல் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ள சமூக நலத்துறை அமைச்சர் சரோஜாவிடம், 'அதுபற்றி நிருபர்கள் கேள்வி எழுப்பினர். ஆனால் அவர் எதுவும் கூறாமல் மௌனமாக புறப்பட்டு சென்றார். (இ-3)

# தென்கொரிய ஜனாதிபதி மாளிகையை அழிக்க வடகொரியா ஒத்திகை

## புகைப்படம் வெளியிட்டதால் பரபரப்பு

(சியோல்)

தென்கொரிய ஜனாதிபதி மாளிகையை அழிப்பது போன்று புகைப்படம் வெளியானதால் பரபரப்பு ஏற்பட்



டது. இதை பிரபல ஆங்கில நாளிதழ் ஒன்று வெளியிட்டுள்ளது.

வடகொரியா தொடர்ந்து அணுகுண்டு மற்றும் ஏவுகணைச்சோதனைகள் நடத்தி வருகிறது. வடகொரியாவின் இத்தகைய செயற்பாடு உலக நாடுகளை அச்சுறுத்தும் வகையில் உள்ளது.

இதனால் அமெரிக்காவுக்கும், வடகொரியாவுக்கும் இடையே போர் ஏற்படும் நிலை உருவாகியுள்ளது. இதனால் ஆத்திரம் அடைந்த வடகொரியா, அமெரிக்காவின் வெள்ளை மாளிகையை தாக்குவது போன்ற வீடியோவை வெளியிட்டு பரபரப்பை ஏற்படுத்தியது.

இத்தகைய செயலால் கடும் எரிச்சல் அடைந்த அமெரிக்காவும், தென் கொரியாவும் இணைந்து வடகொரிய ஜனாதிபதி கிம் ஜங் உன் ஐ கொல்ல சதித்திட்டம் தீட்டி வருவதாக புகார் கூறப்பட்டது.


இந்நிலையில் தென் கொரிய ஜனாதிபதி மாளிகையை முற்றிலும் அழிப்பது போன்ற புகைப்படம் வெளியாகி உள்ளது. இதை பிரபல ஆங்கில நாளிதழ் வெளியிட்டுள்ளது.

அந்த புகைப்படம் செயற்கைக்கோளில் இருந்து எடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இது வடகொரியாவின் சதி ஆக இருக்கக்கூடும் என்று கூறப்படுகிறது.

கடந்த ஆண்டு வடகொரிய இராணுவ வீரர்கள் அதிரடி பயிற்சியில் ஈடுபட்டனர். அப்போது அவர்கள் தென் கொரியாவின் புளூ ஹவுஸ் பகுதியை தாக்குவது போன்ற புகைப்படம் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியது குறிப்பிடத்தக்கது. (இ-3)

# 6 முறை மாரடைப்பு, 12 மணிநேர அறுவை சிகிச்சையின் பின் உயிர்பிழைத்த குழந்தை



(மும்பை)

மராட்டிய மாநிலம் கல்யான் பகுதியில் விசாகா மற்றும் வினோத் தம்பதிக்கு கடந்த 4 மாதங்களுக்கு முன்னர் பிஜே வாடியா வைத்தியசாலையில் குழந்தை பிறந்தது.

குழந்தை பிறந்து சில தினங்கள் கழித்து வீட்டிற்கு கொண்டு செல்லப்பட்டது. 45ஆவது நாளில் அந்த குழந்தை வாந்தி எடுத்து மயங்கி விழுந்துள்ளது. இதனால் அதிர்ச்சி யடைந்த அக்குழந்தையின் பெற்றோர் உடனடியாக பிஜே வாடியா வைத்தியசாலைக்கு எடுத்து சென்றனர்.

அங்கு அந்த குழந்தைக்கு முழு பரிசோதனை செய்தனர். பரிசோதனையில் அந்த குழந்தை இதய பாதிப்புடன் இருப்பது தெரியவந்ததை தொடர்ந்து வைத்தியர்கள் அதிர்ச்சியடைந்தனர். குழந்தைக்கு உடனடியாக அறுவைச்சிகிச்சை செய்ய வேண்டும் என்று வைத்தியர்கள் கூறினர். பெற்றோர் ஒப்புதலுடன் அக் குழந்தைக்கு கடந்த மார்ச் மாதம் 14 ஆம் திகதி அறுவைச் சிகிச்சை செய்தனர். இந்த அறுவைச் சிகிச்சை சுமார் 12 மணி நேரம் வரை நீடித்தது.

இதனையடுத்து அக் குழந்தைக்கு இதயம் சீராக வந்தது. ஆனால் நுரையீரல் சரியாக இயங்கவில்லை. தொடர்ந்து குழந்தையின் இரத்தத்தில் ஒட்சிசன் அளவு தொடர்ச்சியாக குறைந்த கொண்டே வந்தது. காபன்டை ஓட்சைட் அளவு அதிகரித்தது. இதனால்வைத்தியர்கள் கவலையடைந்தனர். கடந்த 51 நாட்களாக அந்த குழந்தை ஐசியுவில் வைக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது. அப்போது அந்த குழந்தைக்கு 6 முறை மாரடைப்பு ஏற்பட்டது.

அதனைத் தொடர்ந்து அக்குழந்தைக்கு அறுவைச் சிகிச்சை, செய்யப்பட்டது. நுரையீரல் செயற்பாட்டுக்கு கொண்டு வர வென்டிலேட்டர் பயன்படுத்தப்பட்டது. தொடர்ந்து அக் குழந்தையின் நுரையீரல் சரியாக இயங்கி வருகிறது. இதனால் வைத்தியர்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

அக்குழந்தையின்பெற்றோர் குழந்தை உயிர் பிழைத்ததைக்கண்டு ஆனந்த கண்ணீர் விட்டனர். (இ-3)




# ஐ.எஸ்.தீவிரவாதிகளிடமிருந்து சிரியாவின் ரக்கா நகர் மீட்பு

(ரக்கா)

சிரியாவில் ஐ.எஸ். தீவிரவாதிகளிடம் இருந்த முக்கிய நகரமான ரக்காவை குர்தீஷ் மற்றும் அரபு படையினருடன் இணைந்து இராணுவம் மீட்டுள்ளது.

சிரியா மற்றும் ஈராக்கில் ஐ.எஸ். தீவிரவாதிகள் பிடியில் உள்ள பல பகுதிகளை ராணுவம் மீட்டுள்ளது. ஈராக்கில் மொசூல் நகரை தவிர அனைத்து பகுதிகளும் மீட்கப்பட்டு விட்டன.

இதேபோல சிரியாவிலும் பெரும் பகுதிகள் மீட்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில் ஐ.எஸ். தீவிரவாதிகளின் தலைநகரம் ராக்காவுக்கு அருகே உள்ள தப்கா நகரை தற்போது இராணுவத்தினர் மீட்டுள்ளனர். குர்திஷ் மற்றும் அரபு படையினருடன் சேர்ந்து இந்த நகரம் மீட்கப்பட்டுள்ளது.

இந்த நகருக்கு அருகே பெரிய அணை ஒன்று உள்ளது. அதுவும் ஐ.எஸ். தீவிரவாதிகள்பிடியில்தான் இருந்தது.

அந்த அணையையும் மீட்டுள்ளனர். இதன் காரணமாக இராணுவம் ரக்கா நகருக்குள் நுழைவதற்கான வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. சிரியாவில் ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு எதிராக குர்திஷ் படையினர் தீவிரமாக போரிட்டு வருகின்றனர்.

அவர்களுக்கு அமெரிக்கா ஆயுத உதவிகளை செய்து வருகிறது. அதே நேரத்தில் குர்தீஸ் படையினர் துருக்கி நாட்டுக்கும் எதிராக செயற்பட்டு வருகின்றனர்.

எனவே குர்திஷ் படைக்கு ஆயுத உதவி வழங்கியதற்காக அமெரிக்காவுக்கு துருக்கி ஜனாதிபதி கண்டனம் தெரிவித்துள்ளார். (இ-3)



# ராட்சத பறவையின் படிமம் கண்டுபிடிப்பு



(பீஜிங்)

சீனாவில் பழங்காலத்தில் வாழ்ந்த 3 ஆயிரம்கிலோ எடை கொண்ட ராட்சத பறவையின் புதைபடிமம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பல இலட்சம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த ராட்சத மிருகமான டைனோசர்களின் புதைபடிமம் உலகம் முழுவதும் ஆங்காங்கே கிடைத்து வருகிறது. இதே போல டைனோசர் காலத்தில் வாழ்ந்த ராட்சத பறவையின் புதைபடிமம் ஒன்று தற்போது சீனாவில் கிடைத்துள்ளது. அங்குள்ள கனான் என்ற இடத்தில் ஆய்வு செய்த போது இதன் புதைபடிமம் கிடைத்தது.

அதை வைத்து பார்க்கும் போது இந்த பறவை 3 ஆயிரம் கிலோ எடையும், 8 மீற்றர் உயரமும் இருந்திருக்க வேண்டும் என்று கருதுகிறார்கள். இந்த பறவைக்கு பெய்பிலாங் என்று பெயரிட்டுள்ளனர்.

1990ஆம் ஆண்டு வாக்கில் பகுதியில் 40 செ.மீ. உயரம், 5 கிலோ எடை கொண்ட ராட்சத பழங்கால முட்டைகள் ஏராளமான கிடைத்தன. அவை இந்த பறவையின் முட்டையாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது. இந்த பறவைகள் 9 கோடி ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்து இருக்கலாம் என்றும் கருதப்படுகிறது. (இ-3)

# தண்டவாளத்தில் தவறி விழுந்த பெண்ணை காப்பாற்ற புகையிரதத்தை புரட்டிய பயணிகள்



(பீஜிங்)

சீனாவில் 100 தொன் புகையிரதத்தை தள்ளி தண்டவாளத்தில் தவறி விழுந்த பெண்ணை பயணிகள் காப்பாற்றினர்.

பெண் உயிருடன் மீட்கப்பட்டதை அனைவரும் உற்சாகமாக கொண்டாடினர்.

சீனாவில் குவாங்ஷ மாகாணத்தில் சுரங்க புகையிரதம் சென்று கொண்டிருந்தது. அது வழியில் ஒரு புகையிரத நிலையத்தில் நின்றது. அப்போது அதில் இருந்து இறங்கிய 72 வயது பெண் தவறி விழுந்தார்.

அவர் புகையிரதத்திற்கும், பிளாட்பாரத்துக்கும் இடையில் சிக்கிக் கொண்டார். இதனால் பதற்றமும் பரபரப்பும் ஏற்பட்டது. உடனே புகையிரத பயணிகள் விரைந்து சென்று புகையிரதம் புறப்படாமல் தடுத்து நிறுத்தினர். பின்னர் அந்த பெண்ணை வெளியே இழுத்து தூக்க முயன்றனர். ஆனால் முடியவில்லை. எனவே புகையிரதப் பயணிகள் அனைவரும் பெட்டிகளில் இருந்து கீழே இறங்கினர்.

பெண் சிக்கியிருந்த புகையிரதப் பெட்டியை அனைவரும் ஒன்று சேர்ந்து பக்கவாட்டில் கீழே தள்ளி சாய்த்தனர். அந்த புகையிரதப் பெட்டி 100 தொன் எடை இருந்தது. ஒரு வழியாக புகையிரதப் பெட்டியை சாய்த்த பின் சிக்கி கிடந்த பெண்ணை பத்திரமாக உயிருடன் மீட்டனர். (இ-3)

# ஐக்கிய அரபு எமிரேட்டிற்கு ஏவுகணைகளை விற்பனை செய்வதற்கு அமெரிக்கா ஒப்புதல்

ஐக்கிய அரபு எமிரேட்டிற்கு 200 கோடி அமெரிக்க டொலர்கள் மதிப்பிலான ஏவ்கணைகளை விற்பனை செய்ய அமெரிக்கா ஒப்புதல்வழங்குவதாக பென்டகன் தெரிவித்துள்ளது. ஐக்கிய அரபு எமிரேட் அரசு சார்பில் 60 பேட்ரியாட் ஏவுகணைகள், 100 பேட்ரியாட் கைடடு அதிநவீன ஏவுகணைகள் மற்றும் இதர இராணுவ உபகரணங்கள் உள்ளிட்டவை அமெரிக்காவிடம் கோரப்பட்டிருந்ததாக பாதுகாப்புத்துறை அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

அமெரிக்கா மற்றும் ஐக்கிய அரபு எமிரேட் இடையேயான ஒப்பந்தம் வெளி நாட்டு உறவு, தேசிய பாதுகாப்பு உள்ளிட்டவற்றை மேம்படுத்த வழி செய்வதாக அமையும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

# மசூதி அருகே குண்டு வெடிப்பு பத்துப்பேர் உயிரிழப்பு

## பாராளுமன்ற துணை சபாநாயகர் படுகாயம்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானின் பலுசிஸ்தான் மாகாணத்தில் நேற்று மசூதி அருகே நடத்தப்பட்ட தீவிரவாத தாக்குதலில் பத்து பேர் உயிரிழந்தனர். அந்நாட்டின்பாராளுமன்ற துணை சபாநாயகர் படுகாயம் அடைந்தார்.

பாகிஸ்தானின் பலுசிஸ்தான் மாகாணத்தில் உள்ள மஸ்டுங் பகுதியில் உள்ள மசூதியில் நேற்று வெள்ளிக்கிழமை ஜும்மா தொழுகை நடைபெற்றது.

அப்போது அப்பகுதியில் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில்பத்து பேர் உயிரிழந்தனர்.

அந்நாட்டின் பாராளுமன்ற துணை சபாநாயகர் மவுலானா அப்துல் கபூர் ஹைதரி படுகாயம் அடைந்தார் என முதல்கட்ட தகவல் வெளியாகியுள்ளது. (இ-3)



# திருமண மண்டப சுவர் இடிந்து 26 பேர் பலி

## பிரதமர் மோடி இரங்கல்



(பரத்பூர்)

ராஜஸ்தானில் திருமண மண்டப சுவர் இடிந்து விழுந்ததில் 24 பேர் பலியாகினர்.

அவர்களது குடும்பத்துக்கு பிரதமர் மோடி ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளதுடன், தலா ரூ.2 இலட்சம் நிவாரணமும் அறிவித்துள்ளார்.

ராஜஸ்தான் மாநிலத்தின் பரத்பூர் மாவட்டத்தில் கடந்த 10ஆம் திகதி இரவு கடுமையான புயல் வீசியது. அப்போது பரத்பூரில் உள்ள ஒரு திருமண மண்டபத்தில் திருமணம் நடந்து கொண்டிருந்தது.

புயல் காற்றில் இருந்து தப்பிப்பதற்காக திருமணத்துக்கு வந்திருந்தவர்கள், மண்டபத்துக்குள் அமர்ந்து இருந்தனர்.

அப்போது திடீரென அந்த மண்டபத்தின் சுவர் இடிந்து விழுந்தது.

இந்தக் கட்டட இடிபாடுகளுக்குள் சிக்கி 24 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

அவர்கள் அனைவரும் மணப்பெண்ணின் உறவினர்கள் ஆவர். மேலும் இந்த விபத்தில் சுமார் 40 பேர் படுகாயமடைந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-3)

# நீதிபதி கர்ணன் தண்டனை உத்தரவை உடன் நிறுத்த உச்ச நீதிமன்று மறுப்பு

(டில்லி)


நீதிபதி கர்ணனின் தண்டனை தொடர்பான உத்தரவை உடனடியாக நிறுத்தி வைக்க முடியாது என உச்ச நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

நீதிமன்ற அவமதிப்பு வழக்கில், கொல்கத்தா உயர் நீதிமன்ற நீதிபதி கர்ணனை கைது செய்து 6 மாதம் சிறையில் அடைக்கும்படி உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது. இந்த உத்தரவை அமுல்படுத்த மேற்கு வங்க பொலிஸாருக்கு உத்தரவிடப்பட்டது. அதன்படி கொல்கத்தாவில் இருந்து தனிப்படை பொலிஸார் சென்னை வந்து, சென்னை சேப்பாக்கத்தில் தங்கியிருந்த நீதிபதிகர்ணனை கைது செய்ய முயன்றனர்.

ஆனால், அதற்குள் நீதிபதி கர்ணன் அங்கிருந்து வெளியேறிவிட்டார். அவர் எங்கு இருக்கிறார்? என்பது தெரியாத நிலையில், அவரை கண்டுபிடிப்பதற்கான முயற்சியில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

இந்நிலையில், நீதிபதி கர்ணனை கைது செய்யும் உத்தரவை நிறுத்தி வைக்க வேண்டும் என்றும், தங்கள் மனுவை அவசர வழக்காக விசாரிக்க வேண்டும் என்றும் உச்ச நீதிமன்றத்தில் அவரது சட்டத்தரணி முறையிட்டார். நீதிபதி கர்ணன் மன்னிப்பு கேட்க விரும்புவதாகவும் கூறினார். ஆனால், கைது செய்யும் உத்தரவை உடனே நிறுத்தி வைக்க உச்ச நீதிமன்ற பதிவகம் மறுத்துவிட்டது.

மேலும், தங்கள் கோரிக்கையை மனுவாக தாக்கல் செய்தால், நீதிபதிகள் விசாரிப்பார்கள் என்றும் உச்ச நீதிமன்றம் தெரிவித்துள்ளது. (இ-3)



# தேர்தல் ஆணையத்திடம் ஓ.பி.எஸ். அணி 12,600 பக்க பிரமாண பத்திரம் தாக்கல்

(டில்லி)

ஓ.பன்னீர்செல்வம் அணி சார்பில் ஏற்கனவே 20,000 பக்கங்கள் கொண்ட பிரமாண பத்திரம் தாக்கல் செய்யப்பட்ட நிலையில் நேற்று கூடுதலாக 12,600 பக்கங்கள் கொண்ட பிரமாண பத்திரம் தேர்தல் ஆணையம் முன் தாக்கல் செய்யப்பட்டது.

ஜெயலலிதா மறைவைத் தொடர்ந்து அ.தி.மு.கவில் பிளவு ஏற்பட்டது. சசிகலா தலைமையில் ஒரு அணியினரும், ஓ.பன்னீர்செல்வம் தலைமையில் மற்றொரு அணியினரும் செயற்பட்டு வருகிறார்கள்.


கட்சி பிளவுக்குப் பின் ஆர்.கே.நகர் தொகுதி இடைத் தேர்தல் வந்ததால் இரு அணி சார்பில் தனித்தனியாக வேட்பாளர்கள் நிறுத்தப்பட்டனர். அவர்கள் இருவருமே இரட்டை இலை சின்னத்துக்கு உரிமை கோரியதால் இதில் உரிய முடிவு எடுக்க தேர்தல் ஆணையத்திற்கு கால அவகாசம் இல்லை என்று கூறி சின்னமும், கட்சி பெயரும் முடக்கப்பட்டது.

சசிகலா ஆதரவாளர்கள் தங்கள் கட்சிக்கு அ.தி.மு.க. அம்மா கட்சி என்றும் ஓ.பி.எஸ். ஆதரவாளர்கள் தங்கள் கட்சிக்கு அ.தி.மு.க. புரட்சித்தலைவி அம்மா கட்சி என்றும் பெயரைத் தேர்வு செய்தனர். அ.தி.மு.க. அம்மா கட்சிக்கு தொப்பி சின்னமும், அ.தி.மு.க. புரட்சித்தலைவி அம்மா கட்சிக்கு மின் விளக்கு கம்பமும் ஒதுக்கப்பட்டது.

அ.தி.மு.க. பெயர், இரட்டை இலை சின்னம் தொடர்பாக இரு தரப்பினரும் தாக்கல் செய்த மனுக்கள் தேர்தல் ஆணையம் முன் விசாரணையில் உள்ளது. இரு அணியினரும் தங்கள் பக்கம் உள்ள மாவட்ட செயலாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், எம்.பிக்கள், எம்.எல்.ஏ.க்கள் பட்டியலை அவர்களிடம் கையெழுத்து பெற்று பிரமாண பத்திரமாக தாக்கல் செய்துள்ளனர். பல ஆயிரம் பக்கங்கள் கொண்டதாக உள்ளது.

இந்த நிலையில் ஓ.பன்னீர்செல்வம் அணி சார்பில் ஏற்கனவே 20,000 பக்கங்கள் கொண்ட பிரமாண பத்திரம் தாக்கல் செய்யப்பட்ட நிலையில் நேற்று கூடுதலாக 12,600 பக்கங்கள் கொண்ட பிரமாண பத்திரம் தேர்தல் ஆணையம் முன் தாக்கல் செய்யப்பட்டது.

அதில் ஓ.பி.எஸ். அணியை ஆதரிக்கும் நிர்வாகிகள், தொண்டர்களின் கையெழுத்துடன் புதிய ஆதாரம் தாக்கல் செய்யப்பட்டது. இதை தேர்தல் ஆணையம் பரிசீலித்து வருகிறது. (இ-3)



# மலையக மக்களுக்கு வீடமைக்க இந்தியா நிதி உதவி வழங்கும்

## மோடி முன்னிலையில் ரணில் நம்பிக்கை; இந்தியாவின் அன்பை தக்க வைக்க விருப்பம்

நாட்டின் ஒருமைப்பாட்டிற்கு பெரும் பங்களிப்பு செய்துவரும் மலையக மக்களுக்கான வீட்டுத் திட்டங்களை ஏற்படுத்தி கொடுப்பதற்கான நிதி உதவிகளை பெற்றுக் கொடுப்பது தொடர்பில் இந்திய பிரதமர் நரேந்திர மோடி கூடுதல் கவனம் செலுத்துவார் என நம்பிக்கை கொள்வதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

டிக்கோயா கிளங்கன் வைத்தியசாலையை நேற்றுத் திறந்து வைத்த பிரதமர் நரேந்திர மோடிக்கு நன்றி பாராட்டி நோர்வூட் மைதானத்தில் இடம்பெற்ற விசேட கூட்டத்தில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர், “இந்திய அரசாங்கத்தின் நிதியுதவியில் நிர்மாணிக்கப்பட்ட டிக்கோயா கிளங்கன் வைத்தியசாலை திறந்து வைக்கப்பட்டதன் மூலம் நோர்வூட் மக்களின் பாரிய குறை தீர்க்கப்பட்டுள்ளது. அதன்படி இவ் வைத்தியசாலையை திறந்து வைத்த இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதேபோன்று இந்தியா எம்மீது கொண்டுள்ள அன்பை தொடர்ந்து தக்க வைத்துக் கொள்ள நாம் விரும்புகின்றோம்.

இந்திய வம்சாவளி மக்கள், பெருந்தோட்ட மக்கள் ஆகியோர் இலங்கையின் அபிவிருத்தியில் பெரும் பங்கு வகிக்கின்றனர். அதேபோன்று நாட்டின் தேசிய ஒருமைப்பாட்டிற்கு முக்கிய பங்காற்றிய மலையக மக்கள் காணியற்ற நிலையில் வாழ்ந்து வந்தனர். அந்த குறைப்பாட்டை தீர்க்கும் வகையில் அவர்களுக்கு ஏழு பேர்ச் காணி வழங்கப்பட்டது. எதிர்காலத்தில் இந்த நடவடிக்கையை மேலும் துரிதப்படுத்த எதிர்பார்த்துள்ளோம்.

அதன்படி மக்களுக்கு வீட்டுத் திட்டங்களை ஏற்படுத்தி கொடுக்கவும் நடவடிக்கை எடுக்கவுள்ளோம். அதற்கான நிதி உதவிகளை வழங்குவது தொடர்பில் பிரதமர் நரேந்திர மோடி கூடுதல் கவனம் செலுத்துவார் என நாம் நம்புகின்றோம்” எனவும் தெரிவித்தார். (இ-7)


## மாவட்ட செயலகம், கிளிநொச்சி

## குடிசார் வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல்

கிளிநொச்சி மாவட்டச் செயலாளரினால் பின்வரும் விபரங்களைக் கொண்ட குடிசார் வேலைகளுக்கு கேள்விகள் கோரப்படுகின்றன.

| | ஒப்பந்த இலக்கம் | ஒப்பந்த பெயர் நிர்மாணம் | ஒப்பந்த தொகை | வேண்டப்படும் ஆகக்குறைந்த ICTAD தரம்/பதிவு | கேள்விப் பிணைப்பணம், செல்லுபடியாகும் காலம் |
|---|---|---|---|---|---|
| 1 | KN/DPS/D04/DMT/ A.V.K/169-1 | அக்கராயன் கமநல சேவைகள் நிலையத்திற்கு உட்பட்ட ஆனைவேட்டைக் குளம் புனரமைத்தல் | 1.43 மில்லியன் (வற். ஏனைய நீங்கலாக) | C9 or above Irrigation & Land Drainage | ரூபா-14,500.00 வங்கி பிணை 23/08/2017வரை |
| 2 | KN/DPS/D04/DMT/ K.R.K/169-2 | பளை கமநல சேவைகள் நிலையத்திற்கு உட்பட்ட கிராஞ்சிக்குளம் புனரமைத்தல் | 3.25 மில்லியன் (வற். ஏனைய நீங்கலாக) | C8 or above Irrigation & Land Drainage | ரூபா-32,500.00 வங்கி பிணை 06/09/2017வரை |
| 3 | KN/DPS/D04/DMT/ M.M.K/169-3 | இராமநாதபுரம் கமநல சேவைகள் நிலையத்திற்கு உட்பட்ட மம்மிக்குளம் புனரமைத்தல் | 2.46 மில்லியன் (வற். ஏனைய நீங்கலாக) | C8 or above Irrigation & Land Drainage | ரூபா-25,000.00 வங்கி பிணை 06/09/2017வரை |
| 4 | KN/DPS/D04/DMT/ M.N.K/169-4 | அக்கராயன் கமநல சேவைகள் நிலையத்திற்கு உட்பட்ட மணியம் குளம் புனரமைத்தல் | 4.13 மில்லியன் (வற். ஏனைய நீங்கலாக) | C8 or above Irrigation & Land Drainage | ரூபா-41,500.00 வங்கி பிணை 06/09/2017வரை |
| 5 | KN/DPS/D04/DMT/ P.G.K/169-5 | பளை கமநல சேவைகள் நிலையத்திற்கு உட்பட்ட பூவரசங்கேணி குளம் புனரமைத்தல் | 1.62 மில்லியன் (வற். ஏனைய நீங்கலாக) | C9 or above Irrigation & Land Drainage | ரூபா-16,500.00 வங்கி பிணை 23/08/2017வரை |
| 6 | KN/DPS/D04/DMT/ P.N.K/169-6 | புளியம்பொக்கணை கமநல சேவைகள் நிலையத்திற்கு உட்பட்ட புன்னை நீராவிக்குளம் புனரமைத்தல் | 1.37 மில்லியன் (வற். ஏனைய நீங்கலாக) | C9 or above Irrigation & Land Drainage | ரூபா-14,000.00 வங்கி பிணை 23/08/2017வரை |
| 7 | KN/DPS/D04/DMT/ V.L.K/169-7 | புளியம்பொக்கணை கமநல சேவைகள் நிலையத்திற்கு உட்பட்ட வேலன் குளம் புனரமைத்தல் | 2.32மில்லியன் (வற். ஏனைய நீங்கலாக) | C8 or above Irrigation & Land Drainage | ரூபா-23,500.00 வங்கி பிணை 06/09/2017வரை |
| 8 | KN/DPS/D16/ONU/ PS/A.K.M/467-1 | அக்கராயன் கமநல சேவைகள் நிலையத்திற்கு உட்பட்ட நெற்களஞ்சியசாலை நிர்மாணம் | 4.24 மில்லியன் (வற். ஏனைய நீங்கலாக) | C8 or above Building | ரூபா 42,500.00 வங்கி பிணை 23/08/2017வரை |

1. பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்தகாரர்களும் கேள்வி கோருவதற்கு தகுதியுடையவராவார்.

I. நிர்மாணப்பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தால் இக்ராட் (ICTAD/CIDA) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்ததாரரை பதிவு செய்யும் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்ததாரர் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும்.

II. இக்ராட் (ICTAD/CIDA) வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையை பொறுப்பேற்பவர் போதியளவு ஒப்பந்தங்களை மேற்கொண்ட ஆற்றலை கொண்டிருக்க வேண்டும்.

III. ஒப்பந்ததாரர் மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு அல்லது திருப்திகரமற்ற வேலைச் செயற்றிறனுக்கு உட்பட்டு தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் இருக்கக்கூடாது.

2. ஆர்வமுள்ள தகுதிவாய்ந்த கேள்விதாரர்கள் கேள்விகள் தொடர்பான மேலதிக தகவல்களை கிளிநொச்சி மாவட்டச் செயலக நிர்வாகக் கிளையில் பெற்றுக்கொள்ளலாம். (தொ.பே. இல:-021 228 5357, பக்ஸ் இல:-021 228 3966)

3. கேள்வி ஆவணங்களை 15.05.2017 ஆம்திகதியிலிருந்து 05.06.2017ஆம்திகதிவரை காலை 9.30மணி முதல் பிற்பகல் 3.00மணிவரை வேலை நாட்களில் கிளிநொச்சி மாவட்ட செயலக நிர்வாகக்கிளையில் மீளளிக்கப்படாத ரூபா 2000.00கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

4. இரு அரக்கு முத்திரை இடப்பட்ட உறைகளில் (மூலப்பிரதி, பிரதி) தனித்தனியாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலையிடப்பட்ட கேள்வியையும், கேள்வி கோருவோரின் முன் தகுதிக்கு அவசியமான ஆவணத்தையும் கேள்விகள் கொண்டிருக்க வேண்டும் என்பதுடன் அது தொடர்பாக பந்தி 5இல் குறிப்பிடப்பட்டுள்ள இடம் திகதி மற்றும் நேரம் ஆகியவற்றுக்கு ஒப்படைத்தல் வேண்டும்.

5. அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் யாவும் தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, மாவட்டச்செயலகம் கிளிநொச்சி எனும் விலாசத்திற்கு 07.06.2017 ஆம் திகதி முற்பகல் 10.00மணிக்குமுன் கிடைக்கப்பெறல் வேண்டும். உடனடியாக கேள்விகள் திறக்கப்படும். கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விதாரர்கள் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்க முடியும்.

6. கேள்விகள் தயாரிப்பு அல்லது ஒப்படைப்புக்கு கேள்விதாரர்களுக்கு ஏற்படும் ஏதாவது செலவுகளுக்கு அல்லது செலவீனாங்களுக்கு தொழில் தருநர் பொறுப்பாகமாட்டார்.

7. தாமதமாக கிடைக்கும் விலையிடப்பட்ட கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்பதுடன் நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட நிதிச்சுற்றறிக்கை 04/2016க்கு அமைவாக வடக்கு மாகாணத்தை சார்ந்தவர்களுக்கு முன்னுரிமையளிக்கப்படும்.

சுந்தரம் அருமைநாயகம்,
திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவரும்,
அரசாங்க அதிபர்/மாவட்டச்செயலாளர்,
கிளிநொச்சி மாவட்டம்.

(C/8540)


## கலைஞர்கள் விண்ணப்பிக்கலாம்

வடக்கு மாகாணக் கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் கலாசாரத்துறைக்கு பணியாற்றிய கலைஞர்களை கௌரவிக்கும் முகமாக மாகாண மட்டத்தில் வழங்கப்படும் விருதான கௌரவ முதலமைச்சர் விருது - 2017, இளம் கலைஞர் விருது - 2017 இற்குரிய ஆளுமை மிக்க கலைஞர்களைத் தேர்வு செய்வதற்கு விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

முதலமைச்சர் விருது - 2017

ஆக்க இலக்கியம் - (சிறுகதை /நாவல்), கவிதை இலக்கியம், நாடக இலக்கியம்- (வடமோடி, தென்மோடிக்கூத்து, வடபாங்கு, தென்பாங்கு கூத்து, இசைநாடகம், நவீன நாடகம், காத்தவராயன் கூத்து போன்ற கலைத்துறைகளில் பனுவல்களை ஆக்கும் கர்த்தாக்களைக் குறிக்கும்)

உரையியல்- (கட்டுரையாளர், உரையாசிரியர் தமிழ் இலக்கண இலக்கிய நூல்களையும் பொருள் விளக்கங்களை எழுதும் படைப்பாளிகள்), வாத்தியக் கலை- (தவில், நாதஸ்வரம், புல்லாங்குழல், மிருதங்கம், வயலின், வீணை, ஓர்கன், ஆர்மோனியம் போன்றன) , நடனம், ஓவியம், சிற்பம், கூத்து- (வடமோடி, தென்மோடி, காத்தவராயன் ), நாடகம், சினிமா-(திரைப்படம், குறுந்திரைப்படம்), கிராமியக் கலைகள்- (கரகம், காவடி, கும்மி, நோலாட்டம்,வசந்தன் கூத்து, பொம்மலாட்டம் போன்றன), வில்லுப்பாட்டு, இசைக்கலை- (வாய்ப்பாட்டு, பண்ணிசை, இசையமைப்பு), சொற்பொழிவு, புகைப்படம், ஆய்வும் விமர்சனமும், ஊடகம்- (பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி, இணையம்), ஒப்பனை- (நாடகங்கள், கூத்துக்கள், நடனக் கலைத்துறைக்கு உரியவை), வாத்திய உருவாக்கம்- (மிருதங்கம், தபேலா, தவில், நாதஸ்வரம் போன்றன), கைவினைக்கலை- (விக்கிரக வார்ப்பு மற்றும் கல்களுடன் தொடர்புடையவை, மட்பாண்டம் பன்ன வேலை), இசை நாடகம் ஆகிய துறைசார்ந்த 2017.06.15 அன்று 60 வயதினை பூர்த்தியடைந்த யாழ்ப்பாண பிரதேச செயலர் பிரிவினை நிரந்தர வதிவிடமாகக் கொண்ட அனைத்து கலைஞர்களும் விண்ணப்பிக்க முடியும் என பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (இ)


## நேர்முகப் பரீட்சை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தினால் கலைமாணி பட்டப்படிப்பிற்கான (அரையாண்டு அடிப்படை) நேர்முகப் பரீட்சை - 2013/2014 (வெளிவாரி) இம்மாதம் 23 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முதல் 27 ஆம் திகதி சனிக்கிழமை வரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள திறந்த மற்றும் தெலைக்கல்வி நிலையத்தில் இடம்பெறவுள்ளது. நேர்முகப் பரீட்சைக்கான அழைப்பிதழ் கடிதங்கள் தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

விண்ணப்பித்தும் அழைப்பிதழ் கடிதங்கள் கிடைக்கப் பெறாதோர் நிலையத்துடன் 18.05.2017 வியாழக்கிழமை முற்பகல் 10 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளுமாறு பணிப்பாளர் பேராசிரியர் பா.நிமலதாசன் அறிவித்துள்ளார். (இ-3)

# அதிகாரத்தை கைப்பற்ற சதித்திட்டம் தீட்டவில்லை

## என்கிறார் மகிந்த ராஜபக்ஷ



(கொழும்பு)

**நாட்டின் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு கூட்டு எதிரணி சதித்திட்டம் எதையும் தீட்டவில்லை என்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

கண்டி தலதா மாளிகையில் நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் பேசும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

நாங்கள் தனியார் மயமாக்கலையும் நாட்டின் தேசிய வளங்கள் விற்கப்படுவதையும் மட்டுமே எதிர்க்கிறோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

சில நாட்களின் முன்னர், நாட்டின் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான நேரம் வந்துவிட்டதாகவும் பொருத்தமான நேரத்தில் அதனைச் செய்வோம் என்றும் மகிந்த ராஜபக்ஷ கூறியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# இலங்கைக்கான இராணுவ உதவிகளை நிறுத்துவோம்!

## பிரித்தானிய தொழிற்கட்சி வாக்குறுதி

(கொழும்பு)

இலங்கைக்கான இராணுவ உதவிகள் இடைநிறுத்தப்படும் என பிரிட்டன் தொழிற்கட்சி உறுதியளித்துள்ளதாக, கொழும்பு பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது. பிரிட்டனில் விரைவில் நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் இந்த வாக்குறுதி வழங்கப்பட்டுள்ளது.



பிரிட்டன் தொழிற் கட்சியின் தலைவர் ஜெரொமி கோர்பின், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான புலம்பெயர் சமூகத்துடன் நெருங்கிய தொடர்பு பேணி வருவதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இந்த நெருங்கிய தொடர்பு காரணமாக இலங்கைக்கு வழங்கப்பட்டு வரும் இராணுவ உதவிகளை தாம் ஆட்சிக்கு வந்தால் இடைநிறுத்துவதாக கோர்பிக் உறுதியளித்துள்ளார். மேலும், இலங்கை வாழ் தமிழ் மக்களுக்கு சுயாட்சி அதிகாரங்களை வழங்க பிரிட் டன் செயற்படும் என தெரிவித்துள்ளார் என ஊடகம்மேலும்செய்தி வெளியிட்டுள்ளது. (இ-7)

# மோடியை நள்ளிரவில் சந்தித்தார் மகிந்த

இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுள்ள இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்று முன்தினம் நள்ளிரவில் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

இறுக்கமான நிகழ்ச்சி நிரலுடன் இலங்கைக்கான பயணத்தை மேற்கொண்டுள்ள இந்தியப்பிரதமர்நரேந்திர மோடி, இலங்கையில் குறிப்பிட்ட சில தரப்பினரை மாத்திரம் சந்திக்கத் திட்டமிட்டிருந்தார்.

அந்த சந்திப்பு பட்டியலில் மகிந்த ராஜபக்ஷவின் பெயர் இடம்பெற்றிருக்கவில்லை.

இந்த நிலையில், நேற்று முன்தினம் மாலை கொழும்பு வந்த இந்தியப் பிரதமரைச் சந்திப்பதற்கு நேரம் ஒதுக்கித் தருமாறு, இந்தியத் தூதுவர் ஊடாக மகிந்த ராஜபக்ஷ கோரிக்கை ஒன்றை விடுத்திருந்தார்.

இதற்கமைய, நேற்று முன்தினம் நள்ளிரவு மகிந்த ராஜபக்ஷ, இந்தியப் பிரதமரைச் சந்தித்து கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்பு மகிந்த ராஜபக்ஷவின் வேண்டுகோளின் பேரில் இடம்பெற்றதாக இந்தியத் தூதுவர் தரண்ஜித் சிங் சந்து தெரிவித்தார்.



கொழும்பில் மகிந்த ராஜபக்ஷ தலைமையில் நடந்த மே தினப் பேரணியில், கூட்டு எதிரணியின் தலைவர்களில் ஒருவரான விமல் வீரவன்ச, இந்தியப் பிரதமருக்கு கறுப்புக்கொடி காண்பிக்குமாறு கோரிக்கை விடுத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# பிரதியமைச்சரையும் வைத்தியரையும் சமாதானம் செய்து வைத்த பௌத்த தேரர்

(கொழும்பு)

பிரதியமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க மற்றும் அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் அனுருத்த பாதெனிய ஆகியோர் தமக்கிடையேயான மோதல்களை கைவிட்டுள்ளனர்.

பிரதியமைச்சரும், வைத்தியர் பாதெனியவும் கொழும்பு கிறகரி வீதியில் உள்ள சங்கபோதி விகாரையில் நேற்று முன்தினம் நடந்த வெசாக் சமய சொற்பொழிவு நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

அப்போது தரணகம குசலதஹாம் தேரர் இருவரும் பகையை கைவிட்டு சமாதானமாக இருக்குமாறு அறிவுறுத்தியுள்ளார்.

தேரர் வழங்கிய அறிவுரைக்கு அமைய தான் வைத்தியர் பாதெனியவுக்கு கைலாகு கொடுத்து சமாதானம் செய்து கொண்டதாக பிரதியமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்துள்ளார்.

அரச வைத்திய அதிகாரிகள் கடந்த வெள்ளிக்கிழமை நடத்திய சேவை புறக்கணிப்பின் போது வைத்தியர் பாதெனிய மாலையில் தனியார் வைத்தியசாலையில் பணத்திற்காக வைத்திய ஆலோசனைகளை வழங்கியதாக பிரதியமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க குற்றம் சுமத்தியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## இன்று ஒரு தகவல்

### கடைசி நிமிட ஏற்பாடுகள்

என் வட்டத்தில் எனக்குத் திருவாளர் முன்னேற்பாடு என்றே பெயர். அடுத்த வருடம் வெளிநாட்டுப் பயணம் என்றால் இப்போதே திட்டமிட்டு ஏற்பாடு செய்ய ஆரம்பித்து விடுவது என் வழக்கம்.

உறவினர் வீட்டில் திருமணப் பேச்சு நடைபெறும் போதே திகதி முடிவாவதற்காகக் காத்திருப்பேன். திகதி முடிவானதுமே மூன்று மாதம் இருப்பினும் டிக்கெட் எடுத்து விடுவது உண்டு. ரிட்டேர்ன் டிக்கெட்டை உறுதி செய்து கொள்ளாமல் எங்கும் சாமானியத்தில் புறப்படுவது கிடையாது. "போய்ப்பார்த்துக்கலாம்" என்கிற மனநிலை எப்போதுமே இருந்தது இல்லை. கடைசி நிமிட ஏற்பாடு என்பது எனக்கு உடன்பாடற்ற ஒன்று.

என் நெருங்கிய நண்பர் என்னை இப்படி உரிமையோடு கேலி செய்தார். "நீ உனக்கு இன்னும் குழிதான் வெட்டி வச்சுக்கலை."

முன்னேற்பாடு குறித்து என்னைக் கேலி செய்பவர்களை எல்லாம் நான் பொருட்படுத்துவது கிடையாது.

சில பேர் எனக்குக் கடிதம் எழுதுகிறார்கள். எனக்கு ஆண் குழந்தை பிறந்துள்ளது பெயர் வையுங்கள் என்று பெருமிதப்படுகிறேன். மகிழ்ச்சியுடன் பதிலிடுகிறேன். ஆனால் இவர்கள் ஏன் குழந்தை பிறப்பதற்கு முன்பே- மூன்று மாதத்திற்கு முன்பே ஏன் திட்டமிடக்கூடாது.

அட என்னங்க நீங்க? பிள்ளை ஆணா பெண்ணா என தெரிஞ்சாதானே பெயரை முடிவு செய்யலாம்? என்கிற பத்தாம் பசலிக் கேள்விகளை நான் ஏற்க மாட்டேன். ஆண் என்றால் இன்ன பெயர்; பெண் என்றால் இன்ன பெயர் என்கிறவரை போய்விட வேண்டும்.

குளிக்க ஆரம்பித்ததும் பையனைச் சோப்பு வாங்க அனுப்புகிறவர்கள் எத்தனை பேர்!

வீடு கட்டுவது என்றால் கடைக்காலுக்கு கடன்; லிண்டனுக்கு பிராவிடெண்ட் பண்ட்; சீலிங்கிற்கு போனஸ் பணம் என்பது போல் திட்டமிட்டுக் கொள்ள வேண்டும். கொஞ்சமும் முன்னேற்பாடு இல்லாமல் நானும் வீடு கட்டுகிறேன் பேர்வழி என்று நம் மென்னியை நாமே பிடித்து அழுத்திக் கொள்ளக் கூடாது.

திருமணம் என்றால் குடும்ப உறுப்பினர்கள், திருமணத்திற்காக உழைக்கப் போகிறவர்கள் அனைவருடன் அமர்ந்து – பூ, மாலை, அலங்காரம் நீ; மளிகை சாப்பாடு நான்; வரவேற்பு உபசரிப்பு இன்னார் என்று திட்டமிட்டுக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் அது கலாட்டாக் கல்யாணமாகிவிடும்.

மாதச் சம்பளம் வந்ததும் மின்சார பில், Gas பணம், பிள்ளைகள் பீஸ் என்று கவர் போட்டுத் தனித்தனியே வைத்துவிட வேண்டும்.

ஊருக்குப் போவது முடிவானதும் முதல் நாளே பயணத்திற்குத் தேவையானவற்றை எடுத்து வைத்துவிட வேண்டும். அப்போதுதான் வைக்க மறந்து போனவை கடைசி நிமிடமாவது நினைவுக்கு வரும். எடுத்து வைப்பதே கடைசி நிமிடம் என்றால், ரயில் – பஸ்ஸில் ஏறியதும் தான் பிரஷ், துண்டு இல்லை என்பதெல்லாம் தெரியவரும்.

உங்களைப் பார்க்க ஒருவர் வருகிறார். சொல்லிவிட்டு வருகிறார் என்றால், அவர் கேட்ட பொருள் (பணம், கேஸட் புத்தகம்) தயாராக இருக்க வேண்டும். அவர் தலையைப் பார்த்ததும் தேட ஆரம்பிக்கக் கூடாது.

கடைசி நிமிட அவதிகளைத் தவிர்ப்பது மிக முக்கியமான விடயம்.

காரணம், அவசரம் என்றால் அண்டாவுக்குள் கூட கை நுழையாது!

**லேனா தமிழ்வாணன்**

# வைகாசி மாத இராசி பலன்கள்

## 15.05.2017-14.06.2017



கொட்டிக் கொடுக்கும் மனம் படைத்த மேஷ இராசி அன்பர்களே!

வைகாசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, உங்கள் இராசிநாதன் செவ்வாய் தன ஸ்தானத்தில் பஞ்சமாதிபதி சூரியனுடன் இணைந்து சஞ்சரிக்கிறார். எனவே பணப்புழக்கம் நன்றாக இருக்கும். எதைச் செய்ய நினைத்தீர்களோ அதை உடனடியாக செய்து முடிப்பீர்கள். அரசு வழியில் தாமதப்பட்ட காரியங்கள், இப்பொழுது தடையின்றி நடைபெறும். வீடு மற்றும் வாகனம் வாங்கும் முயற்சிக்கு வங்கிகளில் இருந்து எதிர்பார்த்த சலுகை கிடைக்கும்.

அதேநேரத்தில் இராசிநாதன் செவ்வாயையும், பஞ்சமாதிபதி சூரியனையும் சனி பார்க்கிறார். பகை கிரகமான சனி, சப்தம ஸ்தானத்தில் இருந்து இருவரையும் பார்ப்பதால், தொகை வரவு திருப்திகரமாக இருந்தாலும், அவை வந்த மறுநிமிடமே செலவாகிவிடும். நீங்கள் தீட்டிய திட்டத்திற்காக வைத்திருக்கும் தொகை, வேறு வழியில் செலவாகி மனதை கவலை கொள்ள வைக்கலாம். இதுபோன்ற காலங்களில் அதிக விழிப்புணர்வு தேவை. அப்பொழுதுதான் வீண் விரயங்களில் இருந்து விடுபட இயலும். அதேநேரத்தில் பெற்றோர் வழி உறவிலும் விரிசல் ஏற்படாமல் பார்த்துக் கொள்வது நல்லது.

அஷ்டமத்துச் சனி வக்ர இயக்கத்தில் இருப்பது ஒருவழிக்கு நன்மை தான். ஆரோக்கியத் தொல்லையில் இருந்து விடுபடுவீர்கள். விலங்குகளை வளர்ப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள். வீடு கட்டுவதில் இருந்த தேக்க நிலை மாறும். பிள்ளைகள் குடும்பப் பொறுப்பை உணர்ந்து நடந்து கொள்வார்கள். தன சப்தமாதிபதியான சுக்ரன் உச்சம் பெற்றிருப்பதால், இந்த மாதம் உதிரி வருமானம் வந்து உள்ளத்தை மகிழ்விக்கப் போகிறது. வாழ்க்கைத் துணை அல்லது வாரிசுகளுக்கு வேலை கிடைக்கலாம். சஷ்டி விரதமிருந்து சண்முகநாதப் பெருமானை வழிபடுவது நல்லது.

மிதுன செவ்வாய் சஞ்சாரம்

மே 26ஆம் திகதி மிதுன இராசிக்கு, செவ்வாய் செல்கிறார். இராசிநாதன் 3இல் சஞ்சரிக்கும் பொழுது, முன்னேற்றப் பாதையில் அடியெடுத்து வைப்பீர்கள். முக்கிய புள்ளிகளின் ஆலோசனை உங்கள் தொழிலுக்கு வரும் இடையூறுகளை அகற்றும். அஷ்டமாதிபதியாகவும் செவ்வாய் விளங்குவதால், திட்டமிடாது செய்யும் காரியங்களில் கூட வெற்றி கிடைக்கும். என்றைக்கோ வாங்கிப்போட்ட இடம், இன்றைக்கு நல்ல விலைக்கு போவதற்கான அறிகுறிகள் தோன்றும்.

## தடைகள் அகலும் தன வரவு திருப்தி தரும்

புதன் பெயர்ச்சிக் காலம்

மே 27ஆம் திகதி ரிஷபத்திற்கு புதன் செல்கிறார். உங்கள் இராசிக்கு 3,6 ஆகிய இடங்களுக்கு அதிபதியான புதன், தன ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது பதவி உயர்வும், ஊதிய உயர்வும் எதிர்பார்த்தபடி வந்து சேரும். கொடுக்கல்- வாங்கல்களில் இருந்த சிக்கல்கள் அகலும். வழக்குகள் சாதகமாக முடியும். விலகிச் சென்ற சகோதரர்கள் விரும்பி வந்து, உங்கள் முன்னேற்றத்திற்கு வழிவகுத்து கொடுப்பர். மாமன், மைத்துனர் வழியில் ஏற்பட்ட மனக்கசப்பு மாறும்.

ஜூன் 12ஆம் திகதி மிதுனத்தில் புதன் சஞ்சரிக்கப்போகிறார். அந்த நேரத்தில் தொழில் வளர்ச்சி அதிகரிக்கும். தொழில் முன்னேற்றம் கருதி புதிய பங்குதாரர்களை இணைத்துக் கொள்ள முன்வருவீர்கள்.




சுக்ர பெயர்ச்சிக் காலம்

மே 28ஆம் திகதி மேஷத்துக்கு சுக்ரன் செல்கிறார். இந்த காலத்தில் தனவரவு திருப்திகரமாக இருக்கும். வாகன யோகம் உண்டு. திட்டமிடாமலேயே பயணங்கள் வந்து கொண்டிருக்கும். பெண்வழிப் பிரச்சினைகள் அகலும். அழகுப் பொருட்களையும், ஆபரணங்களையும் வாங்குவதில் அக்கறை செலுத்துவீர்கள். உத்தியோக மாற்றம் உறுதியாகலாம்.

இம்மாதம் செவ்வாய், சனி பார்வை இருப்பதால் நரசிம்மர் வழிபாட்டை மேற்கொள்ளுங்கள்.

பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்

உங்கள் இராசிநாதன் செவ்வாயை, குரு பார்ப்பதால் குரு-மங்கள யோகம் உருவாகிறது. எனவே குடும்பத்தில் மங்கள நிகழ்ச்சி நடைபெறப் போகின்றது. தங்கு, தடைகள் அகலும். தன வரவு திருப்தி தரும். ஆரோக்கியத்தில் அடிக்கடி அச்சுறுத்தல்கள் ஏற்பட வாய்ப்புண்டு கவனமாக இருங்கள். பக்கத்து வீட்டாரின் பகை மாறும். தாய்வழி ஆதரவு உண்டு. கணவன்-மனைவிக்குள் விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. பிள்ளைகளின் படிப்பிற்கேற்ற வேலை கிடைக்கும். உங்கள் பெயரில் இருக்கும் சொத்துகளை கொடுத்து விட்டு, புதிய சொத்துகள் வாங்கும் யோகம் உண்டு. உத்தியோகத்தில் உடன் பணிபுரிபவரால் ஏற்பட்ட சிக்கல்கள் தீரும். புதிய வாகனம் வாங்கும் முயற்சி பலன் தரும். சனி வக்ர இயக்கத்தில் சஞ்சரிப்பதாலும், செவ்வாயால் பார்க்கப்படுவதாலும், மாதத் தொடக்கத்தில் திடீர் விரயம் உண்டு. அறுபத்து மூவர் வழிபாட்டை மேற்கொண்டால் ஆனந்தம் நிலைக்கும்.

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்



பிறருக்கு வழிகாட்டியாக வாழ விரும்பும் ரிஷப இராசி அன்பர்களே!

வைகாசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சுக்ரன் உச்சம் பெற்றிருக்கிறார். எனவே ஆரோக்கியத் தொல்லை அகலும். ஆற்றல் மிக்கவர்கள் உங்களுக்குப் பின்னணியாக இருந்து, நீங்கள் தீட்டும் திட்டங்களை வெற்றியடையச் செய்வார்கள். தொழிலில் எதிர்பார்த்தபடியே இலாபம் வந்து சேரும். வங்கி சேமிப்பு உயரும்.

குருவின் பரிபூரண பார்வை உங்கள் இராசியின் மீதும் இராசிநாதன் சுக்ரன் மீதும் பதிகின்றது. எனவே நாலாபுறம் இருந்தும் நற்பலன்கள் உங்களைத் தேடி வரப்போகிறது. சூழ்ந்த பகை விலகும். துணிவும், தன்னம்பிக்கையும் கூடும். ஆழ்ந்து சிந்தித்து முடிவெடுத்து செய்யும் காரியங்களில் வெற்றி கிடைக்கும். ஒரு சிலருக்கு வெளிநாட்டில் இருந்து அழைப்புகள் வந்து சேரலாம்.

உங்கள் இராசியைச் சனி பார்க்கிறாரே என்று நினைத்து கவலைப்பட வேண்டாம். சனி இப்பொழுது வக்ர இயக்கத்தில் பலம் இழந்து பார்ப்பதால், பெரிய அளவில் பாதிப்பு இருக்காது. மலை போல் வந்த துயர் பனிபோல் விலகும்.

உங்கள் இராசியிலேயே சூரியன், செவ்வாய் ஆகிய கிரகங்கள் சஞ்சரிக்கின்றன. சுகாதிபதி சூரியன் சஞ்சரிப்பது நன்மை தான். ஆனால் சப்தம விரயாதிபதியான செவ்வாய் இராசியில் சஞ்சரிப்பதால், சொத்து சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் உருவாகலாம். நட்பு பகை ஆகாமல் பார்த்துக் கொள்வது உங்கள் புத்திசாலித்தனம்.

தனாதிபதி புதன் விரய ஸ்தானத்தில் வீற்றிருப்பதால், ஒரு சிலருக்கு வீண் விரயங்கள் ஏற்படும். அதிலிருந்து விடுபட குடும்பத்திற்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் ஆடம்பரப் பொருட்கள் வாங்குவதில் கவனம் செலுத்தலாம். 'மின்சாதனப் பொருட்கள் அடிக்கடி பழுதாகின்றனவே' என்று கவலைப்பட்டவர்கள், புதிய பொருட்களை வாங்க

## பணத் தேவை உடனுக்குடன் பூர்த்தியாகும்

முன்வருவீர்கள். பிள்ளைகளின் திருமணத்தை முன்னிட்டு சீர்வரிசைப் பொருட்கள், வீட்டுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களை வாங்குவீர்கள். பெற்றோர்களின் மணி விழாக்களை நடத்திப் பார்க்க நேரம் கைகூடி வரும்.

சனி, செவ்வாய் பார்வை இருப்பதாலும், சனியும் சூரியனும் ஒன்றையொன்று பார்த்துக்கொள்வதாலும், திடீர் பிரச்சினைகள் மற்றும் ஆரோக்கியத் தொல்லைகள் ஏற்படாமல் இருக்க பைரவரையும், அனுமனையும் வழிபாடு செய்வது நல்லது.

மிதுன செவ்வாய் சஞ்சாரம்

மே 26ஆம் திகதி மிதுன இராசிக்கு, செவ்வாய் செல்கிறார். சப்தம விரயாதிபதி செவ்வாய் 2இல் சஞ்சரிப்பதால், குடும்பச் சுமை கூடும். கொள்கைப் பிடிப்பைக் கொஞ்சம் தளர்த்திக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும். வாழ்க்கைத் துணையின் வேலை வாய்ப்பைப் பற்றி கவலைப்படுவீர்கள். ஒரு சிலருக்கு இடமாற்றம், வீடு மாற்றம் மட்டுமின்றி உத்தியோக மாற்றங்களும் வந்து சேரலாம்.




பொன்னான புதன் பெயர்ச்சி

மே 27ஆம் திகதி ரிஷபத்திற்கு, புதன் செல்கிறார். உங்கள் இராசிக்கு 2,5இற்கு அதிபதியான புதன் உங்கள் இராசியிலேயே சஞ்சரிப்பது யோகம் தான். உங்கள் வாரிசுகளின் முன்னேற்றம் கண்டு பெருமைப்படுவீர்கள். மாமன், மைத்துனர் வழியில் ஏற்பட்ட மனக்கசப்பு மாறும். குழந்தைகளின் சுபகாரியப் பேச்சுகள் முடிவிற்கு வரும்.

ஜூன் 12ஆம் திகதி மிதுனத்தில் புதன் சஞ்சரிக்கப் போகிறார். இது உங்களுக்கு ஒரு பொற்காலமாகும். பணத்தேவை உடனுக்குடன் பூர்த்தியாகும். குடும்ப முன்னேற்றம் கூடும். குழந்தைகளின் வெளிநாட்டு முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள்.

சுக்ரப் பெயர்ச்சிக் காலம்

மே 28ஆம் திகதி மேஷ இராசிக்கு, சுக்ரன் செல்கிறார். இராசிநாதன் விரய ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது, வரவைக் காட்டிலும் செலவு கூடும். வாகன மாற்றம் செய்ய முன்வருவீர்கள். உத்தியோக மாற்றம் உறுதியாகலாம். ஆடை, ஆபரண சேர்க்கை உண்டு. விலகிச் சென்றவர்கள் விரும்பி வந்து இணைவர். யோக பலம் பெற்ற நாளில் செவ்வாய் சனிக்குரிய பரிகாரங்களைச் செய்தால் தடைகள் அகலும்.

பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்

இம்மாதத் தொடக்கத்தில் விரயம் அதிகரித்தாலும், பிறகு படிப்படியாக நன்மைகள் வந்து சேரும். மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறுவர். மங்கள நிகழ்ச்சிகள் இல்லத்தில் நடைபெறும். தம்பி, தங்கைகளின் கல்யாண வாய்ப்புகள் கைகூடி வரும். தாய் வழி ஆதரவு ஓரளவு கிடைக்கும். கணவன்-மனைவிக்குள் ஒற்றுமை பலப்பட அனுசரித்துச் செல்வது நல்லது. பிள்ளைகளின் கல்வியில் முன்னேற்றம் உண்டாகும். நூதனப் பொருட்களின் சேர்க்கை உண்டு. உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். வைகாசி விசாகத்தன்று முருகப்பெருமானை வழிபட்டால் வளர்ச்சி கூடுதலாகக் கிடைக்கும்.

(தொடரும்)



மக்கள் வங்கியின் மானிப்பாய் கிளையில் பணம் மீளப் பெறும் தன்னியக்க இயந்திரம் (ATM) அண்மையில் மக்கள் வங்கி பிராந்திய முகாமையாளர் க.சுசீந்திரனால் திறந்து வைக்கப்பட்டது.

# தொழிற்சங்கப் போராட்டத்தில் அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள்

அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் தொழிற்சங்கப் போராட்டமொன்றில் ஈடுபடவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அதிபர்கள் தொடர்பான பிரச்சினைகளுக்கு கல்வி அமைச்சு இதுவரையில் எவ்வித தீர்வினையும் வழங்காத காரணத்தினால், இவ்வாறு தொழிற்சங்கப் போராட்டங்களை முன்னெடுக்கவுள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் கொழும்பு ஊடகமொன்றுக்கு இதனைத் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 24ஆம் திகதி அதிபர்களுடன் இணைந்து தமது சங்கம் இந்தப் போராட்டத்தை முன்னெடுக்கும் என தெரிவித்தார்.

2009ஆம் ஆண்டில் நியமிக்கப்பட்ட 4200 அதிபர்களுக்கு இதுவரையில் பதவி உயர்வு மற்றும் சம்பள உயர்வு வழங்கப்படவில்லை எனவும், 2016ஆம் ஆண்டு நியமிக்கப்பட்ட அதிபர்கள் பலருக்கு இதுவரையில் பாடசாலைகள் வழங்கப்படவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 24ஆம் திகதி அனைத்து அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களையும் கொழும்பிற்கு அழைத்து தொழிற்சங்கப் போராட்டமொன்றை முன்னெடுக்க உள்ளதாக ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார். (இ-7)

# பொலிஸாரின் வெசாக்கூடு



(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை பொலிஸாரினால் அமைக்கப்பட்ட வெசாக் கூடுகள் பொதுமக்கள் பார்வைக்காக விடப்பட்டதுடன் பொலிஸாரினால் மக்களுக்கு உணவும் வழங்கப்பட்டது.

வெசாக் தினத்தினை முன்னிட்டு பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் அலங்காரக் கூடுகள், விளக்குகள் பொருத்தப்பட்டிருந்தன. (இ-60)

# வயோதிபரைப் பொறுப்பேற்கவும்

யாழ். போதனா வைத்தியசாலையில் 09.05.2017 ஆம் திகதி இரவு 11.45 மணியளவில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையிலிருந்து மாற்றலாகி வந்த நோயாளியின் பெயர் பாலா, 55-60 வயது மதிக்கத்தக்க (5'7" உயரம்)ஆண், முகத்தில் தாடி வளர்ந்திருந்தது. முகவரி தெரியாது.

அவருக்கு தற்போது அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைக்காக அனுமதித்து சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றது. எனினும் இவருடைய உடல் நிலை தற்போது கவலைக்கிடமாகவுள்ளதால் உறவினர்களை வந்து தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன் என யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (இ)

# முதலை இழுத்துச் சென்ற மீனவரின் சடலம் நேற்று மீட்பு

மட்டக்களப்பு, கரவெட்டி பகுதியில் முதலை இழுத்துச் சென்று உயிரிழந்த மீனவர் ஒருவரின் சடலம் நேற்றுக் காலை மீட்கப்பட்டுள்ளது. சம்பவத்தில் உயிரிழந்தவர் விளாட்டுவானைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான 62 வயதுடைய அல்லிமுத்து விக்கிரமசிங்க என வவுணதீவு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த புதன்கிழமை இரவு 8.30 மணியளவில் வீட்டில் இருந்து சென்ற விக்கிரமசிங்கவை நள்ளிரவு 12 மணிவரை அப்பகுதியிலிருந்த ஏனைய மீனவர்கள் கண்டதாகவும் அதன் பின்னரே முதலை பிடித்துச் சென்றிருக்க வேண்டும் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதன் பின்னர் சம்பவம் தொடர்பில் பொலிஸாருக்கு முறைப்பாடு செய்யப்பட்டதை அடுத்து, வவுணதீவு பொலிஸாரால் நேற்று சடலம் மீட்கப்பட்டுள்ளது. குறித்த சடலத்தை பிரேத பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் கையளிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)



வெசாக் தினத்தை முன்னிட்டு நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் தானம் வழங்கும் நிகழ்வு நடைபெற்றது. இந்நிகழ்வில் நெல்லியடி பொலிஸ் பொறுப்பதிகாரி ஆர்.பி.பியந்த, வடக்கு மாகாணசபை உறுப்பினர் சி.அகிலதாஸ் உட்பட பலர் கலந்து கொண்டனர். (படங்கள்:- மகாலிங்கம்)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1071

Search for people, places and things | Nagendram | Home


### பியா




### தவம்




### முகுந்தன்





### விக்கி




### சரிதா




### தாசன்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# தென்னை மரங்களிலிருந்து சாறுவெளியேறுதலும் தண்டுக்கசிவு நோயும் அதன் கட்டுப்பாடும்

பொதுவாக தென்னையின் அடிப்பகுதியிலுள்ள பட்டைப் பகுதியானது வெடித்துக்காணப்படும் இது தென்னை மரங்களின் பொதுவான இயல்பாகும். ஆனால் இவ் வெடிப்புக்களிலிருந்து நீர் போன்ற திரவம் வெளிவந்த வண்ணமிருந்தால் அது ஏதாவதொரு சூழற்காரணியால் அல்லது ஏதேனும் நோய்க் காரணியால் ஏற்பட்ட பாதிப்பாக இருக்கலாம். அதாவது செவ்வண்டின் குடம்பிகளின் தாக்கத்தினால் தண்டில் ஏற்படும் காயங்களினால் மின்னல் மற்றும் நெருப்புத் தாக்கத்தினாலும் மற்றும் சில உடற்தொழிலியற் தாக்கங்களினாலும் தண்டுப்பகுதியிலிருந்து நீர் போன்ற திரவம் வடியலாம். இது தண்டுக்கசிவு நோய்க்கான அறிகுறியல்ல. தென்னை மரங்களின் அடிப்பகுதியிலிருந்து சாறு வெளியேறுதல் பின்வரும் காரணிகளால் நிகழலாம்.

1. தென்னை மரத்தின் தண்டுப் பகுதியில் ஏற்படும் காயங்கள். இவை கூரான ஆயுதங்களால் அல்லது இயற்கைக்காரணிகளால் ஏற்படுத்தப்படும்.

2. அதிகளவு அசேதனப் பசளைப் பிரயோகம்- சிபாரிசு செய்யப்பட்டளவிலும் பார்க்க அதிகளவு பசளையைப் பாவிப்பதால் இது நிகழும்.

3. நீண்டகால வரட்சியைத் தொடர்ந்து வரும் கடும் மழை அல்லது வெள்ளப்பெருக்கு- இதன்போது மண் ஈரலிப்படைந்து மரங்கள் அதிகளவு நீரை உறிஞ்சுவதால் தண்டுப்பகுதியில் ஏற்படும் வீக்கத்தின் காரணமாக தண்டுப்பகுதி வெடிக்கும்.

4. நிலத்தடி நீர்மட்டத்தில் ஏற்படும் ஏற்றத்தாழ்வுகள் அல்லது அதன் தளம்பல்களாலும் இது நிகழலாம்.

5. தண்டின் அடிப்பகுதி பெருத்து குமிழ் போன்ற வடிவமாக இருந்தாலும் இத் தண்டுப்பகுதி வெடிப்பதற்கான சாத்தியத்தன்மை அதிகமாக இருக்கும்.

### தண்டுக்கசிவு நோய்

இது ஒரு வகையான பங்கசினால் ஏற்படுத்தப்படும் நோய்த்தொற்றாகும். இப்பங்கசானது சாதாரணமாக உக்கி பிரிகையடையும் தாவரப்பகுதிகளில் காணப்படும். இது நீரினால், காற்றினால் அல்லது பூச்சிகளினால் பரம்பலடைந்து மரத்தில் காணப்படும் துவாரங்கள் மற்றும் வெடிப்புக்கள் மூலம் உட்புகும். இப்பங்கசானது தென்னையை மட்டுமல்லாமல் கரும்பு, வாழை, அன்னாசி போன்ற மரங்களிலும் பாதிப்பை ஏற்படுத்தும்.

தண்டின் நீளப்பாட்டில் காணப்படும் வெடிப்புக்களிலிருந்து சிவப்பு சார் கபில நிறமான அல்லீது துருபோன்ற நிறமான திரவமானது பிசுபிசுப்புத் தன்மையுடையதாகவும், ஓரளவு தடிப்பாகவும் இருப்பதுடன் விரைவில் கறுப்பாகவும் மாறினால் அது தண்டுக்கசிவிற்குரிய அறிகுறியாக இருக்கலாம். இத் திரவமானது தண்டுப்பட்டையின் ஒரு குறிப்பிட்ட புள்ளியிலிருந்தோ அல்லது குறைந்த எண்ணிக்கை புள்ளியிலிருந்தோ வெளியேறும். தண்டின் ஒன்று அல்லது பல பிரதேசங்களில் ஏற்படும் தொற்றானது ஒன்று சேர்ந்து ஓர் பெரிய பகுதியை உருவாக்கும். இக் காயத்திற்குக் கீழுள்ள பகுதியை வெட்டிப் பார்க்கும் போது இப் பகுதியிலுள்ள இழையங்கள் உக்கிய மஞ்சள் நிறமாகவும் காலப்போக்கில் கருமை நிறமாகவும் மாற்றமடைந்து காணப்படும்.

தண்டுக் கசிவின் பாதிப்பானது மரத்தினது வயதிலும் இது வளரும் சூழலிலும் தான் தங்கியுள்ளது. 40 வயதிற்கு மேற்பட்ட மரங்களில் இந் நோயின் அறிகுறியானது மரத்தின் அரைவாசிக்கு கீழே தான் காணப்படும். இளம் மரங்களில் அடிப்பகுதி இழையங்கள் மென்மையாகவும் உணவு ஒதுக்கீடானது அதிகமாகவும் இருப்பதனால் இந்நோயை ஏற்படுத்தும் பங்கசுக்களின் வளர்ச்சிக்கு தேவையான போசணையும் கிடைப்பதனால் இவை இலகுவில் வளர்ச்சியடைந்து பரவும். வயதான மரங்களில் உச்சிப்பகுதிக்கு அண்மையாக இத்தாக்கம் நிகழ்ந்தால் இளம் மரங்களில் ஏற்படும் பாதிப்புப் போலவேதான் வயதான மரங்களிலும் ஏற்படும். இப் பங்கசுவினால் தண்டின் நடுப்பகுதியில் பாதிப்பு ஏற்படுமானால் இந்நோய் பரவும் வேகமானது தண்டின் மேல் நோக்கியே அதிகமாக இருக்கும்.



வரட்சியான காலநிலை நிலவும் காலப்பகுதிகளில் மரத்திற்கு ஈரலிப்பு தேவைப்படுவதனால் சாறு கசிவது தற்காலிகமாக நிறுத்தப்படும். ஆனால் அப்பகுதியில் இருக்கும் பங்கசானது அழியாது இருக்கும். மீண்டும் ஈரலிப்பான காலநிலை நிலவும் போது கசிவு நிகழ்வது மட்டுமல்லாமல் துவாரப்பருமனும் அதிகரிக்கும்.

### கட்டுப்பாடு

மின்னலினால் அல்லது நெருப்பினால் சாறு வெளியேற்றம் நிகழ்ந்தால் அப்பகுதியில் சாம்பல் படிவு இருக்கிறதா? அல்லது ஒரு தொகுதி மரங்கள் எரிந்த முறிவடைந்த ஓலைகளை கொண்டிருக்கிறதா? என பார்த்தல் வேண்டும். மின்னல் தாக்கம் எனின் ஓர் சாய்வான துவாரத்தினை தண்டில் ஏற்படுத்தி மேலதிகமாக தேங்கும் நீரை வெளியகற்ற வேண்டும். பின்னர் இத் துவாரமானது சீமெந்து மண் கலவையினால் மூடப்பட வேண்டும்.

செவ்வண்டுக் குடம்பிகளின் தாக்கம் என்றால் அம்மரத்தில் செவ்வண்டுக் குடம்பியின் கூடுகள், தண்டில் வட்டவடிமான துவாரங்கள் தென்படுகிறதா? என அவதானிக்க வேண்டும். இதற்கு மரத்தில் துளையிடும் துளை கருவியினைப் பாவித்து சிறிஞ் மூலம் குறிப்பிட்ட அளவு மொனோகுறோட்டபஸ் செலுத்தப்பட வேண்டும்.

தண்டுக்கசிவு நோயினால் மரம் பாதிக்கப்படின் பாதிக்கப்பட்ட மரத்தின் சேதமான இழையமானது புதிய இழையம் தென்படும் வரை உளிபோன்ற கூரிய ஆயுதத்தினால் வெட்டி அகற்றப்படும். இவ்வெட்டப்பட்ட பகுதிக்கு போடோ கலவை அல்லது ஏதாவது செப்பைக் கொண்ட பங்கசு கொல்லி (Copper furgicide brand) பாவிக்கலாம். மருந்து உற்பத்தியாளர்களால் வழங்கப்படும் அறிவுரைக்கமைவாக 1 % கரைசலை தயாரித்து உபயோகிக்கலாம். சில வாரங்களின் பின்னர் இக் கசிவு நிகழாவிடின் கறையான் தாக்கத்தை கட்டுப்படுத்துவதற்காக கழிவு ஓயிலினால் இப் பகுதியில் பூசப்பட வேண்டும்.

போடோ கலவை தயாரிக்கும் முறை:-

200 கிராம் செப்பு சல்பேற்றை (துருசை) ஒரு துணியில் பொட்டலமாகக் கட்டி அதனை 5 லீற்றர் நீரில் நன்கு கரைக்கவும், 200 கிராம் சுண்ணாம்பினை (வெள்ளையடிப்பதற்காக பாவிப்பது) 20 லீற்றர் நீரில் நன்கு கரைத்து வடிக்கவும். செப்பு சல்பேற் கரைசலையும் வடிகட்டப்பட்ட சுண்ணாம்புக் கரைசலையும் ஒன்றுடனொன்று சேர்த்து நன்கு கலக்கி உடனடியாக உபயோகிக்கவும்.

நல்லூர், அரியாலை, சாவகச்சேரி, புதுக்குடியிருப்பு, தேவிபுனம், முழங்காவில் பகுதிகளில் இத்தண்டுக்கசிவு நோய் அவதானிக்கப்பட்டுள்ளது. சகல தென்னைச் செய்கையாளர்களினாலும் நோய் அறிகுறிகளின் படி தாக்கத்தினை கண்டறிதல் சிரமமாகவே உள்ளது. பெரும்பாலானவர்கள் தண்டுக் கசிவு நோயினை செவ்வண்டுத்தாக்கம் எனத் தவறாகக் கருதி அதற்குரிய சிகிச்சை முறையினை வழங்கி வீண்சிரமத்தையும் பொருளாதார இழப்பையும் எதிர்நோக்குகிறார்கள்.

### முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்

தென்னங்காணிகளில் தென்னை மரங்களுக்கிடையில் வைத்து குப்பை கூழங்களையோ அல்லது தென்னையின் பகுதிகளையோ தீமூட்டி எரித்தல் முற்றாகத் தவிர்க்கப்பட வேண்டும்.

தூவல், சொட்டு, விசிறல், குழாய் நீர்ப்பாசனத்தின் குழாய்ப் பகுதிகளிலிருந்து வெளியேறும் நீர் தென்னையின் தண்டுப்பகுதியில் படுவதனை முற்றாகத் தவிர்த்தல் வேண்டும்.

ஈஸ்வரன் சற்குணன்
பண்ணைத் திட்டமிடல் அதிகாரி
தென்னைப் பயிர்ச் செய்கை சபை,
யாழ்ப்பாணம்.

# கணனி தொழில்நுட்பத்தொழிலிலிருந்து விவசாயச் செய்கை நோக்கி!

(11 ஆம் பக்கத் தொடர்ச்சி)


இவ்வாறான நிறுவனங்களில் இடைவிடாது தொடர்ச்சியாக வேலை செய்ய வேண்டுமென்றும் இதனால் பலர் இனந்தெரியாத மனவுளைச்சல்களுக்கு உள்ளாவதாகவும் தெரிவிக்கின்றனர். உயர்ந்த சம்பளத்தில் வேலை என்னும் போது வேலையின் தரமும் அளவும் அதிகமாகவே இருக்கவேண்டும் என வேலை தரும் நிறுவனங்கள் எதிர்பார்ப்பதில் தப்பேதுமிருப்பதாக தெரியவில்லை. ஆனால் தொடர்ச்சியாக இடைவிடாது வேலைக்குள் திணிக்கப்படும்போது தமது சந்தோசத்தை, இல்லத்தின் மகிழ்ச்சியை முழுமையாக அனுபவிக்க முடியவில்லை என பலர் இப்போது நினைக்கத் தொடங்கியிருக்கின்றார்கள். கற்றலும் தொழில்செய்வதும் ஓடியோடி உழைப்பதும் அவரவர் மகிழ்ச்சியாக வாழ்வதற்கேயன்றி வேறெதற்கு. ஆனால்அந்த மகிழ்ச்சியே கேள்விக்குறியாகி நிறுவனமொன்றிற்கு அடிமையாக வாழ்வதனை இளைய சமுதாயம் விரும்பவில்லையென்றே நினைக்கின்றது.

இதனால் அவர்கள் எடுத்துக் கொண்ட முடிவு பலரையும் ஆச்சரியத்திற்குள் உள்ளாக்கியிருக்கின்றது. தாம் செய்து வந்த அதிகூடிய இலட்சங்களை வழங்கும்வேலையை இராஜினாமா செய்து விட்டு தமக்கென நிலங்களை வாங்கி அனைவரும் விவசாயம் செய்ய தொடங்கி விட்டார்கள். என்ன ஆச்சரியமாக இருக்கின்றதா? தமது நிலங்களில் தொழில்நுட்பத்தினை உள்வாங்கிய பண்ணைகளை அமைத்து அதிலிருந்து ஆகக்குறைந்தது மாதமொன்றுக்கு இந்திய ரூபாவில் 60 ஆயிரம் வரை பெறக் கூடியதாக இருப்பதாகவும் தற்போது தாம் முன்பிருந்ததை விட மிகவும் மகிழ்ச்சியாகவும் குடும்பத்துடன் குதூகலித்தும் இருப்பதாக கூறும் இவர்கள் எந்தவித பிணைமுறிகளும் இல்லாது மனம் அமைதியாகவும் நீண்ட நேரத்தை குடும்பத்துடன் கழிப்பதாகவும் கூறியிருக்கின்றார்கள். தமது பண்ணைகளில் சேதனமுறை மூலமாக பயிர்களை உற்பத்தி செய்ய முடிவதாகவும் நஞ்சற்ற உணவை உற்பத்தி செய்வதில் தாம் பெருமைப்படுவதாகவும் தெரிவிக்கும் இவர்கள் அளவாக தமது பண்ணையை தாம் நடத்துவதாகவும் அதில் எந்தவித பிரச்சினைகளையும் தீர்க்க முடிவதாகவும் குறிப்பிட்டுள்ளனர்.

கிராமத்திலிருந்து நகரத்தை நோக்கி இளைய சமுதாயம் நகர்வதற்கு முக்கியமான காரண மாக நகரத்திலிருக்கும் விஞ் ஞான தொழில்நுட்ப வசதிகளா கும். இந்த வசதிகளை கிராமத்திற்கு கிடைக்க ஏற்பாடு செய்தால் நிச்சயமாக மேலே தெரிவித்த அதிசயங்கள் நம்நாட்டிலும் நடக்கும். கிராமத்து அபிவிருத்தி என்பது அந்த கிராமத்திலுள்ள வளங்களுக்கேற்ப தொழிற்றுறைகளை உருவாக்குவதும் அதற்கான விஞ்ஞான தொழில்நுட்ப அறிவினை உட்புகுத்துவதுமாகும். இவ்வாறு செய்தால் கிராமத்திலேயே அனைவருக்கும் தேவையான உண வும் அவற்றின் மதிப்பேற்றப்பட்ட பொருட்களும் எம்மவர் தரம்மிக்க பொருட்களாக எமது சந்தைக்கும் உலக சந்தைக்கும் கிடைக்கும். தரக்கட்டுப்பாட்டு முறைகளை நடைமுறைப்படுத்தும் நிறுவனங்களின் உருவாக்கமும் பொருட்களை மதிப்பேற்றஞ் செய்து சந்தைவாய்ப்பை அதிகரிக்கும் வழிவகைகளும் கிடைக்கப்பெறும் போது இவையனைத்தும் சாத்தியமே. மேலும் சுற்றுலாத்துறையின் வளர்ச்சி இங்கே முக்கியமாக கவனிக்கப்படுதல் வேண்டும். சுற்றுலாத்துறையின் வளர்ச்சியுடன் அது சார்ந்த சேவைகளின் தேவையும் அவற்றின் வளர்ச்சியும் அதிகரிக்கும். இவற்றிற்கு முக்கியத்துவம் கொடுப்பது வேலையில்லாப் பிரச்சினைக்கு முடிந்தளவு தீர்வையும் அதற்கிணையான தொழிற்றுறை வளர்ச்சிக்கு வாய்ப்பையும் அதிகரிக்கும். விவசாயசெய்கையில் படித்த இளைய சமுதாயம் மீண்டும் ஆர்வம் கொண்டிருப்பது இனி யொரு பசுமைப் புரட்சியில் பல நல்ல விளைவுகளை ஏற்படுத்தும் என நம்பலாம். இது வொரு நல்ல சகுனமாகவே கருதப்படவேண்டியதாகும்.

# அமெரிக்க குடியுரிமையை கைவிட கோத்தா முடிவு?

## இவன்காவின் உதவியையும் நாடினார்



முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ அமெரிக்க குடியுரிமையைக் கைவிடத் தீர்மானித்துள்ளார் என்று கொழும்பு ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது. 2020ஆம் ஆண்டு நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் நோக்கில் கோத்தபாய இந்த தீர்மானத்தை மேற்கொண்டுள்ளதாக கூறப்படுகிறது.

கடந்த முதலாம் திகதி நடைபெற்ற மகிந்த அணியின் மேதின பேரணியில், பெரும்திரளான மக்கள் பங்கேற்றிருந்தனர். இரண்டு பிரதான கட்சிகளையும் விட மகிந்த தலைமையில் நடைபெற்ற பேரணியில் இலட்சக்கணக்கான மக்கள் பங்கேற்றனர். இதன்காரணமாக வீழ்ச்சியடைந்திருந்த ராஜபக்ஷர்களின் அரசியல் பயணம் பிரகாசமாக மாறியுள்ளது. இதனை அடிப்படையாகக் கொண்டு 2020இல் நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் கோத்தபாய போட்டியிடுவது உறுதி செய்யப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் தலைவரும் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேனவுக்கு கட்சிக்குள் ஆதரவு குறைந்து வருவதாகவும், சுதந்திர கட்சியை சேர்ந்த பலர் ஐக்கிய தேசிய கட்சியில் இணைவது உறுதி என கோத்தபாய தரப்பு கணித்துள்ளது. எப்படியிருப்பினும் 2020ஆம் ஆண்டு ஜனாதிபதி வேட்பாளராக கோத்தபாய ராஜபக்ஷ போட்டியிடுவது குறித்து கூட்டு எதிர்க்கட்சியில் இணக்கப்பாடு இதுவரை எட்டப்படவில்லை. இருந்தபோதிலும் மிகவும் தகுதியான வேட்பாளர் பட்டியலில் முன்னணியில் கோத்தபாயவே உள்ளார்.

இதேவேளை, அமெரிக்க குடியுரிமையை நீக்கிக் கொள்வதற்காக தற்போது அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தில் அறிவிக்கப்பட்டாலும், சட்டரீதியனான செயற்பாட்டிற்கு இரண்டு மூன்று வருடங்கள் அவசியமாகும். அதற்கமைய, அந்த நடவடிக்கைகளை விரைவாக மேற்கொள்வதற்கு இலங்கை மற்றும் அமெரிக்காவில் கோத்தபாயவுக்கு நெருக்கான வர்த்தகர்களினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் மகள் இவன்காவிடம் கலந்துரையாடல் மேற்கொள்ளப்படுவதாக குறித்த ஊடகம் சுட்டிக்காட்டியுள்ளது. இலங்கையின் அபிவிருத்தி மற்றும் அரசியல் தொடர்பில் சீன அரசாங்கம் தீர்மானமிக்க அழுத்தம் ஒன்றை தற்போது வரையில் பிரயோகித்து வருகின்றது. இந்நிலையில் இலங்கையை தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க வேண்டிய அவசியம் அமெரிக்காவுக்கு ஏற்பட்டுள்ளது. இதற்காக அமெரிக்காவுக்கு நெருங்கிய தரப்பினர் இலங்கையில் செயற்பட வேண்டும் என்பது அவர்களின் நோக்கமாகும்.

இந்த விடயத்தை இவன்கா அவதானத்திற்கு கொண்டு செல்வதற்காக இந்த வர்த்தகர்கள் நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது. ராஜபக்ஷ ஆட்சியை கவிழ்ப்பதற்கு அமெரிக்கா கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தது. மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சியின் போது சீனாவுடன் இலங்கை மிகவும் நெருக்கமாக செயற்பட்டமையே இதற்கான காரணமாகும். தற்போது மைத்திரி அரசாங்கத்திலும் இதே நடைமுறை முன்னெடுக்கப்படுகின்றமையால் அமெரிக்காவின் எதிர்பார்ப்பு குறைந்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது. (இ-7)

# பிள்ளையானை நீதவான் நீதிமன்றில் இனிமேல் ஆஜர்படுத்த தேவையில்லை

## மேல் நீதிமன்றம் உத்தரவு



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தின் படுகொலைச் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட முன்னாள் கிழக்கு மாகாண முதலமைச்சர் பிள்ளையான் உட்பட நால்வரையும் எதிர்வரும் காலத்தில் நீதவான் நீதிமன்றுக்கு அழைத்துவர தேவையில்லையென மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

குறித்த வழக்கு மட்டக்களப்பு மேல் நீதிமன்றத்தில் நடைபெற்று வருவதனால் மேல்நீதிமன்றவழக்கின்போதே அவர்களை அழைத்து வரும்படி மேல் நீதி மன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பில் சந்தேக நபரான சிவநேசதுரை சந்திரகாந்தன் உட்பட 4 பேர் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். இந்தக்கொலைச் சம்பவம் தொடர்பில் சந்தேக நபரான சிவநேசதுரை சந்திரகாந்தன் கடந்த 2015 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 11 ஆம் திகதி கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## கொழும்பிலிருந்து விசாகப்பட்டினத்திற்கு நேரடி விமான சேவை

எதிர்வரும் ஜூலை மாதம் முதல் இலங்கை விமான நிறுவனம் கொழும்பிலிருந்து இந்தியாவின் விசாகப்பட்டினத்திற்கு நேரடி விமான சேவையை ஆரம்பிக்க தீர்மானித்துள்ளது.

வாரத்திற்கு 4 நாட்கள் விசாகப்பட்டினம் வரை நேரடி விமான சேவையை மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

எதிர்வரும் ஜூலை மாதம் 8ஆம் திகதி முதல் இந்த விமான சேவை ஆரம்பிக்கப்படவுள்ளது.

அதன்படி ஒவ்வொரு செவ்வாய்க்கிழமை, புதன்கிழமை, சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை களில் இந்த நேரடி விமான சேவை முன்னெடுக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# விபத்தில் நால்வர் பலி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு - ஹபரணை நெடுஞ்சாலையின் பெந்திவெவ பகுதியில், நேற்று அதிகாலை இடம்பெற்ற விபத்தில் 4 பேர் பலியாகியுள்ளனர் என, ஹபரணை பொலிஸார் தெரிவித்துள்ளனர். பேருந்தும் மோட்டார் சைக்கிளும் மோதியதிலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது எனவும் படுகாயமடைந்தவர்கள், பொலநறுவை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளனர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர். சம்பவத்துடன் தொடர்புடைய பேருந்துச் சாரதியைக் கைது செய்துள்ளதாகத் தெரிவித்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

# கவனயீர்ப்புப் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பினால் மக்கள் குடியிருப்புகளுக்கு மத்தியில் மயானங்கள் வேண்டாம்! எனும் தொனிப் பொருளிலான கவனயீர்ப்பு போராட்டம் இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் யாழ்ப்பாணம் பிரதான பேருந்து நிலையத்திற்கு முன்பு இடம்பெறும்.

இப் போராட்டம் தொடர்பில் சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் ,

வடமாணத்தில் குறிப்பாக யாழ். மாவட்டத்தில் மக்கள் நெருக்கமாக் வாழ்ந்து வரும் குடியிருப்புகளுக்கு மத்தியில் பிரேதங்களைஎரியூட்டும்மயானங்கள் இருந்து வருகின்றன. இம்மயானங்களில் பிரேதங்கள் ஏரியூட்டும் வேளைகளில் உருவாகும் புகையானது அம் மயானங்களுக்கு மிகவும் அருகில் வசிக்கும் குழந்தைகள், கர்ப்பிணிகள், நோயாளர் உள்ளிட்ட மக்களால் சுவாசிக்கப்படுவதுடன் தாங்க முடியாத துர்நாற்றத்தை அனுபவிக்கவேண்டிய அவல நிலை ஏற்படுகின்றது.

சிலவேளைகளில் அரை குறையாக எரிந்த உடற் பாகங்கள், எலும்புப் பகுதிகள் நாய்கள் போன்ற விலங்குகளால் இழுத்துச் செல்லப்பட்டு குடியிருப்பு களில் விடப்படுகின்றன.

இதனால் சுகாதார சீர்கேடும் சூழல் மாசடைவும் உளவியல் ரீதியான தாக்கங்களும் ஏற்படுகின்றன.

இதன் தாக்கம் சில வகையான நோய்களையும் ஏற்படுத்துகின்றது. எனவே மக்களின் அன்றாட வாழ்வுக்கு குடியிருப்புகளுக்கு மத்தியில் இருந்துவரும் மயானங்கள் அச்சத்தையும் அருவருப்பையும் சுகாதார மற்ற சூழலையும் ஏற்படுத்தி வருகின்றன.

எனவே மக்கள் குடியிருப்புக்களுக்கு மத்தியில் மக்களின் அன்றாட இயல்பு வாழ்க்கைக்கும் சுகாதாரத்திற்கும் வெளிப்படையாகவும் உளவியல் ரீதியாகவும் கடும் பாதிப்புக்களை ஏற்படுத்திவரும் மயானங்கள் அகற்றப்படவேண்டும் என்ற மக்களது கோரிக்கையை சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பு அதிகரிக்கின்றது.

இம் மனிதநேயக் கோரிக்கையை முன் வைத்து இன்று மு.ப 10 மணியளவில் யாழ்ப்பாணம் பிரதான பேருந்து நிலையத்திற்கு முன்னால் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றினை முன்னெடுக்கவுள்ளது.

இக் கவனயீர்ப்பில் மக்கள் சார்பாக பொது அமைப்புகள், மனிதநேய சக்திகள், அரசியற் கட்சிகள், சூழலியலாளர்கள், பொதுமக்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பு அழைப்பு விடுவித்துள்ளது. (இ-3)

# சீன நீர்மூழ்கிக் கப்பலுக்கு இலங்கை அனுமதி மறுப்பு


நீர்மூழ்கிக் கப்பலை கொழும்பு துறைமுகத்தில் நிறுத்தி வைப்பதற்கு சீனா இலங்கையிடம் அனுமதி கோரியிருந்தது. ஆனால் இலங்கை அதனை நிராகரித்துவிட்டது..

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி 2 நாட்கள் பயணமாக இலங்கை வந்துள்ளார். இந்த நிலையில் அடுத்த வாரம் தங்கள் நீர்மூழ்கிக் கப்பலை கொழும்பு துறைமுகத்தில் நிறுத்தி வைப்பதற்கு சீனா இலங்கையிடம் அனுமதி கோரியிருந்தது. ஆனால் இலங்கை அதனை நிராகரித்துவிட்டது.

இது குறித்து பாதுகாப்புத் துறை மூத்த அதிகாரி ஒருவர் கூறுகையில், "சீனா எங்களிடம் அனுமதி கேட்டது. ஆனால் நாங்கள் அதனை மறுத்துவிட்டோம்: இது ஒரு சிக்கலான விவகாரம்" என தெரிவித்தார்.

கடந்த 2014ஆம் ஆண்டு இதேபோல் சீனா அதன் நீர்மூழ்கிக் கப்பலை கொழும்பு துறைமுகத்தில் நிறுத்தி வைக்க அனுமதி கேட்டது. அப்போதைய ராஜபக்ஷ அரசு அதற்கு அனுமதி வழங்கியது. இது குறித்து இந்தியா கடும் அதிருப்தியை வெளிப்படுத்தியதுடன் பாதுகாப்பு அச்சுறுத்தல் இருப்பதாக கூறி கவலை தெரிவித்தது.

தற்போது பிரதமர் மோடி அங்கு பயணம் மேற்கொண்டிருக்கும் நிலையில், சீனாவின் கோரிக்கையை இலங்கை நிராகரித்து இருப்பது முக்கியத்துவம் பெற்றுள்ளது. (இ-3)





அகில இலங்கை இளங்கோ கழகம் நடத்திய புலமை ஒளி-2017 நூல் வெளியீட்டு விழா நேற்று முன்தினம் வியாழக்கிழமை யாழ்.புற்றளை மகா வித்தியாலயத்தில் இடம் பெற்றது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக கலந்து கொண்ட சிவன் பவுண்டேஷன் நிறுவநர் கணேஸ்வரன் வேலாயுதயம், மாகாண சபை உறுப்பினர் சந்திரலிங்கம் சுகிர்தன் உட்பட ஏனைய விருந்தினர்கள் மேடையில் அமர்ந்திருப்பதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். படங்கள்:-மகாலிங்கம்



# சிறுவர் அரங்கம்

## புகழ் போதை



மாணிக்கம், கேசவன் இருவரும் அடுத்தடுத்த வீட்டுக்காரர்கள். நல்ல வசதி படைத்தவர்கள். இருவரும் நண்பர்கள். ஆனால், குணத்தில் இருவரும் நேர்மாறானவர்கள்.
கேசவன் யாருக்காவது ஒரு சிறு கஷ்டம் என்றாலும் உதவி செய்வதற்கு முன்னால் நிற்பான். ஊரில் அவனை அனைவரும், "கலியுக கர்ணன்" என்று புகழ்வர்.
மாணிக்கம் அவனுக்கு நேர் எதிராக இருந்தான்.
அவனை அனைவரும், "சுயநலக்காரன்" என்று ஏசினர்.
மாணிக்கம், கேசவன் அடுத்தடுத்த காட்டை விலைக்கு வாங்கினர்.
கேசவன் தன் காட்டை அழித்து, கனிமரங்களை உருவாக்கினான். கிணறு வெட்டி அவற்றிற்கு நீர் பாய்ச்சினான். சில ஆண்டுகளுக்குப்பின் அந்த மரங்கள் கனிகளை வாரி வழங்கின.
மாணிக்கம் தன் நண்பனைப் போல் காட்டை அழிக்காமல், மரங்களை நடாமல், அப்படியே விட்டு விட்டான். அதனால், அவனுடைய காட்டில் முள் புதர்கள் சேர்ந்து விட்டன.
கேசவன் தன்னுடைய பழத்தோட்டத்திற்கு போக வேண்டுமென்றால் மாணிக்கத்தின் காட்டு வழியாகத்தான் போக வேண்டும்.
ஒருநாள்,
கேசவன் மாணிக்கத்தின் காட்டு வழியாகப் போய்க் கொண்டிருந்த போது, அவன் காலில் நாலைந்து முட்கள், "நறுக் நறுக்" என்று குத்தி இரத்தம் கொட்டியது.
அதன் காரணமாக கோபம் கொண்ட கேசவன் மாணிக்கத்தைப் பார்த்து திட்டினான்.
அதனால், இருவருக்கும் சண்டை உண்டாகி நட்பு முறிந்தது.
அதனால் அவர்கள் அன்று முதல் பேசிக் கொள்வதேயில்லை.
நாட்கள் சென்றன- ஒருநாள் கேசவன் தன் தோட்டத்தில் விளைந்த பழங்களை எல்லாம் பறித்து, ஊரிலுள்ள அனைவருக்கும் இலவசமாக வழங்கினான்.
மகிழ்ச்சி கொண்ட ஊர்மக்கள் அனைவரும் அவனை வாழ்த்தினர். இப்படியே ஊரிலுள்ளவர்கள் வாழ்த்த வாழ்த்த கேசவனுக்கு புகழ்வெறி பிடிக்கத் தொடங்கியது.
கேசவன் ஊரையே அழைத்து ஆயிரக்கணக்கில் செலவு செய்தான். மக்களுக்கு தேவையானதை வாரி, வாரி இறைத்தான். மக்களும் அவன் வீட்டு வாசலில் குவிந்தனர். கேசவனும் புகழ் வெறியில், மக்களுக்கு தேவையானதை பூர்த்தி செய்து வந்தான்.
அந்த சமயத்தில் அங்கு வந்து சேர்ந்த மாணிக்கம் கூட்டத்தினரை நோக்கி, "ஊர் மக்களே! நீங்கள் யாருடைய பணத்தில் ஆட்டம் போடுகிறீர்கள் தெரியுமா?" என்று கேட்டான்.
எல்லாரும் விழித்தனர்.
"இது என்னுடைய பணம்".
கேசவன் தந்தை தன்னுடைய நிலங்களை எல்லாம், என் தந்தையிடம் விற்று பணம் வாங்கியிருந்தார். ஆனால், நட்பு காரணத்தால், கேசவன் தந்தையின் நிலத்தை சொந்தமாக்கிக் கொள்ளாமல் விட்டு விட்டார். என் தந்தை இறந்து போனபிறகு இந்த விடயம் இதுவரை எனக்கு தெரியவில்லை. இன்று நான் என் தந்தையின் பழைய பெட்டியை குடைந்தபோது அதில் கேசவன் தந்தை என் தந்தைக்கு எழுதிக் கொடுத்த கிரயப் பத்திரத்தைக் கண்டு எடுத்தேன். "அதனால்... இன்றுமுதல் கேசவனுடைய சொத்துக்கெல்லாம் நானே சட்டப் பூர்வமான சொந்தக்காரன். இதுவரை அவன் ஊருக்கெல்லாம் வாரி வழங்கினான். இனிமேல் நான் அதற்கு சம்மதிக்க மாட்டேன். எல்லாரும் வீட்டிற்கு போங்கள்," என்று சொன்னான்.'

தொடரும்...

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

05.2017
13

- 1648 - டில்லியில் செங்கோட்டை கட்டி முடிக்கப்பட்டது.
- 1765 - யாழ்ப்பாணத்தின் டச்சுத் தளபதியாக அந்தனி மூயார்ட் நியமிக்கப்பட்டான்.
- 1846 - ஐக்கிய அமெரிக்கா மெக்சிக்கோ மீது போரை அறிவித்தது.
- 1861 - பெரும் வால்வெள்ளி ஒன்று அவுஸ்திரேலியாவில் அவதானிக்கப்பட்டது.
- 1880 - நியூஜேர்சியில் மென்லோ பூங்காவில் எடிசன் மின்சாரத்தில் இயங்கும் தனது முதலாவது தொடருந்தை சோதித்தார்.
- 1943 - இரண்டாம் உலகப் போர்: வட ஆபிரிக்காவில் ஜேர்மனிய மற்றும் இத்தாலியப் படையினர் கூட்டுப்படைகளிடம் சரணடைந்தனர்
- 1952 - இந்தியப் பாராளுமன்றத்தின் மேலவையான மாநிலங்களவையின் முதலாவது அமர்வு இடம்பெற்றது.
- 1960 - உலகின் ஏழாவது உயர மலையான தவுளகிரியின் உச்சியை சுவிட்சர்லாந்து மலையேறிகள் இருவர் முதன் முதலில் அடைந்தனர்.
- 1989 - சீனாவில் தியனன்மென் சதுக்கத்தில் நூற்றுக்கணக்கான மாணவர்கள் உண்ணா நோன்புப் போராட்டத்தை ஆரம்பித்தனர்.
- 1996 - பங்களாதேஷில் வீசிய கடும் புயலில் சிக்கி 600 பேர் வரையில் இறந்தனர்.
- 1997 - இலங்கை இராணுவம் விடுதலைப் புலிகளுக்கு எதிராக ஜெயசிக்குறு இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்தனர்.
- 1998 - இந்தியா மேலும் இரண்டு அணுகுண்டுச் சோதனைகளை மேற்கொண்டது. இந்தியா மீது ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஜப்பான் பொருளாதாரத் தடையைக் கொணர்ந்தன.
- 2006 - அல்லைப்பிட்டி படுகொலைகள், 2006: யாழ்ப்பாணம், அல்லைப்பிட்டியில் 13 பொதுமக்களை இலங்கைக் கடற்படையினர் படுகொலை செய்தனர்.
- 2006 - தி.மு.க. தலைவர் மு. கருணாநிதி 5ஆவது முறையாக தமிழக முதல்வர் பதவியை ஏற்றார்.

### பிறப்புக்கள்

- 1882 - ஜோர்ஜெஸ் பிராக், பிரெஞ்சு ஓவியர் (இ. 1963)
- 1905 - பக்ருதின் அலி அகமது, இந்தியக் குடியரசுத் தலைவர், (இ. 1977)
- 1918 - பாலசரஸ்வதி, பரதநாட்டிய மேதை (இ. 1984)
- 1978 - மைக் பிபி, அமெரிக்கக் கூடைப்பந்து ஆட்டக்காரர்

### இறப்புகள்

- 1898 - பி. ஆர். ராஜமய்யர், தமிழ் எழுத்தாளர் (பி. 1872)
- 1978 - வி. தெட்சணாமூர்த்தி, தவில் மேதை (பி. 1933)
- 2000 - தாராபாரதி தமிழ்க்கவிஞர் (பி.1947)
- 2001 - ஆர். கே.நாராயண், இந்திய நாவலாசிரியர் (பி. 1906)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 200 | 100 | 160 | 100 | 120 | 100 |
| உருளைக்கிழங்கு | 100 | 120 | 80 | 110 | 100 | 120 | 100 |
| பச்சைமிளகாய் | 120 | 200 | 120 | 160 | 170 | 200 | 120 |
| தக்காளி | 140 | 140 | 120 | 100 | 100 | 120 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 100 | 80 | 70 | 80 | 80 | 60 |
| கோவா | 150 | 200 | 200 | 140 | 150 | 200 | 140 |
| கரட் | 130 | 200 | 250 | 280-300 | 170 | 240 | 200 |
| பூசணி | 50 | 60 | 50 | 60 | 40 | 80 | 60 |
| புடோல் | 80 | 120 | 120 | 80 | 80 | 80 | 80 |
| வாழைக்காய் | 50 | 40 | 40 | 60 | 40 | 60 | 50 |
| சின்ன வெங்காயம் | 200 | 250 | 220 | 300 | 280 | 200 | 200 |
| பெரிய வெங்காயம் | 100 | 120 | 100 | 90 | 100 | 100 | 100 |
| பாகற்காய் | 180 | 200 | 200 | 250 | 140 | 120 | 160 |
| வெண்டிக்காய் | 60 | 60 | 100 | 100 | 90 | 120 | 100 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 100 | 100 | 100 | 120 | 80 |
| பயற்றங்காய் | 150 | 100 | 80 | 100 | 140 | 120 | 120 |
| லீக்ஸ் | 80 | 100 | 120 | 100 | 100 | 120 | 120 |
| பீற்றூட் | 130 | 100 | 140 | 120 | — | 160 | 140 |
| கறிமிளகாய் | 100 | 200 | 160 | 200 | — | 160 | 140 |
| முருங்கைக்காய் | 150 | 100 | 100 | 140 | 100 | 160 | 150 |
| போஞ்சி | 160 | 200 | 200 | 240 | 140 | 200 | 180 |
| கத்தரிதம்புள்ள | 80 | 60 | 60 | 100 | — | 100 | 80 |
| கீரை - 1பிடி | 30 | 20 | 20 | 40 | 20 | 40 | 30 |
| தேசிக்காய் | 60 | 50 | 40 | 60 | 50 | 50 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 60 | 80 | 70 | 65 | 40-60 | 70 |
| இராசவள்ளி | 200 | 300 | 300 | 200 | 220 | 200 | 200 |
| வெங்காயப்பூ | 200 | 100 | — | 200 | — | 200 | — |
| முள்ளங்கி | 60 | 100 | — | 70 | 80 | 120 | 80 |
| பொன்னாங்காணி | 30 | 60 | 50 | 30 | 40 | 40 | 20 |
| வல்லாரை | 10 | 20 | 20 | 10 | 20 | 20 | 20 |
| ஈரப்பலா | — | 60 | 60 | — | — | — | — |

துருப்பிடித்து அழிவதை விட
தேய்ந்து அழிவது சிறப்பு.
~ ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் எமது வழிபாட்டுக்குரிய நாள்

2009 மே மாதம் 18ஆம் திகதி வன்னிப் பெரு நிலப்பரப்பில் நடந்த யுத்தத்தின் இறுதி நாள்.

எங்கள் உறவுகள் உயிரிழந்து போன நாட்களின் ஒட்டுமொத்த நினைவு நாள்.

தமிழர்கள் என்பதால் குண்டு போட்டு எங்கள் இனத்தைச் சங்காரம் செய்த நாசகாரத்தின் உச்சமான நாள்.

ஒரு நாடு; இரு இனங்கள். இறந்தது மனிதர்கள். அதிலும் குழந்தைகள், பெண்கள், வயோதிபர்கள் என ஏராளம்.

இருந்தும் சிங்கள ஆட்சியாளர்கள் அதனை வெற்றி நாளாகக் கொண்டாடினர் என்றால், அவர்களிடம் இருந்த வக்கிரம் எத்தன்மையது என்பதை அறிவது கடினமன்று.

இலங்கைத் தீவில் நாம் அனைவரும் சமம் என்பது ஆட்சியாளர்களின் மேடைப் பேச்சு.

சாந்தியும் சமாதானமும் ஏற்பட்டு இந் நாட்டில் அனைத்து மக்களும் ஒற்றுமையாக வாழ வேண்டும் என்பது விசேட பண்டிகைகளின் போது அரச தலைவர்கள் வழங்கும் ஆசிச் செய்திகள்.

ஆனால், பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் துடிதுடித்துப் பதைபதைத்து போன துன்பகரமான நாளை வெற்றி நாளாக கொண்டாடும் அக்கிரமம் இலங்கையின் ஆட்சியில் தவிர வேறு எங்கும் நடக்க முடியாது.

போர் நடந்தது உண்மை. அதில் அப்பாவித் தமிழ் மக்கள் கொல்லப்பட்டது உண்மை. விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்டனர் என்பதும் உண்மை.

அதற்காக அதை வெற்றித் திருவிழாவாக ஆட்சியாளர்கள் கொண்டாடி மகிழ்வது எந்த வகையில் நியாயமானது என்பதுதான் நம் கேள்வி.

உயிரிழந்தவர்கள் நம் நாட்டவர்கள். அவர்கள் உயிரிழந்தது உங்களுக்கு வெற்றி என்றால், எப்போதுதான் உங்களால் சமாதானத்தை ஏற்படுத்த முடியும்?

உங்களிடம் எம்மீது நல்லெண்ணம் இருக்குமாயின் மே 18ஐ போர் கொடூரத்தில் உயிரிழந்தவர்களின் நினைவேந்தலுக்குரிய நாளாகப் பிரகடனம் செய்யுங்கள்.

போரில் இறந்தவர்கள் தமிழர்கள் என்று பாராமல் தமிழர்களும் இந்நாட்டவர்களே என்று நினைத்து மே 18ஐ வன்னிப் போரில் உயிரிழந்த தமிழ் உறவுகளின் நினைவேந்தல் நாளாக அங்கீகரியுங்கள்.

இதைவிடுத்து மே 18ஆம் திகதிதான் டெங்கு ஒழிப்புக்கான தேசிய தினம் என்றால், நீங்கள் மனிதர்களா என்ன?

டெங்கு நோயை ஒழிப்பது உங்கள் நோக்கமா? அல்லது முள்ளிவாய்க்கால் நினைவேந்தலுக்கு ஊறு செய்வது நோக்கமா?

அட, இதுபற்றியெல்லாம் நாம் நினைக்கவில்லை என்றால், மே 18 முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நாள் என்று கலண்டரில் பதிவு செய்யுங்கள்.

இதை மத்திய அரசு செய்யும் வரை எங்கள் மாகாண அரசு மே 18ஐ நினைவேந்தலுக்குரிய நாளாக அறிவித்து அன்றைய நாளில், எமக்காக உயிரிழந்து போன எங்கள் உறவுகளை நினைந்துருக.

அவர்களுக்காக நெய்விளக்கேற்றி அனைவரும் தியானம் செய்ய ஏற்பாடு செய்யுங்கள்.

## தொழில் வெற்றிடங்களுக்கான ஆட்சேர்ப்பு யாழ்ப்பாணத்தில்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் தொழில் தேடுவோருக்கான தொழில் வாய்ப்புக்களை பெற்றுக் கொடுக்கும் நோக்கில் மாவட்ட பொது மக்கள் தொழில் சேவை மத்திய நிலையம் நடைமுறைப்படுத்தி வரும் நடவடிக்கைகளின் தொடர்ச்சியாக நாடு முழுவதும் கிளைகளைக் கொண்டுள்ள முன்னணி தனியார் கம்பனி ஒன்றின் 250 வரையிலான தொழில் வெற்றிடங்களுக்கு ஆட்களைத் தெரிவு செய்வதற்கான நேர்முகத் தேர்வு யாழ்ப்பாணத்தில் 19.05. 2017 வெள்ளிக்கிழமை காலை 8 மணி முதல் பிற்பகல் 2 மணிவரை நடத்தப்படவுள்ளது.

இந்நேர்முகத் தேர்வில் கலந்து கொள்ள விரும்பும் க.பொ.த.சாதாரண தரத்தில் குறைந்தது 5 பாடங்கள் சித்தியடைந்தவர்கள் மற்றும் க.பொ.த. உயர்தரம் கற்ற 40 வயதிற்குட்பட்ட ஆண், பெண் விண்ணப்பதாரிகள் நேர்முகத் தேர்வில் பங்குபற்றி தொழில் வாய்ப்பினைப் பெற்றுக் கொள்ளலாம் என்பதை அறியத் தருவதோடு மேலதிக விளக்கங்கள், நேர்முகத் தேர்வு நடைபெறும் இடம் தொடர்பான அறிவுறுத்தல்களை 021 221 9359 இலக்க அலுவலக தொலைபேசி ஊடாக அல்லது மாவட்டச் செயலகத்தின் பொது மக்கள் தொழில்சேவை மத்திய நிலையத்தில் நேரடியாகப் பெற்றுக்கொள்ளலாம் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன் என யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன் அறிவித்துள்ளார். (இ)

## மோடியின் ஹெலியினால் பெண்ணொருவர் காயம்

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி வந்திறங்கிய ஹெலியினால் பெண்ணொருவர் காயத்துக்கு உள்ளாகிய நிலையில், டிக்கோயா-கிளங்கன் மாவட்ட வைத்தியசாலையில் நேற்று அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஹட்டன்,டன்பார் மைதானத்தில் வந்திறங்கிய மோடியின் ஹெலியில் அதிகவலு கொண்ட காற்று வீசியமையினால் மைதானத்தை அண்மித்த சமனகம பகுதி குடியிருப்பொன்றில் சேதம் ஏற்பட்டுள்ளது.

அதனால், அந்தப்பெண் காயதத்துக்கு உள்ளாகிய நிலையில் டிக்கோயா மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக, டிக்கோயா வைத்திய அதிகாரிகள் தெரிவித்தனர். (செ)

## கவிதை நூல் வெளியீட்டு விழா

(கரணவாய்)

கண்ணன் எழுதிய கற்பனையில்லா ஒப்பனைகள் கவிதை நூல் வெளியீட்டு விழா நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 9.30 மணிக்கு கரணவாய் மூத்த விநாயகர் திருமண மண்டபத்தில் வவுனியா பிரதேச கலாசார உத்தியோகத்தர் பண்டிதர் வீ.பிரதீபன் தலைமையில் இடம்பெறும். இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக பருத்தித்துறை பிரதேச செயலர், கவிஞர் இ.த. ஜெயசீலன், சிறப்பு விருந்தினர்களாக சிரேஷ்ட அறிவிப்பாளர் பண்பலை வேந்தன் ரி.எஸ்.முகுந்தன், பருத்தித்துறை பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் பண்டிதர் பொன் சுகந்தன், கௌரவ விருந்தினர்களாக எழுத்தாளர் சமரபாகு சீனா உதயகுமார், புலமைச்சுடர் பிரதம ஆலோசகர் இ.ஜனதன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3-60)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரை யாழ். பிரதேசத்தில் நுணாவில், கைதடி, நாவற்குழி, மறவன் புலோ, தச்சன் தோப்பு, தனாங் கிளப்பு, கோகிலாக்கண்டி, கேரதீவு வீதி, அறுகுவெளி, கொடிகாமம் கச்சாய் வீதி, பனைவள ஆராய்ச்சி நிலையம், சங்கன கொங்கிறீட் மிக்சர் பிளான்ட் ஆகிய பிரதேசங்களிலும மின் தடைப்படும். (இ-9)

## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்

### சொத்துரிமை நடைமுறை எப்படி வந்தது?

முந்தைய காலம் முதல் இரண்டுவிதமான சொத்துரிமை இருந்து வருகிறது. அதாவது தந்தையின் சொத்துரிமை மகனுக்குத்தான். பெண்ணைத் திருமணம் செய்து கொடுத்து விட்டால் பிறகு அவ்கணவனின் வீட்டில் தான் உரிமை கொண்டாட முடியும். பிராமணக் குடும்பங்களில் மகனுக்குத்தான் சொத்துரிமை.




தாயின் சொத்திற்கு உரிமையுள்ளவர்கள் பெண் பிள்ளைகள். திருமணமாகிவிட்டாலும் புகுந்தவீட்டில் அவர்களுக்குச் சொத்துரிமை இல்லை. சொந்த வீட்டில்தான் அவள் உரிமை கொண்டாட முடியும். அவளுக்கும் அவளது பிள்ளைகளுக்கும் பிறந்த வீட்டில் தான் சொத்து ரிமை.

சத்திரியர்கள் மற்றும் சூத்திரர்கள் குடும்பங்களில் பெண்களுக்குத்தான் சொத்துரிமை. தாயின் சொத்திலேயே அவர்கள் உரிமை கொண்டாடமுடியும். கூட்டுக் குடும்ப முறை சிதையத் தொடங்கிய பின்பு தாய் வழிச் சொத் திற்கான தர்க்கங்கள் தலைதூக்கின: அனைவருக்கும் சொத்தில் பங்கு வேண்டும்என்றநிலை வந்தது.

இன்றுஆண் பெண் இருபாலாருக்கும் சொத்துரிமை உள்ளது. கணவன-மனைவி உறவிலும் பெரும் மாற்றம் ஏற்பட்டது.

'கணவனது சொத்தில் மனைவிக்கும் பிள்ளைகளுக்கும் உரிமை உள்ளது. கணவன் இறந்து விட்டாலும் அந்த உரிமையில் உந்த மாற்றமும் இல்லை. (தொடரும்)

## சாஸ்திரங்கள்

✦ சித்திரவதை,துரோகம், கொலை புரிந்தவர்கள், கொடிய மிருகங்களினால் கடித்து குதறப்படுவது.
-அந்தகூபம் (கருடபுராணம்)




வழிதுணையாக வாருங்கள். அவ்வளவையும் அனுபவியுங்கள்.

அகம் குளிர, முகம் மலர அந்த மூலவனையும் தரிசியுங்கள்.

எந்த வரலாறை எடுத்துக் கொண்டாலும் இது ஏன் இப்படி நடந்தது? இது எவ்வாறு இங்கே வந்தது? என்று ஏகப்பட்ட கேள்விகள் எழும். எனவே ஒவ்வொரு வரலாறும் பிழைகாண முடியாத ஒரு பின்புலத்தைக் கொண்டிருக்கும்.

திருமலை தெய்வத்தின் வரலாற்றிலும் அப்படியொரு பின்புலம் அமைந்திருக்கிறது. வைகுந்தவாசனே வடித்துத் தந்த வரலாறல்லவா?

திருமால் வந்து நின்ற திருவேங்கடமலை, இப்போது இருக்கும் இடத்துக்கும் எப்படி வந்து சேர்ந்தது? தன் மனதுக்குத் தகுந்த இடமாக மாலன் இந்த மலையை தேர்ந்தெடுத்தது எப்படி? இந்தப் பின்புலத்துடன்தான் வரலாறு தொடங்குகிறது. (தொடரும்)

## விலங்கு விசர் நோயை இல்லாது ஒழிப்போம்!

நம்பகமான ஒருவரிடமிருந்து வளர்ப்பிற்காக நாய்க் குட்டிகளை பெற்றுக்கொள்வோம். அநாதரவாக வீதிகளில் விடப்பட்டுள்ள குட்டிகளை எடுத்து வளர்ப்பதனை தவிர்ப்போம்.

**நீர் வெறுப்பு நோய் ஏற்பட்டால் மரணம் நிச்சயம். ஆனாலும் அது தடுக்கப்படக்கூடியதே.**

தகவல்: சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, யாழ். மாநகரசபை.

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



❖ ❖ இரகசியமாகப் பிறரைக் குறைகூறுவது பாவம் என்றறிவாய். அதை முழுதும் நீ நீக்க வேண்டும். மனத்தில் பல நினைவுகள் எழலாம். ஆனால் அவற்றை வெளியிட முயன் றால் அது மெல்ல மெல்லத் தினையள வைப் பனையளவாக்கும். மன்னித்து மறப்பாயானால் எல்லாம் முடிந்துவிடும்.

❖ வீண்வாதம் புரிய யாராவது உன்னிடம் வந்தால் மரியாதையாக உன்னை விலக்கிக்கொள். எல்லா நெறியிடமும் உனது அனுதாபத்தை வெளியிட வேண்டும். இந்த அடிப்படைக்குணங்கள் உன்னிடம் வெளிப்படத் தோன்றும் போதுதான் பேராற்றலோடு உழைக்கும் திறமை உனக்கு உண்டாகும்.

❖ குழந்தையின் கபடமற்ற தன்மையோடு ஆழ்ந்த யோசனையையும் இணைத்துக்கொள். அனைவருடனும் ஒத்துவாழ். ஆண்வத்தை முழுவதும் ஒழித்துவிடு. ஒரு பக்கச்சார்பான கருத்துக்களுக்கு இடம் கொடுக்காதே. பயனற்ற வாதப்போர் பெரும் பாவத்தையே தரும்.

# நடப்புத் தொடரில் சாதனையுடன் வெற்றியினைக் கொண்டாடிய பஞ்சாப்



பஞ்சாப் அணிக்கு எதிரான போட்டியில் கடைசி ஓவரில் பொல்லார்டு சொதப்பியதால் பஞ்சாப் அணி 7 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

மும்பை மற்றும் பஞ்சாப் அணிக்கு எதிரான 51ஆவது லீக் போட்டி மும்பை வான்கடே மைதானத்தில் நடைபெற்றது. இதன்படி நாணயச்சுழற்சியில் வென்ற மும்பை அணி பந்து வீச தீர்மானித்தது.

இதைத் தொடர்ந்து பஞ்சாப் அணிக்கு மார்ட்டின் குப்தில், சகா ஆகியோர் தொடக்க வீரர்களாக களம் இறங்கினார்கள். இருவரும் தொடக்கம் முதலே அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தினார்கள்.

குப்தில் 18 பந்தில் 36 ஓட்டங்கள் குவித்து ஆட்டம் இழந்தார். அடுத்து வந்த மக்ஸ்வெல் அசுர வேகத்தில் ஓட்டங்களை குவித்தார்.

அவர் 21 பந்தில் இரண்டு பவுண்டரி, 5 சிக்சர்களுடன் 47 ஓட்டங்கள் சேர்த்தார். இதனால் பஞ்சாப் அணியின் ஓட்ட விகிதம் 10-ஐ தாண்டிச் சென்றது.

ஒருபுறம் முக்கியமான இரண்டு விக்கெட்டுக்கள் வீழ்ந்தாலும் மறுமுனையில் சகா தொடர்ந்து அதிரடி காட்டினார்.

அவருக்குத் துணையாக ஷேன் மார்ஷ் 16 பந்தில் 25 ஓட்டங்களும், அக்சார் பட்டேல் ஆட்டமிழக்காமல் 13 பந்தில் 19 ஓட்டங்களும் சேர்த்தனர்.

சகா 55 பந்தில் 11 பவுண்டரி, 3 சிக்சர்களுடன் 93 ஓட்டங்கள் குவித்து ஆட்டமிழக்காமல் குவிக்க, கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி 20 ஓவரில் 3 விக்கெட் இழப்பிற்கு 230 ஓட்டங்கள் குவித்தது.

மும்பை அணி சார்பில் மெக்கினகன் 4 ஓவரில் 54 ஓட்டங்கள் விட்டுக் கொடுத்தார்.

இதைத் தொடர்ந்து கடின இலக்கை துரத்துவதற்கு மும்பை அணி சார்பில் தொடக்க வீரர்களாக சிம்மன்ஸ் மற்றும் பார்தீவ் பட்டேல் களமிறங்கினர்.

கடினமான இலக்கு என்பதால் இருவரும் ஆட்டத்தின் முதல் ஓவரில் இருந்தே அதிரடியை காட்டத் தொடங்கிவிட்டனர். இதனால் மும்பை அணியின் ஓட்ட விகிதம் மளமளவென எகிறியது.

அணியின் எண்ணிக்கை 99 ஆக இருந்த போது பட்டேல் 38 ஓட்டங்களுடன் சர்மா பந்து வீச்சில் ஆட்டமிழந்தார். அடுத்து வந்த ரானா 12 ஓட்டங்கள், அணியின் தலைவர் ரோகித் சர்மா 5 ஓட்டங்கள் என அடுத்தடுத்து வெளியேறி ரசிகர்களுக்கு அதிர்ச்சி அளித்தனர்.

இருந்த போது மற்றொரு தொடக்க வீரரான சிம்மன்ஸ் தனது அதிரடியை நிறுத்தாமல் ஆடிக்கொண்டிருந்தார். அவரும் அரைச் சதம் கடந்து 59 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

இதனால் ஆட்டத்தில் பரபரப்பு ஏற்பட்டது. பின் வரிசையில் களமிறங்கிய பொல்லார்டு மற்றும் ஹார்திக் பாண்ட்யா ஆட்டத்தை தங்கள் கையில் எடுத்துக் கொண்டு, பஞ்சாப் அணியின் பந்து வீச்சாளர்களை கதற வைத்தனர்.

ஒரு கட்டத்தில் பஞ்சாப் அணி வெற்றி பெறும் என்பது போய், மும்பை அணி வெற்றி பெற்று விடும் என்ற நம்பிக்கை வந்தது. அதிரடியாக ஆடிய பாண்ட்யா மும்பை அணி 176 ஓட்டங்கள் எடுத்திருந்த போது 30 ஓட்டங்களில் ஆட்டமிழந்ததால், ஆட்டத்தில் பரபரப்பு கூடியது.

யார் வெற்றி பெறுவார் என்பது போல் மதில் மேல் பூனையாக இருந்தது. இறுதி ஓவரில் மும்பை அணியின் வெற்றிக்கு 16 ஓட்டங்கள்தேவைப்பட்டது. கடைசி ஓவரை பஞ்சாப் அணி சார்பில் மோகித் சர்மா வீசினார். முதல் பந்தில் ஒரு ஓட்டம் எடுக்கப்பட்டது. அடுத்த பந்தை எதிர்கொண்ட பொல்லார்டு அதை சிக்ஸருக்கு அனுப்பினார்.



இதைத் தொடர்ந்து 4 பந்துக்கு 9 ஓட்டங்கள் தேவைப்பட்டன. அடுத்த பந்தை எதிர்கொண்ட பொல்லார்டு ஸ்டிரைட் திசையில் அடித்து ஆட ஆனால் அது பீல்டருக்கு நேரே சென்றதால் இரண்டு ஓட்டங்கள் எடுக்க முடியாது என்று நின்று விட்டார்.

இதனால் மூன்று பந்துக்கு 9 ஓட்டங்கள் தேவைப்பட்டது. நான்காவது பந்தை சர்மா அற்புதமான யார்க்கர் மூலம் ஓட்டம் எதுவும் எடுக்க விடாமல் ஆக்கினார். இதைத் தொடர்ந்து 5ஆவது பந்தையும் பொல்லார்டு மிஸ் செய்ததால், பஞ்சாப் அணியின் வெற்றி உறுதியானது.

கடைசி பந்திலும் ஒரு ஓட்டம் எடுத்து பொல்லார்டு சொதப்ப, பஞ்சாப் அணி 7 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. பஞ்சாப் அணி திரில் வெற்றி பெற்றதைத் தொடர்ந்து, அணியின் உரிமையாளர் பிரீத்தி ஜிந்தா அருகில் இருந்த தன் நண்பர்களை கட்டிப் பிடித்து மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்.



மேலும் 230 ஓட்டங்கள் குவித்த பஞ்சாப் அணி பத்தாவது ஐபிஎல் தொடரில் அதிக ஓட்டங்கள் குவித்த முதல் அணி என்ற சாதனையை படைத்துள்ளது. இதற்கு அடுத்தபடியாக மும்பை அணி 223 ஓட்டங்களுடனும், டில்லி அணி 214 ஓட்டங்களுடனும் உள்ளன.

# பாசக்கார ரசிகரால் பதறிப்போன ரெய்னா

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் டில்லி, குஜராத் அணிகளுக்கு இடையேயான போட்டியின் போது ரசிகர் ஒருவர் அதிரடியாக மைதானத்திற்குள் புகுந்து ரெய்னாவிடம் ஆட்டோகிராப் கேட்டதால் பரபரப்பு ஏற்பட்டது.

கான்பூரில் நடந்த போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய குஜராத் அணி 195 ஓட்டங்கள் எடுத்தது. பின்னர் டில்லி அணி துடுப்பாட குஜராத் அணி பந்து வீசியது .

சுரேஷ் ரெய்னா களத்தடுப்பில் ஈடுபட்டு கொண்டிருந்தார். நான்காவது ஓவரின் மூன்றாவது பந்தை சங்வான் வீச ஆயத்தமானார்.

அப்போது பலத்த பாதுகாப்பையும் மீறி மைதானத்துக்குள் புகுந்த பாசக்கார ரசிகர் ஒருவர், ரெய்னா முன் மண்டியிட்டு அவர் கையை பிடித்துக் குலுக்கினார். பின்னர், ஒரு பேப்பரில் அவரிடம் ஆட்டோகிராப் கேட்டார்.

இதை எதிர்பார்க்காத ரெய்னா, அந்த ரசிகரை, இது முறையல்ல, இப்படி வருவது தவறு என்று கூறி, மைதானத்துக்கு வெளியே போகச் சொன்னார்.

நடுவரும் சேர்ந்து அந்த ரசிகரை வெளியே கொண்டு விட்டனர். இந்த சம்பவத்தால் சிறிது நேரம் மைதானத்தில் பரபரப்பு ஏற்பட்டது.



வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# தோல்வியை நினைத்தால் சிரிப்பு சிரிப்பாக வருகிறது

## விரக்தியில் விராட்



இந்த ஆண்டு நடைபெற்ற பத்தாவது ஐபிஎல் தொடரை நினைத்தால் சிரிப்புத் தான் வருகிறது என பெங்களூர் அணியின் தலைவர் விராட் ஹோலி தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் 10ஆவது ஐபிஎல் தொடர் நடைபெற்று வருகிறது. இதில் லீக் போட்டிகள் தற்போது முடியும் தருவாயில் உள்ளது.

ஹோலி, கெயில், டிவிலியர்ஸ், வாட்சன் என ஒரு நட்சத்திர பட்டாளத்தையே உள்ளடக்கிய பெங்களூர் அணி, புள்ளிப்பட்டியலில் கடைசி இடத்தில் உள்ளது.

இதனால் பிளே ஓப் சுற்றுக்கான தகுதியை இழந்தது. இந்நிலையில் இது குறித்து ஹோலி கூறுகையில், யானைக்கும் அடி சறுக்கும் என சொல்வார்கள். அது இன்று உண்மையாகிவிட்டது.

சில நேரங்களில் தோல்வியை சகித்துக்கொள்ள வேண்டியது அவசியம்.

அப்போது தான் அதை தாண்டி அடுத்த போட்டிகளில் கவனம் செலுத்த முடியும். நடந்ததை பார்த்தால் சிரிப்பதை தவிர, வேறு ஒன்றும் சொல்வதற்கு இல்லை என கூறியுள்ளார்.

# இந்தியாவின் வெற்றிக்கு என்றும் துணை நிற்பேன்

## யுவராஜ்சிங் தெரிவிப்பு

ஐசிசி சம்பியன்ஸ் கிண்ணக் கிரிக்கெட் தொடரில் இந்திய அணியின் நோக்கம் நிறைவேற பயனுள்ள பங்களிப்பை அளிப்பேன் என யுவராஜ் சிங் கூறியுள்ளார்.

ஐசிசி சம்பியன் கிண்ணக் கிரிக்கெட் தொடர் வரும் ஜூன் மாதம் முதலாம் திகதி இங்கிலாந்தில் தொடங்கவுள்ளது.

கடந்த 2002, 2004, 2006 சம்பியன்ஸ் தொடரில் பங்கேற்று விளையாடிய யுவராஜ் சிங் அதற்கு பிறகான போட்டிகளில் விளையாடவில்லை.

11 வருடங்களுக்கு பின்னர் மீண்டும் சம்பியன்ஸ் தொடரில் விளையாட உள்ளார்.

இதுகுறித்து பேட்டியளித்த யுவராஜ் சிங், சம்பியன்ஸ் கிண்ணப் போட்டிக்கான இந்திய அணிக்கு திரும்பி இருப்பது மகிழ்ச்சி அளிப்பதாக கூறியுள்ளார்.



மேலும் இந்திய அணி உள்ளூர் போட்டிகளில் தொடர் வெற்றி பெற்று நல்ல போர்மில் இருப்பதாக கூறிய அவர் அதே உத்வேகத்துடன் சம்பியன்ஸ் போட்டியிலும் செயற்படும் என கூறியுள்ளார்.

சம்பியன் பட்டத்தை தக்க வைக்க வேண்டும் என்ற இந்திய அணியின் நோக்கம் நிறைவேற தனது பங்களிப்பை அளிப்பேன் ஏனவும் யுவராஜ் தெரிவித்துள்ளார்.

### குடும்பஸ்தர் சடல ...

கொடிக் கயிற்றில் இறுகிய நிலையில் குடும்பஸ்தரின் சடலம் ஒன்று மீட்கப்பட்டதாக நெல்லியடிப் பொலிஸார் தெரிவித்தனர்.

கிருஸ்ணராஜா கோகுலதாஸ் (வயது -31) என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையே நேற்று காலையில் சடலமாக மீட்கப்பட்டவராவார். சடலமாக மீட்கப்பட்டவர் துன்னாலை கிழக்கில் உள்ள அவரது வீட்டு வளவில் ஆடைகள் உலரப் போடுவதற்காக கட்டப்பட்டிருந்த கொடிக்கயிற்றில் கழுத்து இறுகிய நிலையில் மரம் ஒன்றிற்கு அருகில் சடலம் காணப்பட்டது.

சடலத்தில் கால் பகுதியில் இரத்தக்கறைகள் காணப்பட்ட நிலையில் நெல்லியடிப் பொலிஸார் சம்பவ இடத்திற்கு வருகைதந்து விசாரணைகளை மேற்கொண்டனர்.

கரவெட்டி மரணவிசாரணை அதிகாரி வே.பாஸ்கரன் மரண விசாரணையை மேற்கொண்டார். சடலமானது பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு பிரேதபரிசோதனை மேற்கொண்டபோது கயிறு கழுத்தை இறுக்கியதனால் மரணம் சம்பவித்ததாக தெரிவிக்கப்பட்டது.

தொடர்ந்து விசாரணைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது. (செ-60)

### ரூ.9 கோடி பெறுமதியான ...

யின் போதைப் பொருளை காங்கேசன்துறை கடற்படையினர் மீட்டுள்ளனர். மேற்படி சம்பவம் தொடர்பாக வடமாகாண கடற்படை கட்டளைத் தளபதி தெரிவித்துள்ளதாவது,

நேற்று யாழ்ப்பாணம் காங்கேசன்துறை கடற்பரப்பில் காங்கேசன்துறை கடற்படையினர் ரோந்து நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்த சமயம் கடலில் பையொன்று மிதந்துவந்துள்ளது. இவ்வாறு மிதந்து வந்த பையினை கடற்படையினர் சோதனையிட்டுள்ளனர். இதன் போதே பைக்குள் குறித்த ஹெரோயின் போதைப் பொருள் இருப்பது கண்டிறியப்பட்டுள்ளது.

இவ்வாறு கண்டுபிடிக்கப்பட்ட போதைப் பொருளின் மொத்த நிறையானது 9.9 கிலோ கிராம் நிறையுடையதாக காணப்பட்டதுடன் அதன் மொத்த பெறுமதியானது சுமார் 9 கோடி ரூபாக்கள் எனவும் கைப்பற்றப்பட்ட போதைப் பொருளானது 100வீதம் ஹெரோயின் என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ள தாகவும் வடக்கு கடற்படை கட்டளை தளபதி றியல் அட்மிரல் கே.கே.ஜே. டி.சில்வா தெரிவித்துள்ளார்.

இந்த ஹெரோயின் பொதியை வடக்கு கடற்பரப்பினூடாக கொழும்பிற்கு கொண்டு செல்ல போதைப் பொருள் கடத்தல் கும்பல்கள் முயற்சித்திருக்கலாம் என்றும், ஆனால் கடற்படையினரைக் கண்டதும் அதனை கடலில் வீசிவிட்டு தப்பிச் சென்றிருக்கலாம் எனக் கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

மேலும் கைப்பற்றப்பட்டுள்ள தடயப் பொருட்கள் காங்கேசன்துறைப் பொலிஸாரிடம் நீதிமன்ற நடவடிக்கைகளுக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளதாக கடற்படையினர் தெரிவித்துள்ளனர். (செ-4,15,60)

### யாழ். செம்மணியில் ...

நாட்டில் இடம்பெற்ற இறுதியுத்தத்தின்போது தமிழ் மக்கள் கொத்துக் கொத்தாக கொன்றொழிக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் நினைவு வாரம் நேற்றைய தினம் யாழ்.செம்மணி படுகொலை நினைவேந்தலுடன் ஆரம்பமாகியுள்ளது. நேற்று காலை பத்துமணியளவில் வடக்கு மாகாண சபையின் உறுப்பினர் சிவாஜிலிங்கத்தின் ஏற்பாட்டில் இந்த நினைவேந்தல் நிகழ்வு நடைபெற்றுள்ளது. இந்த நிகழ்வில் வடக்கு மாகாண சபையின் உறுப்பினர்களான திருமதி அனந்தி சசிதரன், பா.கஜதீபன், அ.பரஞ்சோதி, விந்தன் கனகரட்ணம், எதிர்க்கட்சி தலைவர் சி.தவராசா, வலி.வடக்கு பிரதேச சபையின் முன்னாள் உப தவிசாளர் எஸ். சஜீவன், பருத்தித்துறை நகர சபையின் முன்னாள் தவிசாளர் எஸ். சதீஸ், சி.தம்பிராசா உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இலங்கை அரசாலும் அதன் படைகளாலும் தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட இனப்படுகொலை நினைவு தினமாக முள்ளிவாய்க்கால் நினைவு தினம் வருடம் தோறும், மேமாதம் 12 ஆம் திகதி முதல் 18 ஆம் திகதி வரை உலகத்தமிழர்களால் அனுஷ்டிக்கப்படுகின்றது. அனைத்து உலக தமிழர்களின் துக்க நாளாக இருக்கும் இந்த நினைவு வாரத்தை அனுஷ்டிப்பதற்கு வடக்கு மாகாண சபை இந்த முறையும் தீர்மானித்துள்ளது. இதனடிப்படையில் முள்ளிவாய்க்கால் நினைவு வாரத்தின் ஆரம்ப நிகழ்வு நேற்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவின் ஆட்சிக் காலத்தில் அரங்கேற்றப்பட்ட செம்மணி படுகொலை நடைபெற்ற இடத்தில் நினைவஞ்சலிகளுடன் ஆரம்பமாகி சுடரேற்றி அஞ்சலிக்கப்பட்டிருந்தது.

இதன் தொடர்ச்சியாக இன்று 13 ஆம் திகதி வடமராட்சியிலும் நாளை 14 ஆம் திகதி ஈழத்தமிழர்களின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த வட்டுக்கோட்டை தீர்மானம் மேற்கொள்ளப்பட்ட இடத்திலும், அதேநாளன்று நவாலி சென் பீற்றர் தேவாலயத்தில் நடைபெற்ற படுகொலையை நினைவு கூரும் வகையிலும் அஞ்சலி நிகழ்வுகள் நடைபெறவுள்ளன, 15 ஆம் திகதி குழந்தைகள் உட்பட நூற்றுக்கணக்கான அப்பாவி மக்கள் படுகொலை செய்யப்பட்ட குமுதினி படுகொலை நினைவு தூபியிலும், 16 ஆம் திகதி வவுனியாவிலும், கிளிநொச்சியிலும், 17 ஆம் திகதி மன்னாரிலும்,

இறுதி நாளான 18 ஆம் திகதி அன்று முள்ளிவாய்க்காலில் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி விக்னேஸ்வரன் தலைமையில் நினைவு தின நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. இந்த நினைவு நிகழ்வில் பல்லாயிரக்கணக்கான மக்களும் அரசியல் கட்சி பிரதிநிதிகளும் கலந்துகொள்ளவுள்ளனர். இந்த நிகழ்வில் அரசியல் வேறுபாடின்றி அனைவரும் கலந்து கொள்ள முன்வர வேண்டும். இப்படுகொலைகள் அனைவற்றுக்கும் சர்வதேச விசாரணை அவசியம் எனவும் அஞ்சலியில் கலந்து கொண்டிருந்தவர்கள் வலியுறுத்தி இருந்தனர். (செ-4)

### பிக்கப் விபத்து ...

ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலையப் பிரிவில் உள்ள ஒட்டுசுட்டான் - நெடுங்கேணி வீதியில் பெரிய இத்திமடுப் பகுதியில் மகேந்திர பிக்கப் வாகனம் ஒன்று வேகக்கட்டுப்பாட்டை இழந்த நிலையில், வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இச் சம்பவத்தில் சம்பவ இடத்திலேயே இளைஞர் ஒருவர் பரிதாபமாக உயிரிழந்துள்ளதுடன், இருவர படுகாயம் அடைந்த நிலையில் மீட்கப்பட்டு முள்ளியவளை மாஞ்சோலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலையத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் நடைபெற்றுள்ளது.

நேற்று அப்பகுதியில் மழை பெய்து கொண்டிருந்த போது, அவ்வழியே வேகமாக பயணித்த மகேந்திர பிக்கப் வாகனம் வேகக்கட்டுப்பாட்டை இழந்துவிபத்திற்குள்ளாகநேரிட்டுள்ளது.

இச்சம்பவத்தில் முல்லைத்தீவு செல்வபுரம் கிராமத்தைச் சேர்ந்த சந்திய நந்தராசா ரொமின்சன் (வயது - 22) என்ற இளைஞனே சம்பவ இடத்திலே பரிதாபமாக உயிரிழுந்துள்ளார்.

விபத்து தொடர்பில் தகவல் கிடைத்து சம்பவ இடத்துக்கு சென்ற ஒட்டுசுட்டான் பொலிஸார் விபத்துச் குள்ளான வாகனத்தை மீட்டு பொலிஸ் நிலையத்திற்கு எடுத்துச் சென்றதுடன்,

மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (செ-15,281)

### அரசியல் தீர்வுக்கு ...

இலங்கைக்கான இரண்டு நாட்கள் உத்தியோகபூர்வ விஜயமொன்றினை மேற்கொண்டு, நேற்று முந்தினம் மாலை வருகை தந்த, இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி அவர்களுக்கும், தமிழ் தேசியக் கூட்டமைப்பினருக்குமிடையிலான சந்திப்பொன்று நேற்றுமாலை 6மணியளவில் கட்டுநாயக்கவில் இடம்பெற்றது.

இச்சந்திப்பில் எதிர்க்கட்சித் தலைவரும், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான பாராளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன், பாராளுமன்ற உறுப்பினர்கள் மாவை சேனாதிராஜா, தர்மலிங்கம் சித்தார்த்தன், செல்வம் அடைக்கலநாதன், எம்.ஏ. சுமந்திரன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிறேமச்சந்திரன் ஆகியோர் கலந்துகொண்டிருந்ததோடு, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியுடன் இந்திய வெளியுறவுச் செயலர் எஸ்.ஜெய்சங்கர், இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர், இந்திய துணை உயர்ஸ்தானிகர் உள்ளிட்ட அதிகாரிகளும் கலந்துகொண்டிருந்தார்கள்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் இரா.சம்பந்தன் மேற்படி சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையில்,

அரசியலமைப்பு மாற்றம் சம்பந்தமான நடவடிக்கைகள் மிகவும் மெதுவாகவே செல்கின்றது. 2016 ஆம் ஆண்டிற்குள் தீர்வு வருமென்று எதிர்பார்த்திருந்தோம். இந்த வருடத்திற்குள்ளாவது ஒரு தீர்வு வரவேண்டும். வடகிழக்கு தமிழர்கள் பாரம்பரியமாக, பெரும்பான்மையாக வாழ்ந்த இடங்கள். இங்கு சமஸ்டி அமைப்பின்கீழ் ஒரு நியாயமான தீர்வு வரமுடியும். அதிகாரப் பரவலாக்கல் சம்பந்தமாக கூறப் போனால் ஒரு கையால் கொடுத்துவிட்டு மறு கையால் எடுக்கும் நிலைமையையே காணமுடிகின்றது.

ஆகவே, குறைந்தது இந்தியாவில் இருக்கக்கூடிய காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களாவது இருக்க வேண்டும் என்று தெரிவித்தார்.

அத்துடன் காணாமல் போனவரகள் விடயம், இராணுவம் ஆக்கிரமித்துள்ள காணிகளை விடுவித்தல், பயங்கரவாத தடைச்சட்டத்தின்கீழ் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் விடுதலை, இளைஞர் யுவதிகளின் வேலையில்லாப் பிரச்சினை என்பன தொடர்பில் எடுத்துக் கூறியதோடு, இந்தியா பிரத்தியேகமாக வடக்கு கிழக்குக்கு பெரியளவில் முதலீடுகளைச் செய்து வேலையில்லாத் திண்டாட்டத்தை தீர்க்க உதவ வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

இது தொடர்பில் கருத்துக் கூறிய இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி இவைகள் சம்பந்தமாக நாம் ஏற்கெனவே அரசாங்கத்திடம் கூறியிருக்கின்றோம்.

இலங்கையின் தற்போதய அரசாங்கம் மிகவும் மெதுவாகவே நகர்வதை நாங்கள் உணர்கின்றோம். அரசாங்கம் அரசியல் தீர்வு விடயத்தில் தாமதித்துக் கொண்டிருந்தால் சர்வதேசத்துடன் இணைந்து நாமும் அழுத்தங்களைக் கொடுப்போம். இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கு பெரியளவில் உதவ இருக்கின்றோம். இது சம்பந்தமாக அண்மையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் விரிவாகக் கதைத்துள்ளேன். அத்துடன் மேற்குறித்த விடயங்கள் தொடர்பில் இலங்கை அரசுமீது அழுத்தங்களைக் கொடுத்து அவற்றுக்கு தீர்வுகாண்பதற்கு முயற்சிக்கின்றோம். நம்பிக்கை யோடு காத்திருங்கள் என இந்திய பிரதமர் த.தே. கூட்டமைப்பினரிடம தெரிவித்துள்ளார். (செ-11)

### வடக்கு முதல்வரை ...

சிலர் மற்றும் சிறுபான்மை கட்சிகள் சார்பில் எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன், வடமாகாண முதலமைச்சர் சி.வி. விக்கினேஸ்வரன், அமைச்சர் பௌசி, இந்திய பிரதமருடன் ஜெய்சங்கர் ஆகியோரும் கலந்து கொணடனர்.

இதன்போது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்தியப் பிரதமரிடம் வடமாகாண முதலமைச்சரும் வந்திருக்கிறார் என அவரை அறிமுகப்படுத்திய போது, இந்திய பிரதமர், நான் ஏற்கெனவே அவரை சந்தித்துள்ளேன். அவருடன் பல விடயங்கள் பேசினேன். அவை ஞாபகம்இருக்கிறது என மைத்திரியிடம் பதிலளித்துள்ளார். (செ-11)

### திருக்குறளை தமிழி ...

போது மோடி கூறி இறுதியாக நன்றி தெரிவித்து தனது உரையை முடித்தார்.

எனினும் மோடிக்கு முன்பாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் உரையாற்றினார்கள். ஆனால் தமிழில் ஒரு வார்த்தை கூட பேசவில்லை.

தமிழ் மக்கள் கூடியிருந்த அந்த இடத்தில் இலங்கை பிரதமரும், ஜனாதிபதியும் கூட தமிழில் பேசாத நிலையில், இந்தியப் பிரதமர் தமிழின் பெருமை பற்றியும், இந்து சமயம் பற்றியும், இலக்கியக்கதைகள், பாடல்கள் மற்றும் திருக்குறள் என அனைத்தும் தமிழில் பேசியமை மலையக மக்களிடத்தில் பெரும் வரவேற்பை பெற்றுள்ளது. (செ11)

## நாடு முழுவதும் அம்புலன்ஸ் சேவை

இந்திய அரசாங்கத்தால் வழங்கப்பட்டுள்ள 1990 அம்புலன்ஸ்கள் நாடுமுழுவதும் விஸ்தரிக்கப்ப டும் என இந்திய பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

நேற்று நோர்வூட் மைதானத்தில் இடம்பெற்ற பொதுக்கூட்டத்தில் கலந்துக்கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்திய அரசாங்கத்தால் வழங்கப்பட்டுள்ள 1990 அம்புலன்ஸ்கள் தென் மற்றும் மேல் மாகாணங்களில் மாத்திரம் செயற்பட்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

## இந்.பிரதமரின் பாதுகாப்புக்கான ஹெலியில் கோளாறு

இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் பாதுகாப்பிற்காக வருகை தந்த உலங்கு வானூர்தியில் (ஹெலிகொப்டர்) இயந்திர கோளாறு ஏற்பட்டுள்ளது.

இதனால் குறித்த வானூர்தி கண்டி அஸ்கிரிய பொலிஸ் மைதானத்தில் தரையிறக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இயந்திர கோளாறினை சீர் செய்வதற்கு இந்திய விமான படை அதிகாரிகள் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்.


இந்தியாவிலிருந்து பிரதமரின் பாதுகாப்பிற்காக வருகை தந்த குறித்த இரு வானூர்திகளில் ஒன்றே இவ்வாறு இயந்திர கோளாறு காரணமாக கண்டியில் தரையிறக்கப்பட்டுள்ளது.

மேலும், குறித்த வானூர்தியினை சீர் செய்ய இந்திய விமானப்படையினருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளதுடன், பலத்த பாதுகாப்பிற்கு மத்தியில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(செ-11)

### நினைவேந்தலை...

தேசிய டெங்கு ஒழிப்பு நாளாக அரசா ங்கம் பிரகடனம் செய்திருக்கலாம் என்ற தகவல்களும் வெளிவரத் தொடங்கியு ள்ளது.(ந)

## டிக்கோயா மருத்துவ ...



இந்திய அரசின் அன்பளிப்பாக ஆயிரத்து 200 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட பூரண உபகரண வசதிகளுடன் கூடிய ஹட்டன் டிக்கோயா ஆதார மருத்துவமனை இந்திய பிரதமர் நரேந்திர மோடியால் நேற்று நண்பகல் மக்களிடம் கையளிக்கப்பட்டது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரின் அழைப்பின் பேரில் நிகழ்வில் கலந்துகொண்ட இந்திய பிரதமர் நினைவுப்பலகையை திரைநீக்கம் செய்து புதிய கட்டிடத் தொகுதியை திறந்துவைத்தார்.

இதன் பின்னர் ஹட்டன், நோர்வூட் விளையாட்டரங்கில் இடம் பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்ட இந்திய பிரதமர் நரேந்திர மோடி மக்களுக்கு முன்பாக உரையாற்றினார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் நிகழ்வில் உரையாற்றினார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன, அமைச்சர்களான அர்ஜுன ரணதுங்க, பீ.திகாம்பரம், மனோ கணேசன் ஆகியோரும், இராஜாங்க அமைச்சர் வீ. இராதாகிருஷ்ணன், முன்னாள் அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் ஆகியோர் உள்ளிட்ட மாகாணத்தின் மக்கள் பிரதிநிதிகள் பலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். (செ-11)

## கைதான இருவருக்கு...

தவணையின் போது சமர்ப்பிக்கப்படும் எனவும் ஊர்காவற்றுறை பொலிஸார் ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றில் தெரிவித்துள்ளார்கள். இந்நிலையில் குறித்த வழக்கின் சந்தேக நபர்கள் இருவரையும் விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்ற பதில் நீதவான் இ.சபேசன் உத்தரவிட்டுள்ளார்.


கடந்த ஜனவரி மாதம் ஊர்காவற்றுறை கரம்பன் பிரதேசத்தில் வீட்டில் தனித்திருந்த ஏழு மாத கர்ப்பிணி பெண் ஒருவர் இனந்தெரியாதவர்களால் கொடூரமாக கொலை செய்யப்பட்டிருந்தார். இச் சம்பவத்தை அடுத்து இருவரை சந்தேகத்தின் அடிப்படையில் பொலிஸார் கைது செய்திருந்தனர். இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களுக்கு எதிராக ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றில் வழக்கு விசாரணைகள் இடம்பெற்று வருகின்றது. இந்நிலையில் நேற்றைய தினம் குறித்த வழக்கானது விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்ட போதே மேற்கண்ட தகவல்கள் பரிமாறப்பட்டிருந்தது.

நேற்றைய வழக்கு விசாரணையின் போது மன்றில் இவ் குற்றத்தை விசாரணை செய்யும் ஊர்காவற்றுறை பொலிஸார் இச் சம்பவம் தொடர்பான அறிக்கையை தெரிவித்திருந்தனர். இதன்படி இவ் குற்றச் செயல் தொடர்பாக தமக்கு சில உண்மைகள் தெரியும் என கிளிநொச்சி நீதிமன்றில் குற்றவாளியொருவர் தெரிவித்திருந்த நிலையில் அவரது வாக்கு மூலமானது நீதிமன்ற கட்டளைகளினூடாக பதிவு செய்யப்பட்டிருந்தது. அதே போன்று இவ் வழக்கு தொடர்பில் தமக்கும் சில உண்மைகள் தெரியும் என சிறைக்குள் சந்தேக நபர்களுடன் பேரம் பேசியிருந்த நபரது வாக்கு மூலங்களும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இவ்வாறு பதிவு செய்யப்பட்ட வாக்கு மூலங்கள் தொடர்பில் விசாரணைகள் மேற்கொளளப்பட்டு வருகின்றது. இவ் விசாரணைகள் தொடர்பான அறிக்கைகள் அடுத்த வழக்கு தவணையின் போது மன்றில் சமர்பிக்கப்படும் என பொலிஸார் தெரிவித்தனர். இதனை தொடர்ந்து குறித்த வழக்கின் சந்தேகநபர்களான இருவரையும் எதிர்வரும் 22ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்ற பதில் நீதவான் இ.சபேசன் உத்தரவிட்டார். (செ-4)

7ம் அணி அனுமதிகள் முற்றுப்பெற்றன
8ம் அணியில் இணைய முந்துங்கள்!
O/L உடன் மாதம்
25,000/- சம்பாதிக்க!
நூற்றுக்கணக்கான மாணவர்களுக்கு பயிற்சியுடன் வேலைவாய்ப்பை வழங்கி வெற்றிநடை போடும்
Diploma in Tourism & Hotel Management 8ம் அணி
3 மாத இலவச ஆங்கில வகுப்புடன்
புதிய பிரிவு ஆரம்பம் மே 15 திங்கள் காலை 10மணி
பயிற்சிக் காலத்திலேயே பணம் சம்பாதிக்கலாம்
யாழ் - கொழும்பு முன்னணி ஹொட்டேல்களில் வேலைவாய்ப்பு
வெளிநாடு செல்ல விரும்புவோருக்கு விசா ஏற்பாடு
அனுமதிகளுக்கு:
077 3616 798 021 222 0011
SIKARAM ACADEMY
Business · Hospitality · English
SCHOOL of HOSPITALITY
175,முதலாம் குறுக்குத்தெரு (வேம்படி வீதி),யாழ்ப்பாணம்.
(சி-8530)

After O/L or A/L ...
Certificate in Computer Network Engineering
+
இலவச PC HARDWARE பயிற்சி நெறி



Next Batch : 20.05.2017
Duration: 2 Months
iCS EDUCATION
77, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
(பெருமாள்கோவில் அருகாமையில்)
021-7306000, 076-7013060
(சி-8550)

## ரணில் இன்று...

மைத்திரி விக்கிரமசிங்க ஆகியோர் இன்று சீனாவுக்கு விஜயம் செய்கின்றனர்.

30 நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொள்ள உள்ள இந்த வட்ட மேசை கலந்துரையாடல் சீனாவின் பீஜிங் நகரில் இடம்பெற உள்ளது.

சீன ஜனாதிபதியின் எண்ணக்கருவில் உருவான **ஒரே பிராந்தியம் ஒரே பாதை** என்ற தொனிப்பொருளில் இம்மாநாடு இடம் பெற உள்ளது.

சிறப்பு பொறுப்பு அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம, நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் ரவூப் ஹக்கீம், சட்டம் மற்றும் ஒழுங்கு மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சர் சாகல ரத்நாயக்க, சர்வதேச வர்த்தகம் மற்றும் மூலோபாய அமைச்சர் மலிக் சமரவிக்கிரம, பிரதமரின் செயலாளர் சமன் எக்கநாயக்க உள்ளிட்டவர்கள் பிரதமருடன் இந்த விஜயத்தில் கலந்து கொள்ள உள்ளனர். (செ-11)

## இரும்பு பெட்டக...

குறித்த மாணவி கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் பாடசாலை செல்லும் போது கடத்தி செல்லப்பட்டு கூட்டு பாலியல் வன்புணர்வு செய்யப்பட்டு படுகொலை செய்யப்பட்டிருந்தார். இச் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட பன்னிரண்டு சந்தேகநபர்களில் பத்தாவது மற்றும் பன்னிரண்டாவது சந்தேக நபர்களை சட்டமா அதிபர் வழக்கில் இருந்து விடுவித்திருந்தார். அத்துடன் பதினொராவது சந்தேகநபர் சட்டமா அதிபரது உத்தரவின் அடிப்படையில் அரச தரப்பு சாட்சியாக மாற்றப்பட்டிருந்தார்.

இவ்வாறான நிலையில் குறித்த வழக்கல எதிரிகளாக முதல் ஒன்பது சந்தேக நபர்களுக்கும் எதிராக சட்டமா அதிபர் வழக்கு தாக்கல் செய்திருந்தார். இவ் வழக்கு தாக்கல் தொடர்பான குற்றப் பகிர்வு பத்திரம் அதனுடான ஆவணாங்களை சட்டமா அதிபர் யாழ்.மேல் நீதிமன்றுக்கு கடந்த திங்கட்கிழமை தபாலி ட்டிருந்தார்.

இவ்வாறு தபாலிடப்பட்ட குற்றப் பகிர்வு பத்திரமானது நேற்றைய தினம் யாழ். மேல் நீதிமன்ற பதிவாளருக்கு கிடைக்கப்பட்டிருந்தது.

இந் நிலையில் வித்தியா கொலை வழக்கினை கொழும்பு மேல் நீதிமன்றுக்கு மாற்றி அங்கே வைத்து ரயல் அட் பார் முறையில் வழக்கு நடத்துவதற்கு உயர்மட்டங்களில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கூறப்பட்டு வந்த நிலையில் குறித்த குற்றப் பகிர்வு பத்திரம் மற்றும் அதனுடான ஆவணங்களை யாழ்.மேல் நீதிமன்ற இரும்பு பெட்டகத்தில் பாதுகாப்பாக வைக்குமாறு யாழ். மேல் நீதி மன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் பதிவாளருக்கு பணிப்புரை பிறப்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-4)

## "நான் வேண்டாதவன்...

தினம் இலங்கைக்கு விஜயம் செய்திருந்தார். அரச தலைவர்களை சந்தித்த அவர்,

மலையகத்தில் வைத்தியசாலை திறப்பு விழாவிலும் கலந்து கொண்டு வைத்தியசாலையை திறந்தும் வைத்திருந்தார். இந்த நிலையில் நாடு திரும்பும் வேளையில் கட்டுநாயக்க விமான நிலையத்தில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பினரையும் சந்தித்து கலந்துரையாடியிருந்தார். இதற்கு முன்னர் இந்திய பிரதமரின் இராப்போசன விருந்து பசாரத்தில் கலந்து கொள்வதற்காக வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் அழைக்கப்பட்டிருந்தார்.

இந்த நிலையிலேயே த.தே.கூட்டமைப்புடனான சந்திப்பில் தங்களுக்கு அழைப்பில்லையா என முதலமைச்சரிடம் ஊடகவியலாளர்களால் நேற்றைய தினம் கேட்கப்பட்டது. இதன்போதே நான் வேண்டாதவன் தானே என்னை கூப்பிடவில்லை என அவர் பதிலளித்துள்ளார். மேலும், இரவு போசனத்திற்கு அழைத்திருந்தார்கள் நான் போயிருந்தேன். எனக்கு பக்கத்தில் வெளிவிவகார அமைச்சின செயலாளர் ஜெயசங்கர் உடன் இருந்தார். வடக்கு மாகாணத்தை பொறுத்தவரையில்,

மேலும் அதிகமான காணிகளை சுவீகரிக்காது தற்போது இருக்கும் விமான நிலையத்தை மாத்திரம் கொண்டு வர்த்தக விமான நிலையமாக மாற்றுமாறு கோரியிருந்தேன். காங்கேசன்துறை துறைமுகம் விஸ்தரிப்பு தொடர்பில் பேசப்பட்டது தலைமன்னார் தனுஸ்கோடி கப்பல் சேவையை மீள ஆரம்பிக்குமாறும் கோரிக்கை முன்வைத்திருந்தேன் என முதலமைச்சர் தெரிவித்தார். (செ-4)

## நேற்று மாலை...

வதற்காக இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி நேற்றுமுன்தினம் மாலை இலங்கைக்கு வருகை தந்திருந்தார்.

இதையடுத்து நேற்றுக் காலை பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் வெசாக் தின நிகழ்வுகளை ஆரம்பித்து வைத்து பிற்பகல் மலையகத்திற்கு சென்றார்.

அங்கு இந்திய நிதியுதவியுடன் நிர்மாணிக்கப்பட்ட கிளாங்கன் வைத்தியசாலையை திறந்து வைத்து, நோர்வூட் மைதானத்தில் கூட்டத்திலும் மோடி கலந்து கொண்டிருந்தார்.

குறித்த கூட்டத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் முக்கிய அரசியல் பிரமுகர்கள் கலந்து கொண்டிருந்தனர். தொடர்ந்து அடை மழையிலும், தலதா மாளி கைக்குச் சென்று இந்தியப்பிரதமர் மோடியும், ஜனாதிபதியும் வழிபாடுகளில் ஈடுபட்டனர்.

மேலும், இறுதியாக த.தே.கூட்டமைப்புடன் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் கலந்துரையாடலிலும் மோடி ஈடுபட்டிருந்தார்.

இதன் பின்னர் தனது உத்தியோகபூர்வ விஜயத்தை முடித்துக்கொண்டு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இந்தியாவிற்கு திரும்பியுள்ளனர். (செ-11)

## திருக்குறளை தமிழில்...

க்கின்றேன் என ஆரம்பித்தார் மோடி.

2000 ஆண்டுகளுக்கு முன் தமிழ் அறிஞர் கணியன் பூங்குன்றனார் பாடிய யாதும் ஊரே.. யாவரும் கேளிர்... என்ற பாடல் வரிகளை படித்துக்காட்டியுள்ளார்.

நீங்கள் அனைவரும் தமிழ் தாயின் பிள்ளைகள், தமிழ் தாய் என தமிழின் பெருமையைப்பற்றி கூறினார்.

ஜாதக கதைகள் உட்பட பல்வேறு பௌத்த நூல்கள் தமிழ் மொழியின் தந்தையாக அகத்தியரை குறிப்பிடுகின்றன. கண்டியைச் சேர்ந்த நாயக்க அரச பரம்பரையினர் மதுரை மற்றும் தஞ்சாவூர் நாயக்க மன்னர்களிடம் பெண் கொடுத்து பெண் எடுத்தார்கள் என்றும் நினைவூட்டினார்.

திருவள்ளுவர் கூறிய ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா ஊக்கம் உடையான் நுழை என்ற திருக்குறளையும் இதன்

23ஆம் பக்கம் பார்க்க...

## பொருத்து வீடுகள்..

தாக முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். நேற்றைய தினம் முதலமைச்சர் அலுவலகத்தில் ஊடகவியலாளர்களால் கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்ட்வாறு தெரிவித்தார்.

வடக்கு மாகாண மக்களுக்கு என 6 ஆயிரம் பொருத்து வீடுகளை அமைப்பதற்கு அமைச்சரவை அங்கீகரித்துள்ளதாக கூறியுள்ளார்கள். எனவே நான் கூறியிருந்தேன், எங்களிடம் கேட்காமல் இவ்வாறு வீடுகள் அமைப்பதை நிறுத்துங்கள் என, அதற்கு அவர்கள் கூறியிருந்தார்கள், பாராளுமன்ற உறுப்பினர்களான சிவமோகன், டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் உடனடியாக மக்களுக்கு வீடுகள் தேவைப்படுவதாக கூறியுள்ளார்கள். ஆகவே அவர்களின் கோரிக்கை தொடர்பில் பதிலளிக்க வேண்டிய தேவை உண்டு என கூறினார்கள்.

எனினும் எங்களிடம் பொறியியலாளர்கள் உள்ளார்கள், அவர்களை கொண்டு திட்டமிட்டு வீடுகளை எவ்வாறு வடக்கில் அமைக்கலாம் என திட்டமிட முடியும். இது தவிர பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் எங்களுக்கு வீடமைப்பு குறித்து திட்டங்களை தந்துள்ளார்கள். ஆகவே இவற்றை எல்லாம் பரிசீலிக்காது தான்தோன்றிதனமாக நடவடிக்கை எடுக்க வேண்டாம் என கூறியிருந்தேன். அதற்கு இது அமைச்சரவை தீர்மானம் எனவும் அதனால் ஒன்றும் செய்ய முடியாது எனவும் பதில் கூறப்பட்டது. இருந்த போதிலும், நான் யாழ்ப்பாணம் சென்றவுடன் எமது அமைச்சரவையுடன் பேசி இதற்கு எதிர்ப்பு தெரிவிப்போம் என அவர்களிடம் கூறியிருந்தேன் என முதலமைச்சர் இதன்போது தெரிவித்திருந்தார். (செ-4)

விற்பனைக்கு உண்டு
நல்ல நிலையிலுள்ள தகரப் பந்தல், கதிரைகள் உடன் விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு:-
0778294927
(9000)

காணி, வீடு வாங்க விரும்புபவர்கள் கீழ்க் காணும் தொலைபேசியுடன் தொடர்பு கொள்ளவும்.
0772844970
(8993)

உடனடி வேலை வாய்ப்பு
V2 TRAVELS



UK-550/=Kg
விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
நீண்ட காலமாக வேலை தேடுபவரா?
எமது அலுவலகத்திலேயே இலவசமாக கற்பித்து வேலையும் கொடுக்கின்றோம்
5,000/= (பயிற்சியின் போது) //15,000/= (பயிற்சியின் பின்னர்)
தகுதி :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
இதுவரை சரியான வாய்ப்புக்கள் மற்றும் தொழில் அனுபவங்கள் கிடைக்காத வாழ்கையில் முன்னேற துடிக்கும் கடின உழைப்பாளிகளை எதிர்பார்கின்றோம்.
மாற்றுத்திறனாளிகளும் விண்ணப்பிக்கலாம்.
49A சப்பல்லேன்,யாழ்ப்பாணம். (யாழ் பொது நூலகம் முன்னால்)
0768226236
(சி-8497)

வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை
070 330 5500
அண்ணா அன் கோ
976,கே.கே.எஸ் வீதி,நாச்சிமார் கோவிலடி
021 221 5656 யாழ்ப்பாணம் annalk.com
லண்டனுக்கு (UK) 5kg க்கு மேல் மிகக் குறைந்த கட்டணம்
பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும்,குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிட எம்மை நாடுங்கள்.
யாழ்ப்பாணம் | நவாலி | சாவகச்சேரி | மீசாலை | மல்லாவி
முல்லைத்தீவு | கிளிநொச்சி | திருகோணமலை | வவுனியா
(சி-8534)

யாழ் மதர் கெயார்
Dental Unit
Reg.No.#PV85754
Yarl Mother care
நவீன உபகரணங்களின் உதவியுடன் விசேட வைத்திய நிபுணர்களினால்
கிளிப் (Clip) போடுதல், நிரந்தர பல்கட்டுதல்
உட்பட உயர்தர சேவைகள்
• பல் வெண்மையாக்கல் • பல்,வாய் வைத்தியசேவை
• வேரடைப்பு • சிறுவர் பற் சிகிச்சை
• மிதப்புப்பல் சீராக்கல் • மற்றும் பல நவீன சேவைகள்
(சி-8539)



514/18, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
யாழ்.போதனா வைத்தியசாலை முன்பாக)
Tel : 021 492 7308
Mob : 077 375 4490, 077 220 2769

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.05.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.